

அணையாத தலைவனுக்கு - அகவை தின வாழ்த்து.



எங்கள் நிலம் மீட்டிடவே
நின்ற களம் அத்தனையும்
வென்ற கதை உமது...

காலமும் ஈழமும் உன் காலடியில் கரிகாலா...
ஈழத்தில் பிறந்தது எமக்குப் பெருமை,
நீவீர் பிறந்தது ஈழப் பெருமையன்றோ...

புகையும் பகை மூட்டமாய்
புலியின் குகை வாட்டமாய்
புகுவோம் களம் நாட்டமாய்
காடையர் கூட்டம் ஓட்டமாய்...
கண்ணசை தலைவா களம்புகிறோம்.

மண்ணும் மலரும் பனை மரக்காடும்
கத்தும் கடலும் வீசும் காற்றும்
நித்தம் பேசும் சுத்தத் தமிழும்
மீண்டும் மீண்டும் கேட்கிறது – உம் வரவு
வேண்டும் என்றே நீள்கிறது...

எங்களோடு சேர்ந்து சிங்களமும் உம்மை விரும்புவது
தான் உலகத்தமிழரை உயர்த்தி பிடிக்கிறது.

வா தலைவா...
அணையாத தலைவனுக்கு அகவை தின
வாழ்த்துக்களோடு....

ஈழமகள் அபிஷேகா

Century 21 Innovative Realty Inc. Brokerage
Office: 416-298-8383 | Fax: 416-298-8303
3-2250 Markham Rd., Toronto ON. M1B 2W4

Karan Thurainayagam
Sales Representative
Direct: 416-707-4350
karant991@yahoo.ca



வரலாறு எனது வழிகாட்டி!
– தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் –

எனது மக்களின்
விடுதலைக்காக...

நூல் அறிமுக நிகழ்வு



26.11.2022
சனிக்கிழமை
மாலை 5.00 மணி

METROPOLITAN CENTRE,
3840, FINCH AVE EAST
SCARBOROUGH ON., M1T 3T4
(KENNEDY & FINCH

அகவை 68
மாபெரும் எழுச்சி விழா

தலைவன்
பிறந்தநாள்
அதுவே தமிழன்
நிமிர்ந்த நாள்

கனடா ஈழமுரசு மற்றும்
மக்களின் ஆதரவோடு

மேலதிக தொடர்புகட்கு:
(416) 894 1000


நவ -27
மாவீரர் நாள்

தமிழினத்தின் அடையாளம்!



தமிழினத்தின் அடையாளம்!

“பிரபாகரன்” வெறும் பெயரல்ல, தமிழினத்தின் அடையாளம்! தமிழினத்தின் மீதும்தமிழ் மண்ணின் மீதும் சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்திருந்த அடக்குமுறைகள் சொல்லிலடங்காதவை. அதன் வரலாறு என்பது தமிழரின்வரலாற்றில் இரத்தக்கறைகளால் எழுதப்பட்டவை. சிங்கள இராணுவம் தமிழர் தேசத்தில் செய்த அட்டூழியங்களை, அடக்குமுறைகளை இனியும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என சீற்றம் கொண்டு எழுந்த மாவீரனேதமிழினத்தின் தேசிய தலைவன் பிரபாகரன். தமிழினத்தின் மேல் கொண்ட தீரா அன்பினால், தமிழ் நிலத்தின் மீதான மாறா பற்றினால், பழந்தமிழர் வீர மரபின் தொடர்ச்சியாக அறநெறியும், போர் வழியும் இணையும் இடத்தில் நின்று தமது மக்கள் அனுபவித்த தாங்க இயலாத கொடுமைகளுக்காக ஆயுதம் ஏந்தியவர் அவர்.

தன்னினத்தின் விடிவு தமிழீழம் பிறப்பதில்தான் இருக்கிறது என்கிற கொள்கையி ல் முழுமூச்சாக செயற்பட்ட ஒப்பற்ற மாவீரன் தேசிய தலைவர் பிரபாகரன். ஒரு இனத்தை இன்னொரு இனம் ஒடுக்குமானால் அந்தக் கட்டமைப்பின் மீது ஒடுக்கப்பட்ட இனம் சீற்றம் கொள்வது இயல்பு. அந்த சீற்றத்தை ஒருமுகப்படுத்தும் வடிவமாக ஒரு தலைவன் முன்வருவான் என்பதே உலகப் போராட்ட வரலாறுகளின் விதியாக இருக்கிறது. அந்த விதிக்கு உண்மையான சொந்தக்காரனாக பிறப்பெடுத்தவர் தமிழீழ தேசிய தலைவர் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. தமிழினத்தின் நிலம் மீட்கவும் தமிழினத்தின் விடுதலைக்காகவும் சமர் புரிந்த மாவீரர்களை வழிநடத்தி, பெரும் ஆயுத பலம் கொண்ட சிங்கள ராணுவத்தை விரட்டிய வெற்றி நாயகன் அவர்.

காலாகாலமாக தமிழர்கள் வாழ்ந்த மண்ணில் உரிமையுடனும், நிம்மதியுடனும் அவர்கள் வாழவேண்டுமென்பதற்காக ஆயுதம் ஏந்தியவர் தேசிய தலைவர். எவன் பெயரைக் கேட்டதும் இனத்தின் எதிரி அஞ்சி நடுங்குகிறானோ அவனே தலைவன் என்பதற்கு அமைய வீரத்தின் தலைமகனாக வாழ்ந்தவர். நிறைய மானம், நிறைய வீரம், நிறையத் துணிவு, பணிவு, தெளிவு, கருணை, அன்பு, அறிவு, ஆற்றல்,

அடக்கம், பண்பு, மாண்பு, ஈகம், கனவு, ஒழுக்கம் - இவை எல்லாம் வைத்து ஒருமனிதனைப் இறைவன் படைத்தால் அவர் தான் தேசிய தலைவர். அத்தோடு உலகின் பண்பாளர்கள் மதிக்கும் நற்பண்புகளை கொண்ட தன்னாட்சி பிரதேசத்தை கட்டியெழுப்பிய மகத்தான தலைவன் என்பதுடன் கல்வி, விவசாயம், தொழிநுட்பம் என அனைத்து துறைகளிலும் தமிழர் தாயகத்தை ஏனைய நாடுகளுக்கு குறிப்பாக சிங்கள தேசத்துக்கு சவால் விடும் வகையில் வளர்த்தெடுத்த மிகப்பெரிய அறிவுஜீவி அவர்.

தமிழர்களும் தமிழ் மண்ணும் எவருக்கும் அடிபணியக்கூடாது என்பதை தன்னுடைய வாழ்க்கை மூலம் வாழ்ந்து காட்டிய மகத்தான ஒரு தலைவர் அவர். “எதிரிக்கு எதிரி நண்பனுக்கு நண்பன்” என்ற வீரனுக்கே உரித்தான பண்புடன் ஸ்ரீலங்காவையும் சர்வதேசத்தையும் கையாண்ட அவருடைய பண்பு உலகில் வாழ்ந்த உன்னதமான வீரத் தலைவர்களின் பட்டியலில் அவரையும் இணைத்திருக்கிறது. சர் தேச சமூகமே வியக்கும் அளவுக்கு அவருடைய தலைமைத்துவ பண்பு தமிழர்களுக்கு உலகமெங்கும் ஒரு மரியாதையை ஏற்படுத்தி கொடுத்தது என்றால் மிகையாகாது. இன்று உலகமெங்கும் தமிழர்கள் நிமிர்ந்து நிற்கிறார்கள் என்றால் அதற்கு பின்னால் இருக்கும் நாமம் தேசிய தலைவர் “பிரபாகரன்” என்பதை எவரும் மறுக்கமுடியாது. அதுவே நிதர்சனமாகும். இன்று உலகில் வாழ்கின்ற இனங்கள் தங்களுடைய தலைவர்கள் என்று பலரை மகுடம் சூட்டி வாழ்ந்துகொண்டிருந்தாலும், ஈழத்தமிழர்கம் உலகெங்கும் வாழும் தமிழர்களும் தாங்கள் நெஞ்சை நிமிர்த்தி எங்கள் தலைவன் என்று கூறும் ஒரே ஒரு தலைவராக இருப்பது தேசிய தலைவர் மாத்திரமே. காரணம், தலைவன் என்று கூறுவதற்கு உரிய அனைத்து பண்புகளை கொண்டவராகவும் அந்த பண்புகளுக்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவராகவும் தமிழர்களுக்கு தெரிந்த ஒருவர் தேசியத் தலைவர் மாத்திரமே. அந்த அடிப்படையில் அவரின் இலட்சியம் ஒரு நாள் வெல்லும். அவரின் உருவம் என்றும் தமிழினத்தின் இதயங்களை ஆழ்ந்துகொண்டே இருக்கும். அந்த அடிப்படையில் அவருடைய இலட்சிய கனவு மெய்ப்படும் வகையில் அவருடைய பாதையை தெரிவு செய்து பயணிக்கும் இலட்சக்கணக்கானவர்கள் இந்த உன்னதமான நாளில் உறுதி பூணவேண்டுமென “ஈழமுரசு“ அறை கூவல் விடுப்பதுடன், தமிழீழ தேசிய தலைவரின் 68 ஆவது அகவைக்கு தன்னுடைய இதயம் கனிந்த வாழ்த்தை தெரிவிப்பதில் “ஈழமுரசு” பெருமகிழ்ச்சி கொள்கிறது.

ஈழமுரசு

தமிழீழத் தேசிய மாவீரர் நாள் 2022

1st Mortgage, HomeEquity Line of Credit,
2nd & 3rd Mortgages, Refinance &
Private Mortgage
And For All Other Mortgage Needs

Jey Rasathurai BBA (Hon), AMP
Team Leader/Mortgage Broker
416-624-4843
1504 Markham Rd, Toronto.ON M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
MORTGAGE CLINIC
www.mortgageclinic.com

வியாழன் தோறும் CANADA EELAMURASU

ஈழமுரசு

முரசு: 24 நவம்பர் 24 - நவம்பர் 30, 2022 இதழ்: 349

HOMELIFE / CHAMPIONS REALITY INC.
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
SINCE 1988

Realtors Wanted
FLEXIBLE SPLIT
OR FLAT FEE



UTAYAN PONNUTHURAI
BROKER OF RECORD, Bsc (Hons)
HOMELIFE
HIGHER STANDARDS
D: 416 505 2120 B: 416 281 8090



Life Insurance?
It's for those you **LOVE** the most!

- RESP/RRSP
- Disability
- Investments for Children

ஆயுட்காப்புறுதி
Call: 416-704-8074

Excellent Rates!
Insurance Ajay
Are you Insured?



கடன் தொல்லையா?
Bankruptcy மட்டுமே தீர்வு அல்ல
SPERGEL
GET DEBT FREE
WITHOUT BANKRUPTCY
For 30 years we have helped more than 55,000 people become debt free.
நிரந்தரமான குறுநிலைகளிலும் நிலையான விடியலை
கரன் சிவநாதன் (HARAN Sivanathan)
Tel: 416 498 4326 / 416 803 8830
msi Spergel Inc., Licensed Insolvency Trustee
200 Yorkland Blvd., Suite 1100,
North York On M2J 5C1
Email: hsivanathan@spergel.ca | www.spergel.ca
Certified Insolvency Counsellor
Federally licensed

Bringing Your Dreams To Life!
மனைவி மனை சார்ந்த நிலமும் மகிழ்வு மக்கள் பெற்ற விருப்பும்
மனமும் மனிதர் மகோன்மன்
Mahesan Subramaniam
416-816-0141
maheshsubra.ms@gmail.com
eXp REALTY
Free Home Evaluation with No Obligation

LONGO LAWYERS
Our Clients aren't just a file
Each are our life
SHENTHURAN SUBRAMANIAM
B.SC.,M.B.A., J.D.
(PERSONAL INJURY LAWYER)
4960 YONGE STREET, SUITE 401
TORONTO, ON. M2N 6K1
www.longolawyers.ca
CELL: 647-992-2417
FAX: 416-800-6247
PHONE: 416-800-4232
TOLL FREE: 1-844-800-4232

Jobs ! Jobs !! Jobs !!!
TOPEMP STAFFING AGENCY
General Labourers, Skilled Workers, Mechanics, Electricians, Drivers and people with Hospitality, Baking and metal experience.
if you have safety shoes, ready to work with us full time, part time
CONTACT US: 416-642-0208
topemp@gmail.com

416-904-7444
pari.sinnathamby@gmail.com
Higher Standard Agents... Higher Results!
Parithi Sinnathamby
Sales Representative
HomeLife Landmark Realty Inc.,
Brokerage
Independently Owned and Operated
7240 Woodbine Ave., Suite 103,
Markham, ON. L3R 1A4
Tel: 905-305-1600 Fax: 905-305-1609

Equity Loan $50,000
Monthly Payment $375
Approval within 24 Hrs.
உங்களின்
அனைத்து மோட்கேஜ்
தேவைகளுக்கும்
என்னை
தொடர்பு கொள்ளுங்கள்
Bronson Christian, BA (Hons)
Mortgage Agent | Lic # 11404
Cell: (647)-336-7434

RAMACHANDRAN LAW
Professional Corporation
Areas of Practice:
·Litigation ·Wills & Estates ·Corporate
·Family Law ·Real Estate
VITHU RAMACHANDRAN
Tel: 416 902 8225
Vithu@Ramachandran.Law
www.ramachandran.law
908 – 305 Milner Avenue,
Toronto ON M1B 3V4

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதிநிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்
* Visitation * Funeral & Memorial Service
* Reception * Burial * Cremation
மார்க்கம் மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை
8911 Woodbine Avenue,
Markham,
Ontario L3R 5G1
Email: info@chapelridgefh.com
www.chapelridgefh.com
Christeen Seevaratnam
416-258-6759
Vilosanan Sivatharman
416-993-0826

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை



எல்லாம் வல்ல எமது தேசியத்தலைவரின் 68வது பிறந்தநாளில் அன்பான வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்!!!

ஒழுக்கம்! நாணயம்! உண்மை! என்பதை உறுதியாக ஏற்று வீரப்புலிப்படை அமைத்து, பகைவரை குலைநடுங்க வைத்தவர் எமது தேசியத்தலைவர். மண்ணையும் மக்களையும், இரு கண்களாக பாவித்தவர் எமது தலைவர்.

(தமிழுக்கு நீ செய்யும் தொண்டு–நின் பகை மீது பாய்ச்சிய குண்டு தமிழனை எதிர்க்கும் பீரங்கி குண்டு சமையல் அறையின் முள்ளங்கித் தண்டு) என்று புரட்சிக்கவிஞரின் பாடலை எழுதி எனக்கு கையொப்பமிட்டுத் தந்தவர் எமது தேசியத்தலைவர். தமிழீழம் அமைத்து தனித்தமிழ் பெயர் சூட்டி மகிழ்ந்தவர் எமது தலைவர்.இந்நன்னாளில் எல்லா நலனும் பெற்று இனிது வாழ வாழ்த்துகின்றேன்!!

இச்செய்திகளை உலகத்தமிழர்களுக்கு எடுத்துச் செல்லும் கனடா ஈழ முரசுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்கள்

(பாசறைப்பாணர்)

தேனிசை செல்லப்பா



ஈழமுரசு

வரலாற்று கடமையை நிறைவேற்ற அணிதிரள்வோம்

30 ஆண்டுகளுக்கு மேல் ஈழத்தமிழ் இனம் அனைத்து துறைகளிலும் சாதனைகளை புரிந்துகொண்டும் விடுதலைக்கான பயணத்தில் துளியளவும் சோர்ந்துவிடாமல் இனத்தின் மீதும் மண்ணின் மீதும் அளப்பரிய பற்றுக்கொண்ட ஒரு ஆளுமையுள்ள தலைமைத்துவத்தின் கீழ் விடுதலை வேட்கையுடன் எதிரிகளை துவம்சம் செய்துகொண்டு வீர தமிழன் என்ற மகுடத்துடன் எதிரிகளுக்கு சிம்ம சொற்பனமாக வாழ்ந்துவந்தார்கள்.அது ஈழத்தமிழர்களின் வாழ்வில் மிக முக்கியமான நாட்களாக அமைந்திருந்தது.ஆம்,உலகெங்கும் வாழும் இலட்சக்கணக்கான தமிழர்களின் மனங்களில் அழியா இடம்பிடித்து வாழ்ந்துவரும் தமிழீழ தேசிய தலைவரின் நிழலின் கீழ் தமிழினம் கௌரவமான இனமாகவும் இவருக்கு அடிபணியாத ஒரு இனமாகவும் சிறந்த கல்வியாளர்களாகவும் பண்பாளர்களாகவும் ஒரு தேசத்தை ஆளக்கூடிய அனைத்து பண்புகளையும் கொண்ட ஒரு இனமாகவும் ஈழத்தமிழினம் வளர்த்தெடுக்கப்பட்டிருந்தது. இந்த பண்புகளை கண்டு சிங்கள தேசம் நடுங்கியது, சர்வதேச சமூகம் தலைவணங்கியது. இந்த காலகட்டம் தான் ஈழத்தமிழரின் வரலாற்றில் பொற்காலம் என்று கூறினால் அது மிகையாகாது.

இந்த நிலைமை தான் ஒரு சில சர்வதேச நாடுகளுக்கும் சிங்கள தேசத்துக்கும் அச்சத்தை உண்டாக்கியது. எங்கு ஈழத்தமிழினம் தங்களுக்கு சவால் விடும் ஒரு சமூகமாக வளர்ந்துவிடுமோ என்று அஞ்சிய நாடுகள் சில சிங்கள இனவெறியர்களுடன் இணைந்து 2009 போரை பெருமெடுப்பில் எடுத்து ஒரு இனத்தின் விடுதலைக்கான போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்தன. ஆனால், தேசிய தலைவனும் மண்ணின் மைந்தர்களான மாவீரர்களும் விட்டுச்சென்ற தாகம் ஈழமண்ணில் இன்றும் வேரூன்றியிருக்கிறது என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. ஒரு பக்கம் சமூகத்தை சீரழிக்கும் சிங்கள தேசத்தின் நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்பட்டாலும் மறுபக்கம், எமது விடுதலைப்போராட்டத்துக்கான மூச்சு நின்றுவிடாமல் அதனை தொடர்ந்தும் முன்னெடுப்பதில் தலைவரின் தேசிய தலைவரின் வழியை பின்பற்றும் மாவீரர்களின் தியாகத்தை போற்றும் தரப்புகள் முன்னெடுத்துவருகிறார்கள் என்பதிலும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. அதேவேளை, தமிழ் தலைவர்கள் என்று கூறி திரிபவர்களில் சிலர் தமிழினத்தை விற்று பிழைப்பு நடத்துபவர்களாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தை மலினப்படுத்திக்கொண்டு சிங்கள தேசத்தின் அடிவருடிகளாக மாறி தமிழினத்துக்கு துரோகம் இழைத்துக்கொண்டிருப்பதும் வேதனைக்குரியதே.

2009க்கு பின்னர் ஈழத்தமிழ் மக்கள், தங்களுடைய தேவைகளுக்காகவும் விடுதலைக்காகவும் யுத்தத்தின் போது சிங்கள தேசத்தினால் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியை பெற்றுக்கொள்வதற்காகவும் தனித்தனியாக போராடிவருவது அவர்கள் அரசியல் அனாதைகளாகியுள்ளதை வெளிப்படையாக உணர்த்தி நிற்கிறது. கடந்த 13 வருடங்களில் ஈழத்தமிழர்கள் ஒற்றுமையாக ஒன்றுகூடி போராடியது கிடையாது. அந்தளவுக்கு அரசியல் தலைவர்களால் ஈழத்தமிழினம் பிரிக்கப்பட்டு - பிளவுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலைமை சமூகத்தின் விடுதலைக்கு நிச்சயமாக பொருத்தமான ஒரு விடயமல்ல. 2009 க்கு முன்னர் 30 வருடங்களாக சிங்கள தேசத்துக்கும் இந்தியாவுக்கும் வல்லரசு நாடுகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் சிம்ம சொற்பனமாக திகழ்ந்ததற்கு ஈழத்தமிழினத்தின் ஒற்றுமையே மிகப்பெரும் ஆயுதமாக இருந்தது.அந்த ஒற்றுமையே தேசிய தலைவரின் விடுதலை வேட்கைக்கான போராட்டத்துக்கு ஆணிவேராகவும் அமைந்திருந்தது. ஆனால், இன்று அந்த நிலைமை இல்லை. அதனால் தான் 13 வருடங்களாக ஐ.நா.தமிழருக்கு சார்பாக நடக்கமுடியாமல் திணறுகிறது. இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தாலும் தமிழருக்கு ஒரு நியாயமான தீர்வை வழங்க முடியாமல் இருக்கிறது.

2009 க்கு பின்னர் தமிழர் தேசத்தால் ஒற்றுமைப்படமுடியாமல் போனதற்கு பிரதான காரணம் அரசியல் தலைவர்களின் செயற்பாடுகள் மாத்திரமே. தேசிய தலைவரால் உருவாக்கப்பட்ட கூட்டணியும் தமிழ் தேசிய அரசியலை கைவிட்டு சிங்கள தலைவர்களுக்கு பின்னாலும் சர்வதேசத்துக்கு பின்னாலும் ஓடுவதில் அக்கறை காடினார்களே தவிர, தமிழரின் விடுதலையில், தமிழரின் உணர்வுகளில் காட்டவில்லை. தங்களுடைய வாழ்க்கையை சுகபோகமாக்குவதில் காட்டிய அக்கறையை தமிழரின் சாதாரண வாழ்க்கைக்காக கூட காட்டவில்லை. தற்பொழுது யுத்தம் முடிவடைந்து 13 வருடங்களுக்கு பின்னர் ரணில் விக்ரமசிங்க தமிழர்களுக்கு ஏதாவது செய்யவேண்டுமென துடித்துக்கொண்டிருக்கிறார்? இதிலும் தமிழ் மக்களை ஏமாற்றி குளிர்காய்வதற்கு சில தமிழ் தரப்புகள் காய் நகர்த்த தொடங்கியுள்ளன. மக்களை ஏமாற்றி ஏமாற்றி கடந்த 13 வருடங்களாக அரசியல் செய்தவர்கள் இனியும் தமிழர்களை ஏமாற்ற முயற்சிக்கக்கூடாது. அதைவிட தமிழர்கள் இவர்களின் ஏமாற்றங்களுக்கு ஆளாகக்கூடாது. 2009 க்கு பின்னர் தமிழ் தேசத்தில் ஏற்பட்ட தலைமைத்துவ வெற்றிடம் என்பது இனிமேல் என்றைக்கும் நிரப்பப்படப்போவதில்லை. அது தொடர்ந்தும் வெற்றிடமாகவே இருக்கப்போகிறது.ஆனால், ஈழத்தமிழர்கள் ஒற்றுமைப்படுவது காலத்தின் அவசியம். 2009 க்கு முன்னர் எவ்வாறு ஒற்றுமைப்பட்டு சிங்கள தேசத்துக்கும் சர்வதேசத்துக்கும் சிம்ம சொற்பனமாக திகழ்ந்தோமோ அதேபோன்ற ஒரு நிலைமை ஏற்பட்டால் மாத்திரமே விடுதலைக்கான பயணத்தை தொடரமுடியும் என்பதுடன் அதன் இலக்கையும் எட்ட முடியும். அரசியல் தலைவர்களின் பின்னால் பிரிந்து பிரிந்து அணி திரள்வதை நிறுத்தி இனத்துக்காகவும் மண்ணுக்காகவும் ஓரணியில் ஒற்றுமைப்படுவதே எமது மாவீரர்களுக்கும் தேசிய தலைவருக்கும் செய்யும் காணிக்கையாக இருக்கும் என்பதை கூறிவைக்கின்றோம்.

தேசியத் தலைவரின் சிந்தனையிலிருந்து



எமது போராளிகளின் அற்புதமான தியாகங்களும், எமது மக்களாகிய உங்களின் அசைக்க முடியாத உறுதிப்பாடுமே எமது போராட்டத்தை உலக அரங்கில் பிரசித்தப்படுத்தியுள்ளது. நீதியையும், தர்மத்தையும் சுதந்திரத்தையும் இலட்சியமாகக் கருதிய எமது விடுதலைப் போராட்டம் நிச்சயம் வெற்றியடைந்தே தீரும்.

மாவீரர்களின் பெற்றோர், உறவினர்களுக்கு மாவீரர்களின் நினைவை ஈழமுரசில் பதிவு செய்ய எமக்கு அனுப்பி வைக்கவும்



எங்களுக்காய் தங்கள் வாழ்வை தியாகம் செய்த எம் தெய்வங்களை தினமும் நினைவு கூருவோமாக.

ஈழமுரசு
CANADA EELAMURASU

எம்முடனான தொடர்புகளுக்கு:

647-657-8566



Email: eelamurasu@yahoo.com

web: www.eelamurasu.ca

https://www.facebook.com/Eelamurasu-1400177629995000/

All the rights reserved to Eelamurasu publication. Every effort is made to pro- vide accurate information in this publication. Eelamurasu Publication is not re- sponsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.



தமிழ்த்தேசிய இனத்தின் உயிர்கொள்கையான தமிழீழத்தேசத்தைப் படைத்திட தலைவர் உதித்தத் திருநாளில் ஒவ்வொரு தமிழரும் உறுதியேற்போம்

-சீமான்
நவம்பர் 26!

இன்றைய நாள் வரலாற்றின் வீதிகளில் தாழ்ந்து வீழ்ந்து கிடந்த தமிழர் என்ற தேசிய இனம் தன்னைத் தானே தலை உயர்த்தி நிமிர்ந்து பார்க்கின்ற புனித நாள். அழித்தொழிக்கப்பட்ட அடிமைத்தேசிய இனமாக உலக வீதிகளில் நாம் அலைந்தாலும் நமது உள்ளத்துக்குள் எரிகின்ற விடுதலை நெருப்பு இன்னும் அணையாமல் இருப்பதற்கான "ஒற்றைப் பெயர்" பிறந்த நன்னாள்.

அது நம் தேசியத் தலைவர் அன்பு அண்ணன் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் பிறந்த புனிதத் திருநாள்.

இந்த உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு தேசிய இனமும் தனது மொழி, நிலம், உரிமைகள், பண்பாட்டு, தேசிய இனத்தின் இறையாண்மை ஆகியவற்றைக் காப்பாற்ற போராடி வருகிற பெரும் கதையே உலக வரலாறாக அறியப்படுகிறது. கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தக் குடி எனப் போற்றப்படுகின்ற தமிழர் என்கின்ற தேசிய இனமும் பன்னெடுங்காலமாக தனது மொழி, நிலம், பண்பாட்டு அடையாளங்களைக் காப்பாற்றுவதற்கு போராடி வருகிறது. காலம் காலமாக உயிரைத் துச்சமாகக் கருதி, மானத்தையும், வீரத்தையும் உயிராகக் கருதி களத்தில் நின்ற பெருமாவீரர்கள்தான் தமிழ்த்தேசிய இனத்தின் தெய்வங்களாக, இறை வடிவங்களாக மாறி இருக்கிறார்கள். வரலாற்றுப் பெருமிதங்கள் நிறைந்த தமிழர் வரலாற்றில் நேர் எதிர் நின்று எதிரிகளை நோக்கி மாபெரும் வீரத்துடன் வேலெடுத்து பாய்ந்த முருகன், வாளெடுத்து சுழன்று திசை எட்டும் புலிக்கொடி பறக்க வைத்த சோழன், என காலப் பெருமையின் நீண்டு துலங்கும் பட்டியலில் அறம் வழி நின்று மறம் போற்றி வாழ்ந்து, தன் பெயரை தங்க எழுத்துக்களால் பொறித்து தனித்துவம் கண்ட தலைவராக மிளிர்ந்து சுடர்கிற சூரியனாய் விளங்குபவர்தான் நமதுயிர்த் தலைவர், அன்பு அண்ணன் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

இந்த உலகில் வாழ்கின்ற 12 கோடி தேசிய இன மக்களைக் கொண்ட தமிழினத்தின் இருபெரும் தாய் நிலங்களாக தாயகத்தமிழகமும், தமிழீழமும் இருந்து வருகின்றன. நடுவே பாய்ந்துப் பூரிக்கின்ற கடலலைகள் இரு பெரும் நிலங்களையும் பிரித்தாலும் குருதி முழுவதும் நிறைந்திருக்கின்ற மரபணுக்களின் ஒத்திசைவு உணர்வால், ஒரு தாயின் வயிற்றில் தோன்றிய ஒரே கருவறைப் பிள்ளைகள் என்கின்ற உறவால் ஒற்றைத் தேசிய இனத்தின் மக்களாக தமிழராகிய நாங்கள் வாழ்கின்றோம்.

நீண்ட நெடிய வரலாற்றுத் தொடர்ச்சி, எக்காலம் தோன்றியது என அறிய முடியாத அளவுக்கு இலக்கண, இலக்கிய செழுமைகளுடன் கூடிய மொழி முதுமை போன்ற பெரும் சிறப்புகள் தமிழினத்திற்கு இருந்தாலும் இறையாண்மையுடன் கூடிய ஒரு நாடு இல்லையே என்ற ஏக்கம் ஒவ்வொரு தமிழ் மகனின் மனதிற்குள்ளும் ஆழ்மனத்துக்கமாக பன்னெடுங்காலமாக இருந்து வந்தது. சிங்களப்பேரினவாத கரங்களுக்குள் நம் தாய் நாடான தமிழீழம் சிக்கித் தவித்த போது இதை மீட்க யாராவது எங்கிருந்தோ வர மாட்டார்களா? என்கிற தவிப்பு நம்மிடையே இருந்து வந்தது.

நம் மனதிற்குள் இருந்த அந்தத் துக்கத்தைத் துடைத்தெறிவதற்காக, ஏங்கித் தவித்த ஏக்கத்தை அழித்து முடிப்பதற்காக காலம் அளித்த கரிகாலனாக நம்மிடையே தோன்றி, சமகாலத்தில் தமிழர் என்ற தேசிய இனத்திற்கு முகமாக, முகவரியாக , ஊக்கமாக, ஆற்றலாக அடையாளமாக திகழ்பவர்தான் நம் தேசியத் தலைவர் அவர்கள்.

தனது அறநெறிப் போற்றி வாழ்ந்த வாழ்க்கை முறையினால், ஓங்கி உயர்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளால் இதுவரை தோன்றிய புரட்சியாளர்களில் நம் தேசியத் தலைவர் அண்ணன் பிரபாகரன் அவர்கள் ஆகச் சிறந்தவராகிறார். படையின் எண்ணிக்கையில் வெற்றியல்ல் எண்ணத்தில்தான் வெற்றி என்பதைப் பாருக்கு எடுத்துச் சொன்னதோடு மட்டுமில்லாமல் அதை நடைமுறைப்படுத்தி வரலாற்றில் வீரக்காவியமாக மாற்றி நிறுத்தியதும் தலைவர் பிரபாகரன் மட்டும் தான்.

ஒரு மக்களின் தலைவனின் வாழ்க்கை எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் அவர் விளங்கினார். மக்களோடு மக்களாக எளிய வாழ்க்கை வாழ்ந்து இறுதிவரை மக்களின் விடுதலைக்காகக் களத்திலே நின்று, எதிர்த்து நின்ற எதிரியைக்கூட உளப்பூர்வமாக வென்று காட்டியவர்தான் நம் தலைவர் பிரபாகரன் அவர்கள். அவர் கட்டமைத்த ஈழ சோசலிசக் குடியரசு இதுவரை தோன்றிய உலக நாடுகள் அனைத்திற்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தது. மது, புகை ஊழலற்ற, பாதுகாப்பான, மக்கள் நலன் பேணுகின்ற, மொழி பண்பாட்டு அடையாளங்களை பாதுகாக்கிற , சுற்றுப்புறச் சூழலியல் கருத்துக்களை உள்ளடக்கிய தாய்மைப் பொருளாதாரத்தைப் போற்றி வளர்த்த ஒரு பொதுமை அரசாக தலைவர் பிரபாகரன் கட்டியெழுப்பினார்.

அவர் கனவுப் பூமியாய் கட்டமைத்த நம் தமிழீழத் தேசத்தை உலக வல்லாதிக்கங்களின் துணையோடு சிங்களப் பேரினவாதம் இன்று அடிமைப் பூமியாக மாற்றி வைத்திருக்கிறது. வரலாறு காணாதத் தடை செய்யப்பட்ட ஆயுதங்களை வைத்து, உலக நாடுகளின் துணைகொண்டு நமது விடுதலைப்போராட்டத்தை சிங்கள அரசு தற்காலிகமாக முறியடித்து வைத்திருக்கிறது. போர் முடிந்து 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் உலக அரங்கில் நமக்கென நீதி இன்றும் கிடைக்கவில்லை. இவ்உலகில் எல்லாத் தேசிய இனங்களையும் போல நமக்கும் சகலவிதமான உரிமையுடன் வாழக்கூடிய இறையாண்மை மிக்க ஒரு தேசம் இன்றளவும் அமையவில்லை.

நம் உயிர் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் கரங்களில் இருந்த விடுதலைப் போராட்டம் இன்று உலகத் தமிழர்களின் தோள்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எது நடந்தாலும் என்ன நிகழ்ந்தாலும் தமிழீழ நாட்டிற்கான விடுதலைப்போராட்டத்தை எந்த சூழ்நிலையிலும் கைவிடாமல் தொடர்ந்து எடுத்துச் செல்வதுதான் நம்முயிர் தலைவர் மீதான நமது ஆழ்ந்தப் பற்றுறுதியை இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டுகிற உன்னதப்பணி என்பதை இப்புனித நாளில் உணர வேண்டும்.

இப்பூமிப்பந்தில் இறுதித்தமிழன் இருக்கும் வரை தமிழீழம் சாத்தியம்தான் என்பதை நம் சத்தியத்தலைவர் பிரபாகரன் அவர்களது வாழ்க்கையிலிருந்து நாம் எடுத்துக் கொள்கிற தத்துவமாக இருக்கிறது. மன உறுதி குலையாமல், விடுதலை நோக்கம் சிதையாமல் தமிழினம் தனது விடுதலைப்பாதையில் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்பதுதான் நம் தலைவர் பிறந்த நாளில் நாம் எடுத்துக்கொள்ளும் ஆணையாக அமைகிறது. உலகம் முழுக்க வாழ்கின்ற எம் தாய்த்தமிழ் உறவுகளுக்கு தேசியத் தலைவர் என்னுயிர் அண்ணன் மேதகு வே. பிரபாகரன் அவர்களது 68 ஆவது அகவை தினத்தில் தமிழர் எழுச்சி நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்த்தேசிய இனத்தின் ஆன்ம விருப்பமான தமிழீழத்தேசத்தைப் படைத்திட தலைவர் உதித்தத் திருநாளில் ஒவ்வொரு தமிழரும் உறுதியேற்போம்!

வாழ்க தலைவர் பிரபாகரன்!
வெல்க தமிழீழம்!
சீமான்
தலைமை ஒருங்கிணைப்பாளர் நாம் தமிழர் கட்சி

Naam Thamilar Canada
நாம் தமிழர் கனடா
Babu 416-278-1728
Naam Thamilar Canada
நாம் தமிழர் கனடா



தலைவர் என்று உலகத்தமிழர்களால் அன்போடும், மரியாதையோடும் அழைக்கப்படும் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் 68வது பிறந்தநாளையொட்டிய செய்தியை வெளியிடுவதில் நான் பெருமிதமும், மட்டற்ற மகிழ்ச்சியும் அடைகின்றேன். தலைவர் ஈழத்தமிழர்களின் நெஞ்சங்களில் மட்டுமல்ல, உலகத்தமிழர்களின் நெஞ்சங்களிலும் நிரந்தர இடத்தைப் பெற்றவர். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறீலங்கா அரசாங்கத்திற்கும் பேச்சுவார்த்தை நடைபெற்ற காலத்தில் பல நாடுகளுக்கு பேச்சுவார்த்தை தொடர்பாக பயணம் செய்த போது பல நாடுகளில் வாழும் தமிழர்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. மலேசியத் தமிழர்கள் என்றாலும் சரி, சிங்கப்பூர் தமிழர்கள் என்றாலும் சரி, தென்னாபிரிக்க தமிழர்கள் என்றாலும் சரி யாவரும் தமக்கு அங்கீகாரம் கிடைப்பதற்கும் தாம் தலைநிமிர்ந்து நிற்பதற்கும் தலைவரே காரணம் என்ற கருத்தைக் கொண்டவர்கள்.

பேச்சுவார்த்தைக் காலத்தில் தலைவரோடு பழகும் வாய்ப்புக் கிடைத்தது. தலைவரது விருந்தோம்பலும் தோழமை உணர்வும் அவரிடத்தில் முன்னின்றன. நோர்வே ராஜதந்திரிகளுடனான சந்திப்பில் தலைவரின் மொழிபெயர்ப்பாளராக செயற்பட்டேன். நோர்வே வெளிவிவகார அமைச்சருடன் நடைபெற்ற மதிய உணவின்போது நோர்வே நாட்டின் அரச பரம்பரையைப் பற்றி உரையாடினார். அவ்வுரையாடல், உலக வரலாறுகளில் தலைவருக்கு இருந்த புலமையைப் புலப்படுத்தியது.

தலைவர் தூர நோக்குக் கொண்டவர். விடுதலைப் போராட்டத்திற்கும், சுதந்திர தமிழீழத்திற்கும் கடலின் முக்கியத்துவத்தை தலைவர் நன்கு அறிந்திருந்தார். சிறீலங்காத் தீவின் வட - கிழக்கு நிலம் மட்டுமல்ல அந்நிலத்தை அண்டிய கடலும் தமிழர்களுக்கு உரித்தானது என்ற கருத்தையும் அதற்கான செயலையும் முதலில் எடுத்துரைத்து செயற்பட்டவர். தலைவர் தாயகத்தலைவர்கள் தங்களுடைய அரசியல் நடவடிக்கைகளில் தரைக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் போன்று கடலுக்கும் கொடுக்க வேண்டும். இன்றைய பூகோள அரசியலிலும், வர்த்தகத்திலும் கடலே முக்கியத்துவம் பெறுகின்றது. வட - கிழக்கை அண்டிய கடல் ஈழத்தமிழர்களின் இறைமைக்குட்பட்டது என்ற கருத்தை நாம் வலியுறுத்தும் போதும் அது தொடர்பான போராட்டங்களில் நாம் ஈடுபடும்போதுதான் இந்துமா சமுத்திரம் தொடர்பான பூகோள அரசியலில் நாம் பார்வையாளர் நிலையிலிருந்து பங்காளர்களாக மாறலாம்.

தலைவர் எந்த அரசியல் நகர்விற்கும் பலம் முக்கியமானது என்பதில் உறுதியுடன் இருந்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் பலமாக இருந்தபடியால்தான் சிங்களம் மட்டுமல்ல, உலகமே கிளிநொச்சிக்குப் படையெடுத்ததை நாம் காணக்கூடியதாக இருந்தது. பேச்சுவார்த்தைக் காலத்தில் கிளிநொச்சி தென்னாசியாவின் தலைநகராக மிளிர்ந்தது.

தென்னாசியாவில் அரசியல் போராட்டங்கள் அகிம்சை வழியிலேயே மேற்கொள்ளப்பட்டன. இந்தியா என்றாலும் சரி, நேபால் என்றாலும் சரி, மாலைதீவு என்றாலும் சரி போராட்டங்கள் அகிம்சை வடிவிலே மேற்கொள்ளப்பட்டன. (சிறீலங்கா போராட்டம் இன்றி சுதுந்திரம் பெற்றது). இந்தியாவில் மகாத்மாகாந்தி அகிம்சை வடிவில் போராட்டத்தை மேற்கொண்ட போது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்தார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் ஆயுதப் போராட்டத்திற்கு தமிழகம் முக்கியமானதொரு ஆதரவுத்தளமாக இருந்தது. வைத்தியர் செண்பக இராமன் சுபாஷ் சந்திரபோஸின் தளபதியாகச் செயல்பட்டார். தலைவர் சுபாஷ் சந்திரபோஸை தன்னுடைய முன்மாதிரியாக ஏற்றுக்கொண்டார்.

1958 ஆம் ஆண்டு தமிழர்கள் பெருமளவில் கொல்லப்பட்ட போது தலைவருக்கு நான்கு வயது. அப்பருவத்திலே தலைவர் தனது தந்தையிடம் ஏன் தமிழர்கள் திருப்பி அடிக்கவில்லை எனக் கேட்டவர். தலைவருடைய அந்தக் கேள்வி தமிழர்களின் புதிய வரலாற்றுக்கு ஆரம்பப்புள்ளியாக அமைந்தது. வரலாற்றின் நிர்ப்பந்தத்தின் காரணமாக தமிழர் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தலைவர் அந்தப் போராட்டத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்தார். உலக நீதிமன்றம், மேற்கு சஹாரா வழக்கில் அபாயங்கள், தியாகங்கள் நிறைந்த விடுதலைப் போராட்டம் உண்மையானதும், உன்னதமானதுமென கூறிய வாசகங்களை இத்தருணத்தில் குறிப்பிடுவது பொருத்தமெனக் கருதுகின்றேன். Dr.Sunyatsen இன் சீன விடுதலைப்போராட்டம், ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க விடுதலைப் போராட்டங்களின் அடிப்படையில் தலைவர் ஆரம்பத்தில் கெரில்லா போராட்ட முறையை தேர்ந்தெடுத்தார். இந்திய அமைதிப் படையினர் திரும்பிப் போன பின்னர் கெரில்லா போர்முறை மரபுவழி போர் வடிவமாக பரிணாமம் பெற்றது.

2009ம் ஆண்டு தமிழினப் படுகொலையுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை மௌனித்தார்கள். நாம் ஒரு சிறு இனம் என்றாலும் 70 ஆயிரம் வருடங்களுக்கு மேலாகப் பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு இனம். நாம் இன அழிப்புக்குள்ளாக்கப்பட்ட இனம் என்றாலும் இன்று மீண்டும் எழுந்து நின்று இன அழிப்பிற்கான நீதிக்காக புதிய களங்களை திறந்து போராடுகின்ற ஒரு இனம். நாம் பாதிப்பிற்குள்ளான இனம் என்றாலும், பரிதாபத்திற்கு உள்ளான இனம் அல்ல. பலம் பலவடிவங்களைக் கொண்டது. இராணுவம் மட்டுமே பலம் என்பதல்ல. நாம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மக்கள். நாங்கள் இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கின்றோம். அந்த கேந்திர முக்கியத்துவத்தை மூலதனமாகக் கொண்டு எமது போராட்டத்தை தொடருவோம்.

- வி. ருத்திரகுமாரன்
நாடு கடந்த தமிழீழ அரசு

Follow us on Twitter @QBBakery
QUALITY BREAD BAKERY -Est. 1996-
இப்பொழுது உங்கள் ஒன்றுகூடல்களுக்கு தேவையான தோசை, நூடில்ஸ், பிட்டு, பிரியாணி இன்னும் பல சுவையான உணவு வகைகளை மலிவாக ஓடருக்கு பெற்றுக்கொள்ளலாம்
உங்களுக்கு தேவையான சிற்றுண்டி வகைகளை எங்களிடம்பெற்றுக்கொள்ளலாம்
வெல்ல முடியாத மலிவு விலையில்
1970 Ellesmere Road Units 12 & 13, Scarborough, ON M1H 2W1
416.431.9829



தாயிக்கு நிகரான
தலைவர் பிரபாகரனுக்கு
தாலாட்டு நாள்
நல்வாழ்த்துகள்.

கௌதமன்
ஐம்பதாயிரம் ஆண்டுகள் வரலாறு கொண்ட எம் தமிழினத்தின் வரலாற்று நாயகர்களாக நான் பார்ப்பதும் அகம் மகிழ்வதும் ஐந்தே ஐந்து நபர்களைத்தான்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எம் இனத்தை ஆண்ட கரிகாலன், எல்லாளன். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகத்தின் பாதி நாடுகளை கட்டியாண்ட எங்கள் ராஜராஜன், ராஜேந்திர சோழன். நாங்கள் வாழ்ந்த சமகாலத்தில் வீரத்தோடும் அறத்தோடும் ஆட்சி செய்த என் தாய்க்கும் தாய் மொழிக்கும் சமமான எனது தமிழீழ தேசியத் தலைவர் "மேதகு" பிரபாகரன்.

எம் நிலத்தையும் எமது இனத்தையும் திட்டமிட்டு சிதைத்த "ரத்த காட்டேரி" ராஜபக்சேவை அவரது குடி மக்களே ஓட ஓட அடித்து துரத்தி விட்டு வாழ்வுக்கும் அன்றாட உணவுக்கும் சிங்கள வீதிகளில் தறிகெட்டு திரிந்து கொண்டிருந்த நிலையில் "இந்நேரம் பிரபாகரன் இருந்திருந்தால் நாங்கள் பட்டினி கிடந்திருக்க மாட்டோம்" என்று ஒரு சிங்கள இளைஞன் கூக்குரல் எழுப்பியது ஒன்றே எம் தலைவனுக்கு சூட்டிய ஒரு மாபெரும் மணிமகுடம்.

"எதிரியை கூட கொல்லக்கூடாது அவன் மனதை வெல்ல வேண்டும்" என்று போர்க்களத்தில் நின்ற எந்த மன்னனும் அல்லது எந்தவொரு தலைவனும் சொன்னதாக இதுவரை வரலாற்றுக் குறிப்பில் இல்லை. கொத்தோடும் பிஞ்சுகளோடும் எங்கள் தாய்மார்கள், சகோதரிகள், எங்கள் வீட்டு பச்சிளம் குழந்தைகள் மீது ரசாயன குண்டுகளையும் கொத்துக் குண்டுகளையும் வீசி ஈவு இரக்கமில்லாமல் கொன்று குவித்துக் கொண்டிருந்த நிலையில் கூட என் வீட்டு பெண்களும் எதிரியின் வீட்டு பெண்களும் எங்கள் வீட்டு குழந்தைகளும் எதிரியின் குழந்தைகளும் வேறு வேறு அல்ல ஆகையினால் எதிரியோடு மட்டும் யுத்தம் செய்வோம் எல்லாவற்றுக்கும் காலம் ஒருநாள் பதில் சொல்லுமென்று சலனமின்றி சொல்லிவிட்டு இறுதிவரை உறுதியோடு போராடியவர் எங்கள் அண்ணன் மேதகு பிரபாகரன். அதனால்தான் சிங்கள தாய்மார்களில் சிலர் இன்றும் கூட வல்வெட்டித்துறைக்கே வந்து இது "மாவீரன்" பிறந்த மண் என தலைவர் வீட்டில் மண் எடுத்து செல்வதாக மனம் நெகிழும் நிகழ்வுகள் நடந்தேறிக் கொண்டிருக்கிறது.

இந்த உலகம் தோன்றிய காலத்திலிருந்து எங்கள் தலைவனைப் போல இதுவரை ஒருவன் பிறந்ததில்லை. இந்த உலகம் அழியும் காலத்தில் கூட எங்கள் அண்ணனை போன்று இன்னொருவன் பிறக்கப் போவதில்லை. தமிழினம் மட்டுமே கொண்டாடும் எங்கள் அண்ணன் பிரபாகரன் அவர்களை மனிதகுலமே கொண்டாடுகிற காலம் வெகு தூரத்தில் இல்லை.

எங்கள் அண்ணனே, மாவீரனே, உன் பிறந்தநாளில் அகம் மகிழ்ந்து வாழ்த்துகிறேன். மண்ணுள்ளவரை விண்ணுள்ளவரை உன் புகழ் நிலைக்கும். உனது அறம் தழைக்கும்.

பேரன்போடும் பெரும் பாசத்தோடும்
தம்பி,

வ.கௌதமன்
பொதுச் செயலாளர்
தமிழ்ப் பேரரசு கட்சி
"சேரமான் குடில்"



We offer the widest selection of both Asian & non Asian vegetables, fruits, daily products, seafoods, meats and ethnic goods

Paramesh: 647-470-8383
Nish: 647-991-2124
5402 Main Street, Unit 7,
Stouffville, ON. L4A 1H3

Sajan: 647-866-5681
9909 Markham Rd, Unit 11&12,
Markham, ON. L3P 3J3
Tel: 905-201-9833

Stouffville
வாழ்
தமிழ் மக்கள்
நலன் கருதி
எமது கிளை
திறக்கப்பட்டுள்ளது!

Kajan: 647-818-4693
Nish: 647-991-2124
Syan: 647-866-5681
5402 Main Street, Unit 7,
Stouffville, ON. L4A 1H3
9909 Markham Rd, Unit 11&12,
Markham, ON. L3P 3J3
Tel: 905-201-9833



Seafood & Meat Shop
We've got all your healthy, delicious meat & seafood items

பிரபாகரன் புரட்சியின் குறியீடு

பிரபாகரன்! இது
வெறும் பெயர்ச்சொல் இல்லை!
புரட்சியின் குறியீடு!

பிரபாகரன்! இது
வெறும் வார்த்தை இல்லை!
ஒரு இனத்தின் உயிர்ப்பு!

பிரபாகரன்!
இறவாப் புலி!
மறவா மொழி!

அவன் சுற்றும் பூமி
அவனே சுழற்சி!
அவனே எழுச்சி
அவனே அரண்
அவனே அறம்!

நெருப்புக்
கர்ப்பம் தரித்துப் பிறந்தவன்!
பிரபாகரன்...
கைகால் முளைத்தக் கதிரவன்!

துவக்குகளின் துவக்கம் - பிரபாகரன்
துவண்டுபோகாத இயக்கம்!

சோழப் பரம்பரை கரிகாலன் எம்
ஆண்ட இனத்தின் எல்லாளன்!
கரும்புலி கண்டெடுத்த கண்ணிவெடி
தமிழன் முகவரி மீட்டெடுத்த வரிப்புலி

தாயின் கர்ப்பப்பை இருட்டறை - இவன்
தாயின் இருப்போ நெருப்பறை!
புறநானூற்றைப் படித்த இனம்- இன்று
பிரபாகரனைப் படிக்கிறது!

வல்வெட்டித்துறை - அது
தமிழரின் வரலாற்றுத் துறை!
குறள் எங்கள் மறை - தலைவன்
குரல் எங்கள் பறை!

எல்லாம் முடிந்தது என்று
சிலர் சொல்கிற கதை!
தொடக்கம் தோற்காது என்பது
தலைவன் போட்ட விதை!

பிறந்ததும் அழுகிறவர்கள் நாம்!
அழுகிறவர்களுக்காகப்
பிறந்தவன் பிரபாகரன்

மடிந்தவர்களுக்காக
மாரடிப்பவர்கள் நாம்
மடிந்தவர்களுக்காகவே
விடிந்தவன் பிரபாகரன்!

தமிழீழ விடுதலை வேள்விக்கு
தீக்குச்சிகள் தயாரித்த
தமிழீழத் துருவன் - எங்கள்
தலைவன் பிரபாகரன்!

ஆயுதத்தில் அறத்தையும்
அறத்தில் ஆயுதத்தையும்
ஆட்கொண்ட தலைவன்
பிரபாகரன்!

தமிழர் நிலத்தை மீட்கும்
ஆற்றல் கொண்ட ஏறு
எங்கள் பிரபாகரன் பேரு!

பிரபாகரன்
எழுச்சியின் அடையாளம்
புரட்சியின் பூபாளம்!

போராளிகளின் தாயுமானவன்
பேரொளியின் கிழக்கானவன்!

விடுதலையின் இலக்கானவன்
விடியலின் விளக்கானவன்

இடர் பட்டத் தமிழினம்
ஒடிந்து கிடந்த போது - எதிரிகளை
இடிபோலத் தாக்கிய
எல்லாளன் - எங்கள்
பிரபாகரன்!

அன்று இராசராசன் சோழன்
இன்று பிரபாகரன் வேலன்
அவன் தரைப்படை கட்டியவன்
இவன் முப்படைகட்டி அவனையே
முந்தியவன்!

போர்க்களத்தின் நெருப்பு
சமத்துவத்தின் திறப்பு...
புறநானூற்றின் விழிப்பு
தலைவன் பிரபாகரனின் பிறப்பு!

- கவிபாஸ்கர்









தலைவா எனும் சொல்
தரணியெங்குமுண்டு -
எங்கள் தலைவா போல்
ஒரு தலைவரைப் பெற்ற
மானிடம் தரணியிலுண்டொ?
உண்மைத் தமிழர்கள்
ஏற்ற தலைமை இது...
உலகம் உணர்ந்தும்...
ஏற்கத் தயங்கியது...?

இருக்கின்றார் என்போர்க்கு இருக்கின்றார்
இல்லை என்போருக்கு இல்லை
என்பது கடவுளுக்கு மட்டுமல்ல
எங்கள் தலைவருக்கும் பொருந்தும்

காலத்தை வென்ற
எங்கள் கரிகாலன்
அகவை அறுபது -
ஈழத்தாய் பெற்றெடுத்த
தவப்புதல்வன் - தாய் மடியில்
வீரத்தை விதைத்தெடுத்து,
தியாகத்தைத் தத்தெடுத்து
துறவிபோல் காடலைந்து
நாடுகாக்க தவம்புரிந்து
முப்படையும் கண்ட
முத்தமிழ்ச்செல்வன்

எங்கள் தேசியத் தலைமை

பதினைந்தில் தம்பியாய்,
முப்பதில் அண்ணனாய்
தாயகப்பேரொளியே
அறுபதில் தேசத்தின் தந்தையாய்
ஒளிரும் எம் இதய தீபமே
தர்மம் வரம் தந்து
தமிழர் தலைநிமிர
தமிழர் எம் தலைவன்
பிறந்த நாள் இது.
தமிழர் தலைநிமிர
தலைவன் பிறந்தநாளிது

அறநெஞ்சே வணக்கம்
உரங்கொள்ளும் நாளிது
உளமார வாழ்த்துகின்றோம்.
உண்மைத் தமிழர்கள் வாழ்த்துகின்ற
வாழ்த்தொலிகள் உலகெங்கும் ஒலிக்கின்றது.

ஏற்கத் தயங்கிடும் உலகம்
கூட உனைப் போற்றும் நாள்
வெகுதொலைவில் இல்லை...

உலகம் உள்ளவரை
வரலாற்று நாயகனாய்

வாழும் காவியமே
பாமாலை சூடிப் பாடுகின்றேன் நானும்
தமிழர் பேரொளி பிறந்த திருநாளை

அடிமையிருள் நீக்கி
விடுதலைப் பேரொளியாக வீசிடும்
எங்கள் பிரபாகரனே

எதிரிகள் கூட நெருங்கமுடியாத
எங்கள் இதய சிம்மாசனத்தில்
வாழுகின்ற ராஜ கோபுரமே

எங்கிருந்தாலும் எங்களின்
வாழ்த்துக்கள் உங்கள்
காதினில் ஒலிக்கும்

வாழ்க எம் நாயகனே வாழ்க
வானவரும் வாழ்த்திடுவர்
நம்மவரும் வாழ்த்திடுவர்
நாளை சுதந்திரப் போராளியென
வையகமும் போற்றி வாழ்த்திடுமே



உங்கள் உறவுகளின் இழப்பில் உங்களுடன் இணைந்து உங்களுடன் ஒருவராக உங்களுக்காக சேவைபுரிய

Tharma stanislaus. BCom.
Funeral Counselor
call us:647-713-6049
dharman20@yahoo.com
"Saying Goodbye is so hard Let us make it easy for you"

AJAX
CREMATORIUM
& VISITATION CENTRE

சொல் மந்திரம்! செயல் எந்திரம்!

நாங்கள்
விதைப்பதற்காக
நிலத்தை கிளறினோம்,
அவர்கள்
புதைப்பதற்காக
நிலத்தை கிளறினார்கள்.
நாங்கள் கதிரறுக்க
கத்தி எடுத்தோம்,
அவர்கள் கருவறுக்க
கத்தி எடுத்தார்கள்.

நாங்கள்
சூடு மிதித்தோம்,
அவர்களாடே
சூடு வைத்தார்கள்.
பாடுபட்டு
விளைஞ்சதெல்லாம்
வீடு கொண்டு வந்து
சேர்க்க முயன்றோம்,
வழி மறித்தார்கள்.
நமது மடியில்
கை வைத்தார்கள்.
கலங்கப்பட்டோம்
கலவரப்பட்டோம்
கூனிக் குறுகியது ஆத்மா.
விளைபூமி விளைபூமி ஆயிற்று.

இசைந்து போதல் சுகம்
என்றார் சிலர்.
மசிந்து போனாலே இருப்பு
என்றார் சிலர்.
கட்டுடைந்து குலைந்து போனது
ஒரு கூட்டம்
அவர்கள் வழி ஒற்றி.
தக்கனப் பிழைத்தவுக்கு
கற்பிதம் வேறு சொல்லி.

மாறாக நீயோ,

வலியது வாழும்
பிரளயம் செய்தாய்.
நம் கூவல்களை நிமிர்த்தி
நிலக்குத்து வரியாக்கி
இனியொரு விதி செய்தாய்.

கச்சைகளும் கந்தைகளும்
உருவப்பட்டு
உறுத்திக் கொண்டிருந்த
நம் அம்மணத்தை மறைக்க
சோழக்கொடியில்
ஆடை நெய்தவன்.தந்தவன் நீ.

எமக்கு
சிராய்ப்புக் காயமெனில்
அவர்க்கு
விழுப்புண் கொடுத்தாய்.
எமக்கு
உடல் காயமெனில்
அவர்க்கு உளக்காயம் வேறுகொடுத்தாய்.

எங்கள் பத்தாயங்களில்
தானியங்கள் குவிந்திற்று.
மடியில் கணம் கூடிற்று.
பசித்து வந்தார்க்கு
அறுசுவை அமுதிட்டோம்.
நிலப்பசி எடுத்து வந்தார்க்கும்
மனம் ஒப்ப
படையல்கள் வைத்தோம்.
ஒரு பிடி மண்ணும்
பகைவனை கொல்லும்
அதிசயம் நிகழ்த்தினாய்.
திரை கடலோடிய தமிழன்
வானோடினான் என்று
வரலாற்றையும் திருத்தி
எழுதினாய்.
இனி எவனும்
இங்கிருந்துதான்
ஈழ காவியத்தை
எழுத தொடங்கவும் வேண்டும்.

எல்லோரும் தம்
முற்றத்து வேலிகள் பற்றி
சிந்தித்திருக்க,
தேசத்தின் எல்லைகள் பற்றி
சிந்தித்தவன் நீ.
ஆதலால்த்தான்,
உன்னால் மட்டும்
முடிகிறது
தமிழர் நினைவுகளில்
இன்றுவரை பயணிக்க.

எனது தூரிகைக்கு
வர்ணமாய் உனைத்தொட்டு
படைப்புகள் தருவதே
சிறப்பாயிற்று.
எனது எழுதுகோலும்
உனைப்பற்றியே அதிகமாக
எழுதி எழுகிறது.நிமிர்கிறது.

உனக்குள் நாமும்
எமக்குள் நீயுமாக
கலந்திருந்த
அன்றைய பொழுதுகளை
நினைக்கும் போது
நீயில்லா
இன்றைய பொழுதுகள்
இலங்கையில்
கொலைக்களம்!
எல்லோரும் நீ
வருவாய் வருவாய் என்றே
சொல்கிறார்கள்,
எமக்குள் தான்
நீ இருக்கிறாய்
என்பதை அறியாமல்!

தாயக கவிஞர்
அ.ழம் சேகுவேரா-
(தமிழீழம், முல்லைத்தீவிலிருந்து...)





காலத்தால் சாகாது ஞாலத்தில் நிலைத்த புகழ் ஈட்டியவர்சிங்களப் பேரிருளை நீக்க வந்த தலைவர் பிரபாகரன்

மா.க.ஈழவேந்தன்
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், இலங்கை
நாடுகடந்த அரசாங்கத்தின் கனடா பேராளர்.

காலம் ஒரு தலைவனை உருவாக்குகின்றதா அல்லது ஒரு தலைவன் ஒரு காலத்தை உருவாக்குகின்றானா என்பது பொருள் பொதிந்த - ஆனால் சிக்கல் நிறைந்த கேள்வியாகும். எங்கள் தலைவர் பிரபாகரனது தோற்றம் காலத்தை வென்று நிற்கின்றது. நெருக்கடிக்கு ஈடுகொடுக்கின்ற தவைர்கள் காலந்தோறும் தோன்றுவது இயல்பு. அது இயற்கை விதி. எங்கள் தலைவர் பிரபாகரன் தோன்றியது நவம்பர் 26, 1954. நவம்பர் மாதம் அவரது தோற்றத்தினால் மட்டுமல்ல, மாவீரர்களை நினைவுகொள்கின்ற முறையிலும் இத்திங்கள் பெருமைபெறுகிறது. ஆகாயத்தை அளக்கலாம் - ஆழ்கடலை அளக்கலாம் ஆனால் கரும்புலிகளின் தியாகத்தை யாரால் அளவிட முடியும்? இந்தக் கூற்றிற்கமைய நவம்பர் 26 தலைவரின் பிறப்பும்,

நவம்பர் 27 மாவீரரது நினைவு நாளும் தமிழ் கூறும் நல்லுலகில் மட்டுமல்ல, விடுதலை வேட்கையுடைய அனைவராலும் உலகம் முழுதும் நினைவுகொள்ளப்படுகின்றது.

எம் தலைவர் ஒப்பற்ற விடுதலை வீரர் என்பதை உலகம் அறியும். முறையான பள்ளிப் படிப்போ பட்டப் படிப்போ எதுவுமற்றவர் நம் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள். நாம் தமிழ் நாட்டில் பரப்புரையாற்ற தங்கியிருந்த வேளையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியப் பெருந்தகைகளோடு அடிக்கடி சந்தித்துரூபவ் நண்பகல் உணவை நாம் அவர்களோடு பகிர்ந்துகொள்வது வழக்கம். அவர்களிடம் நாம் மனம்விட்டுப் பேசியபோது, "உங்களை நாம் குறைத்து மதிப்பிடவில்லை. அரசியல் துறையிலும் மற்றும் இன்னோரன்ன துறைகளிலும் இரட்டை முனைவர் பட்டம் பெற்றவர்கள் நீங்கள். ஆனால், உங்கள் ஆய்வுகள் அனைத்தும் நிகழ்ச்சிகள் நடந்த பின்னர் தான் நூல்களாக வெளிவருகின்றன.

ஆனால், "அறிவுடையார் ஆவது அறிவர்" என்ற வள்ளுவர் கூற்றுக்கமையவும் Concept of futurology என்ற கோட்பாட்டுக்கமையவும் எதிர்காலம் எவ்விதம் அமையப் போகிறது என்பதை நுண்மாண் நுழைபுலத்தோடு எடுத்துரைத்தவர் எம் தலைவர் பிரபாகரன் அவர்கள்" என்று குறிப்பிட்டிருந்தேன். அவர்கள் புன்னகையுடன் ஏற்றுக்கொண்டனர். எம் தலைவரிடம் தூய்மை இருந்தது; தெளிவு இருந்தது; எனவே துணிவோடு பலவற்றை உலகம் வியக்கும் வகையில் ஒளிபடைத்த கண்ணோடு ஆற்றிய பணியை நாம் எளிதில் மறக்க முடியாது.

ஆனால், இக்கட்டுரையாளரைப பொறுத்த வரையில் அவர் தலைசிறந்த ஒரு கவிஞர் என்பதையும் "நாம் அணிவகுத்துள்ளோம்" அவரால் என்று எழுதப்பட்ட கவிதையைப் பயின்றபோது நாம் வியப்பில் ஆழ்ந்தோம். அவரது கவிதைகள் முழுவதையும் இங்கு தரமுடியாது. ஆனால் சில வரிகளை மட்டும் இன்றைய உடனடித் தேவையைக் கருதி சில வரிகளைத் தருகிறாம்.

"நாம் அணிவகுத்துள்ளோம்
நாம் தமிழீழப் படை வீரர்கள்!
நாம் அணிவகுத்துள்ளோம் ..
இழந்த எமது நாட்டை மீட்க!
எதிரி எமது நாட்டை
வஞ்சகமாய் அபகரித்துவிட்டான்
அதைக் கண்டு நாம் அஞ்சவில்லை!
Ganydச் சீறி இழந்த நாட்டை மீட்க
நாம் அணிவகுத்துள்ளோம்!
நாம் தமிழீழப் படை வீரர்கள்!

எமது படையணி கடக்க வேண்டியது
நெருப்பாறு என்பது எமக்குத் தெரியும்
ஆனால் - அதைத் தாங்கக் கூடிய
மக்கள் ஆதரவு என்னும்
கவசம் எம்மிடம் உண்டு..
எதிரியின் ஆயுதமோ பலம் பொருந்தியது!
எமது ஆத்ம பலமோ
அதைவிட வலிமை வாய்ந்தது!
எதிரியின் குண்டுகள் வெடிக்கும்
ஆனால் எமது விடுதலை நெஞ்சங்கள்
எரிமலையென வெடிக்கும் சத்தத்தில்
அதன் சத்தம்
அமுங்கிவிடும்!...

என்று 1981 இலேயே படைத்த இக்கவிதை அவர் ஒரு பிறவிக் கவிஞர் என்பதையும் எமக்கு உணர்த்தியுள்ளது. தலைவரைப் பல இடங்களில் நான் சந்தித்த போதும், 1979ம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நான் சிறைப்பட்டு 3 மாத இடைவெளிக்குப் பின்னர் மீண்ட நிலையில் நல்லூர் முருகன் கோயில் தேரடி அயலில் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் இல்லத்தில் நாம் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், தலைவர் உங்களையும் கோவை மகேசனையும் வரும்படி அழைத்துள்ளார்" என்ற அழைப்பிற்கு அமையரூபவ் நல்லூர் கட்டியர் கந்தசாமியர் இல்லத்தில் தலைவருடன் சந்தித்தோம். தலைவர் தனக்குரிய இயல்புக்கமைய சில சொற்கள் பேச, நானும் கோவை மகேசனும் பல சொற்கள் பேசினோம். அதன் அருமை விளங்காது நாம் கூடப் பேசிவிட்டோமோ என்று இன்று வருந்துகிறோம்.



மீண்டும் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் ஒக்ரோபர் 22, 2003ல் காலையில் வன்னியில் நான் விடுதலைப்புலிகளுக்கு அரசியல் வகுப்பு நடத்திய நிலையில் தலைவரால் நாம் அழைக்கப்பட்டோம். மாலையில் அவரது அலுவலகத்தில் தமிழ்ச் செல்வனுடன் தங்கியிருந்த வேளையில் நாம் சந்தித்தோம். "தமிழன் ஏமாந்த வரலாறும் தமிழன் ஏமாற்றப்பட்ட வரலாறும்" என்ற தலைப்பில் ஏறக்குறைய எனது 21 கட்டுரைகள் பலவற்றை தலைவர் படித்திருந்தார். உங்கள் கட்டுரைகளில் தமிழன் ஏமாந்த வரலாற்றினையும் ஏமாற்றப்பட்ட வரலாற்றினையும் நீங்கள் எடுத்துக் கூறியிருப்பது ஏற்புடையதாகும் என்று கூறினார். தலைவர், அண்ணல் காந்தியை மதித்த நிலையிலும், சுபாஸ்சந்திரபோஸ், பகவத்சிங், கப்பல் ஓட்டிய தமிழன் வ.உ.சி ஆகியோரைப் பற்றியும் நன்கு படித்திருந்தார் என்பதை அவரது உரையாடலில் நாம் காணக்கூடியதாக இருந்தது. நாம் கட்டுரையில் குறிப்பிட்டதற்மைய, சிங்களத் தலைவர்களை மிஞ்சுகின்ற அளவிற்கு எம் தமிழ்த் தலைவர்கள் ஏமாந்தார்கள் ஏமாற்றினர்கள் என்பதை துன்பம் தோய்ந்த புன்னகையுடன் கூறியது நினைவிற்கு வருகிறது.

எங்கள் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு பழ நெடுமாறன், எம்ஜிஆர், போன்றோர் கொடுத்த உதவியையும், காட்டிய பாசத்தையும் விரிவஞ்சி நாம் இங்கே குறிப்பிடவில்லை. பழ நெடுமாறன் அவர்களும், எம்ஜிஆர் அவர்களும், வைகோ அவர்களும் இவருக்கு ஆற்றிய உதவியை நாம் இங்கு நினைவுகொள்ள வேண்டும். ஊடகத் துறையைப் பொறுத்த வரையில்ரூபவ் ஊடகத்துறை செய்தியாளர்கள் இவருக்குப் பக்கபலமாக இருந்தனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். ஆனால், திரு பிரபாகரனைப் பற்றி "நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் பிரபாகரன்" என்ற தலைப்பில் மூத்த ஆங்கில செய்தி ஆசிரியர் சுப்பிரமணியம் சிவநாயகம் அவர்கள் (Saturday Review, Tamil Nation Hot Spring) ஆகிய இதழ்கள் ஊடாக பிரபாகரனை பின்வரும் முறையில் எடுத்துரைக்கிறார்: "பயங்கரவாதி என்ற சொல்லின் பிழையான பிரயோகத்தின் இறுதிப் பின்விளைவு குழப்பமான ஒன்றாகவே இருக்கும். நேற்றைய பயங்கரவாதிகள் சிலர் நாளைய மேதைகளாகியுள்ளார்கள். சிலர் சமாதானத்திற்கான நோபல் பரிசினையும் பெற்றிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு பயங்கரவாதி இல்லையென்றால் அவர் எத்தகைய ஒரு மனிதர்? பல வருடங்களுக்கு முன்னர் மூத்த சிங்களப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் அவரை "பத்தாண்டின் மனிதர்" என்று குறிப்பிட்டிருப்பதோடுரூபவ் அவரது படத்தை தனது சஞ்சிகையின் அட்டையிலும் பிரசுரித்திருந்தார். ஒரு சிங்களத் துறவியாகிய ஆயர் கெனத் பெர்னாண்டோ பிரபாகரனில் "ஒரு பண்பு நயமுடைய மனிதனை"க் காண்கின்றார். இராணுவ ஆய்வாளர் சிலர் அவரை "இராணுவ மேதை" என்று வகைப்படுத்தி விபரிக்கின்றனர். தங்கள் மரணங்களைத் தழுவுவதற்கு புன்னகையுடன் களம் ஏகும் ஆயிரக் கணக்கான இளந் தமிழ் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவர் ஒரு ஆண் தெய்வ உருவாகக் காட்சியளிக்கிறார்."

இவ்விதம் திரு பிரபாகரன் அவர்களை நான் விரித்துக் கூற நிறைய உண்டு. எனினும் இடச் சிக்கலை கருத்தில் கொண்டு "இருப்பாய் தமிழா நெருப்பாய்" என்று அடிக்கடி நினைவுகூரும் இக்கவிதையை மீண்டும் நினைவுகொண்டு என்றும் அழியாத நிலையில் எம் தலைவரை வாழ்த்தி விடைபெற விரும்புகின்றோம்.

"இருப்பாய் தமிழா நெருப்பாய்!
எம் அடுத்த தலைமுறைக்குள்
நஞ்சணிந்த வீரர் நாடமைப்பர்
வெஞ்சமரை வென்று
வீதியெங்கும் முரசறைவர்
வேலி ஒன்று போட்டு
வெறிநாய்கள் உட்புகுந்து
காலில் கடிக்காமல்
காவலுக்கு நின்றிருப்பர்
பூமரங்கள்
பூத்துச் சொரியும்
புலம்பெயர்ந்த குருவியெல்லாம்
கூடு திரும்பும்
கோயிலெல்லாம் கொடியேறும்
நாடு திரும்பி நம் கையில் வந்ததென்று
பாடும் குரலெல்லாம் பரவும்" "இத்தகைய தலைவர் பிரபாகரன் வழியில் நீங்கள் செயலாற்றுவீர்களா?" என்ற வினா குரலற்ற மக்களுக்கு குரல்கொடுக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தலைமை அமைச்சர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன் அவர்களுக்கு விடுக்கப்படுகின்றது.

அவரது பதில் - "தமிழீழ தேசியத் தலைவரின் வாரிசாக நான் என்னைக் கருதவில்லை. எமது தேசியத் தலைவருக்கு வாரசாக யாரும் இருக்க முடியாது என நான் நம்புகிறேன். இருப்பினும் போராட்டத்திற்குக் காத்திரமாக பங்களிக்க எனக்குத் தார்மீக மற்றும் அரசியல் கடமை இருப்பதாக உணர்கிறேன். தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், தமிழர் போராட்டத்தை சர்வ தேச தளத்திற்கு உயர்த்தி, தமிழ் தேசியப் பிரச்சினையை அனைத்துலகப் பிரச்சினை ஆக்கியுள்ளார். சுதந்திர அரசிற்கான தமிழர் அரசியல் ஒரு பெரு விருப்பினை நனவாக்குவதில் அவர் ஆற்றிய சாதனையும் பங்களிப்பும் தொலைநோக்குப் பார்வையும் இலக்கை நோக்கி முன்னேற எம்மை வழிநடத்தும். எமது போராட்ட முறை மாறினாலும் இலக்கு மாறாது என்று நம் தேசியத் தலைவர் ஒருமுறை கூறினார். எமது இலக்கை அடைய ஜனநாயக, மற்றும் ராசதந்திர முறையில் முன்னேறிச் செல்வோம். சிறிலங்கா ஒரு இனவாத, இனநாயக அரசாகவே இருந்து வருவது எமது நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்துகிறது." விரைவில் ஐநா மன்றத்தில் விடுதலைப் புலிகளின் கொடி பட்டொளி வீசிப் பறப்பது உறுதி.

ஈழம் வெல்லும் -
இதைக் காலம் சொல்லும்!
மா.க.ஈழவேந்தன்



நாங்கள் வாழ்வோம்



எங்கள் நெஞ்சிற்குள்ளே உங்கள் கனவுகள் கதைபேசுகின்றன..!
நாங்கள் சுமக்கும் பாரத்தில் உங்கள் எண்ணங்களும் அடங்கும்.!
உங்கள் கல்லறையை மண்ணுக்குள்ளே எடுத்து உள்ளத்தில் வைத்துள்ளோம்..!
நீங்கள் உறங்காத விழிகள் எதற்கும் மயங்காத புலிகள்!
பாசக்கதவுகளை பூட்டவிட்டு விடுதலைத் தாகத்தில் நடந்தவர்கள்!
ஆசைக் கதவுகளை அடைத்து வைத்து விட்டு அடையாளம் ஆனவர்கள்.
தேசம் தேசம் என்று எல்லாமே இழந்தவர்கள்!
தங்கள் மேனிகளை
கண்ணிமைக்கும் பொழுதில் காணிக்கை ஆக்கியவர்கள்!
எல்லா ஈழத்தவர் எண்ணத்தையும் தாமே அணைத்துக் கொண்டவர்கள்!
அன்றைய பாசறைப் புயல்களை இன்று
பாதுகாப்பு சுவர்களாய்
இதயங்களிலே
கட்டி வைத்துள்ளோம்!

அசைக்கபடுவதில் உங்கள் அசைவுகள்
உங்கள் ஓர்மத்தை எங்களிடம் விட்டுச் சென்றதால் விம்மி வெடிக்கின்றோம்!
கந்தகக் காற்றை சிந்திக்க முடியவில்லை பந்தையத்திற்கு போட்டிபோடுகின்றோம்!
தேசம் என்று எல்லாமே சிதைந்து போனது..
பாசம் என்று எல்லாமே அறுந்து போனது..
ஆனாலும் நாங்கள்
உம்மை தேடுகின்றோம்!
கோசம் போடாத
கவசங்களை கற்பனையில் பார்க்கின்றோம்!
தேசம் தேசம் என்று தேகம் தேய்ந்து போனவர்களே
உங்களைத்தான் உங்களைத்தான்
வணங்குகின்றோம்!

அசைந்து கொடுக்காத ஆலமரங்கள் கூட சிதைந்து போனது எம் வாழ்க்கையில்!

திசைதிருப்பும் முயற்சிகள் அசைத்து கொடுத்தது ஆனால் அசைக்கப்படவில்லை.
எல்லாம் இழந்தவர்களாய் நீங்களும் நாங்களும் நிச்சயமாக நிற்கிறோம்!
ஒன்று இரண்டு அல்ல
ஓராயிரம் ஈராயிரம் அல்ல
ஜம்பதாயிரத்திக்கும் மேலானவர்கள்
அக்கினியில் உறைந்தவர்கள்!
கல்லறையில்
படுத்திருப்பதுபோல
தெரியலாம் ஆனால் விடுதலைக்கு காத்திருப்பவர்கள் நீங்கள்!
அவர்கள் துயில்கொள்ளவில்லை
சுதந்திர வீரர்கள் எப்போதும் துயில் கொள்வதில்லை!

ஒவ்வொரு மரணத்தின் பின்னால் இருக்கும் கதைகள் ஏராளம் அந்த நொடிகளில்
சொல்ல தோன்றிய கதைகளும் தாராளம்!
ஆனால் அதை கேட்ட அயல் காதுகள் எங்கே போனார்கள்
வெளிநாடுகளில் வியாக்கியானம் பேசலாம்
வித்தைகள் செய்யலாம்!
உங்கள் மோதிரத்தின் முத்துக்கள் நவம்பர் இருபத்தேழுக்கு உரியவர்கள்
அச்சு அசலாக தெரியும் பாருங்கள்!
உங்களுக்குள் இருக்கும் இதய முழச்சுகளை அவிட்டாவது விடுங்களேன்..
அடுத்த தலைமுறை யானும் அறியட்டுமே!
மறக்க வேண்டாம் இறுதி நொடிகளின் கதைகள் ஏராளம்...
இறுதி மூச்சில் எழுந்த கதைகள் தாராளம் நீங்கள் எடுத்துச்சொலுங்கள்!
எமக்கு தெரிந்தது ஒன்று தான் அவர்கள் நாட்டற்காக மரணித்தார்கள் என்பதே
ஆனால் அவர்கள் மரணத்தின் சுவையை சுவைத்தவர்கள்!
அந்த சுவையை சுதந்திர வேட்டையை பேசுங்கள்
நீங்களும் கதிரை சுக பிசாசு பிடித்து அலைவதில் அர்த்தமில்லை!
நீங்கள் நடத்த கதாபாத்திரங்களை நீங்கள் இழந்து போனதால்
இப்போது அந்தக் கதாபாத்திரம்
இன்னொருவருக்கு உரியது!

உங்கள் கதாபாத்திரத்தை உங்கள் கையில் இருந்து விட்டு கொடுங்கள்..
உங்கள் உயரிய பண்புகளை இந்த காலத்தில் விளைய செய்யுங்கள்!
தற்போது நீங்கள் விதைப்பவர்கள்
அறுப்பவர்கள் அல்ல
அதை அடுத்த சந்ததியே அறுவடை செய்யும்!
புரிந்து கொள்ளுங்கள் உங்கள் புத்திசுயாதீனத்தை
யாரும் அறியமுடியாது அத்தியாயம் கொண்டவர்கள்!
சிரித்த முகத்துடன் சிலர் போனார்கள்
இலக்கு ஒன்றுதான்
வெறுத்த முகத்துடன் சிலர் போனார்கள்!
ஓய்வு இல்லைதான் ஆனால்
ஒர்ம முகத்துடன் சிலர் போனார்கள்..
ஓவியம் போலவும் சிலர் போனார்கள்..
அவர்கள் எம்மை விட்டு போக வில்லை!
நாம் விடுதலை பெற்றுவாழ
அவர்கள் உயிரை கொடுத்து விதையானார்கள்!

அவர்கள் கதிரைகளை விட்டு செல்லவில்லை கடமைகளை உங்களிடம் விட்டு
சென்றார்கள்!
நாங்கள் பஞ்சுமெத்தையில் படுத்துறங்க அவர்கள் தங்கள் உயிர்களை கொடுத்-
தவர்கள்!
அவர்கள் உயிரை மாய்த்துக் கொள்ள ஒரு நிமிடமும்
விம்மி அழுததில்லை
வியாக்கியானம் பேசவில்லை!
பழுவை பாரமாக கருதவில்லை
தொழுது வாழவில்லை
யாரையேனும் தொந்தரவு செய்யவில்லை!
சுமைதாங்கிகள் போல தேசத்தின் சுமைகளை தாங்கிச் சென்றவர்கள் அவர்கள்
சுதந்திரம் வேண்டி நிக்கும் மாவீரர்கள்!
அவர்கள் அனைவருக்கும் மலர் வணக்கம் செலுத்துகின்றோம்!

-எழுத்து சுந்தர்-


Residential, Commercial, Refinance ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8



கருத்தரிக்கும் கல்லறைகள்

கண்ணீர் பெருக
கைகால்கள் சோர்ந்து விழ
உள்ளிருக்கும் நெஞ்சம்
உடைந்து சிதறியழ
மண்ணிருக்கும் காந்தள்
மலரெடுத்துக் கார்த்திகையில்
விண்ணிருக்கும் மாவீரா- உனக்காக
விளக்கேற்றும் நாட்களிது !

மண்ணுரிமை காக்கவென
மாவுயிரைத் தந்தீர்கள் !
பெண்ணும் ஆணுமென
பெருந் தியாகம் செய்தீர்கள் !
கண்ணாகத் தமிழ்காத்துக்
காவியமாய் போனீர்கள் !
புண்ணான நெஞ்சோடு இன்று
பூ வைத்து அழுகின்றோம்.

உள்ளுறங்கும் பிள்ளைகளே
உங்கள் கல்லறைகள் கூடக்
கருத்தரிக்கும் என்று
கொள்ளியிட்ட எதிரியை இன்றும்
குலை நடுங்க வைப்பதனால்
தள்ளி அடித்துடைத்துக்
கல்லறையைக் கிளறுகின்றான்
வெள்ளியாய் நீங்கள் மின்னும்
விந்தை அவன் அறிவானா??

தமிழர் தியாகத்து வேள்வித்
திரியாகி ஒளிர்பவரே
வேற்றவரும் போற்றுகிற
வீர வரலாற்றின் நாயகரே
வாழ்வென்றால் போராடு
விடுதலையை வென்றாகு -என்ற
மரணத்தை வென்ற மாமறவர் நீங்கள்
மண்ணின் மடிவெடித்து மறுபடியும் பிறப்பீர்கள் !
விட்ட இடமிருந்து விழுதுகளை எறிவீர்கள்!!

-மா.சித்திவினாயகம்-

RESIDENTIAL SECURED MORTGAGES
PURCHASE AND REFINANCE
Commercial & Residential
"Every great business is built on friendship"
CALL FOR FREE CONSULTATION OR VISIT MY OFFICE



T.Antony Ponrajah
Mortgage Agent License: M08004007
Brokerage License # 10216
416.457.0651
Email: antonyres@gmail.com
40 New Delhi Dr. Unit 107A, Markham ON, L3S 0B5 | Tel: 416431.5115

We can arrange COMMERCIAL MORTGAGES with 10% down

DON'T FORGET, WE CAN CLOSE YOUR RESIDENTIAL MORTGAGE WITHIN 48 HOURS



வேலுப்பிள்ளை என்ற மேன்மையுறு

சான்றோனுக்குப்
பிறந்த செல்வ மகனே
வல்வையில் உதித்த
வீர மறவனே
மண்டியிடா வீரத்தை
யாரும் தீண்ட முடியாது என்று
உலகிற்கு கற்பித்தவனே
உயிரிலும் பெரிதாம்
மொழியின் பற்றுதலினால்
உயிரும் தமிழும்
எங்கள் மூச்சென்று
அடங்கா வீச்சு கொண்டவனே
மண்ணின் வீரம் செறிந்த
வீரத்தின் விளை நிலமே
விதி என்று சொன்னார்கள்
எதிர் மதி கொண்டு
புலிப் படைகள் கட்டினாய்

நறுமலர் பூவெடுத்து
குறு முல்லைப் பூ சேர்த்து
நாள் தோறும் சூட்டி நறுந்தேன்
தமிழ்ச் சொல்லை
பல்லாண்டு வாழ்கவென
படைக்கின்றோம் நல்வாழ்த்து

வீரத்தின் மகுடமானாய்
தொலைநோக்கு நூலானாய்
பணிவுக்கு மலரானாய்
பகைமைக்கு வாளானாய் -நம்
நெஞ்சுக்கு உரமானாய்
நினைவுக்கு ஒளியானாய்
உன் அகவையின்று
அகமினிக்க எனர் வாழ்த்து
பல்லாண்டு வாழ்கவென
படைக்கின்றோம் நல்வாழ்த்து

பூத்த விழிகள்
அழுததில்லை - தலைவன்
காத்த வீரம்
அழிந்ததில்லை - பகைமை
முட்டிய படைகள்
வென்றதில்லை - புலி
கொட்டிய முரசம்
ஓய்ந்ததில்லை
நீயே ஒருவனானாய்
காத்திருந்த மண்ணின்
மைந்தனானாய் - தமிழ்
மனங்களில் வாழும்
தலைவனானாய்
உன் அகவையின்று
அகமினிக்க எனர் வாழ்த்து
பல்லாண்டு வாழ்கவென
படைக்கின்றேன் நல்வாழ்த்து

கால் பிடித்து வால் பிடித்து
கைகள் குவித்து நின்றவரை
வாள் எடுத்து வில் தொடுத்து
வேல் பிடித்து வென்றெமது
மானத்தைக் காத்த
மற வேங்கைகளின்
வேந்தே
வாழ்த்துகின்றேன் நூறாண்டு
நீவிர் வாழ்கவென
எம் மூச்சின் தலைவனுக்கு
இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்
பல்லாண்டு வாழ்கவென
படைக்கின்றேன் நல் வாழ்த்து

மாவீரர்களின் இறுதி
மூச்சிலிருந்து
மரணிக்காது வெளியேறிய
துப்பாக்கிக் குண்டுகள்
போய் வருவார் வீரர்
பொய்க்காத வெற்றிப்
பொழுதுகளில் உதித்த
கார்த்திகை மைந்தனே
தமிழ் சார் புகழ் கொண்ட
பெருமகனே
தமிழன்னை பெற்றெடுத்த
தலை மகனே
புலிப்படை அணிகலனே
திருமகனே

காற்றுள்ள காலம் வரையில்
வாழ்த்துவோம்
கடல் உள்ள காலம் வரையில்
வாழ்த்துவோம்
நிலமுள்ள காலம் வரையில்
வாழ்த்துவோம்
நீர் உள்ள காலம் வரையில்
வாழ்த்துவோம்
நிலாவுள்ள காலம் வரையில்
வாழ்த்துவோம்
வான் உள்ள காலம் வரையில்
வாழ்த்துவோம்

தலைவா
உந்தன் அகவையின்று
அகமினிக்க எம் வாழ்த்து
பல்லாண்டு வாழ்கவென
படைக்கின்றோம் நல்வாழ்த்து

henpulolyoor Krishnalingam
Krishna Live Telecast
Cell: 416 565 6278

With best compliments from
ஞானம்ஸ் ஸ்ரூடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
- Family Portraits
- Children Portraits
- Business Portraits
- Passport & Citizenship Photos
- Classic Weddings
- Arangetram
- Puberty Ceremony
NEW Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 Eglinton Ave.East Scarborough, ON, M1K 2S2 (Brimley & Eglinton)





வழிகாட்டத் தலைவன் உண்டு - எங்கள்
வலிபோக்கும் மறவன் என்று
ஒளிகாட்டும் இறைவன் என்றோ-உம்மை
விழிபூத்து காத்து நிற்கிறோம்"

61ம் அகவையில் அகிலம் வியந்த அண்ணனுக்கோர் வாழ்த்து"

கார்த்தகை இருபத்தியாறு..-எம்
உறவெல்லாம் ஒன்றாகி கூத்தாடும்
பார்த்தீபன் பிறந்த நன்நாள்.

ஆண்ட பரம்பரை
காலமெல்லாம் கைகட்டி
ஆள வழியின்றி வாய் பொத்தி,
தலைகுனிந்து அடிபணிந்து-எம்
ஈழ மண்ணையும் விலைபேசி -சேற்றில்
உழும் எருமை மாடுகளாய் -எதிரிமுன்
மண்டியிட்ட தமிழருக்கு
வாழ நெறிகாட்டி-அவன் மாண்புதனை
நிலைநாட்ட வந்துதித்த
ஆண்டவனின் அவதார நாள் இன்நாள்...

வல்வை மண் அன்று - எம்
தொல்லை அழித்திடவென்று
நல்லான் எங்கள் நாயகனைத் தந்திட்ட
பொன்நாள் இன்று...

எங்கள்,
வலிபோக்க வந்த அருமருந்தாய்-எங்கள்
கலி நீக்க பிறந்த வேங்கை... - எமக்கு
விடியாதா எனநாம் விழிமூடிக்கிடக்க - எங்கள்
விடியலாய் ஒளிதந்த விடுதலை வேந்தின்
ஜனன நாள் இன்று.

கோடரிக்காம்புகளாய்மாறி-அன்றெம்
வீடெரித்த பேய்களையும்
கொள்ளிகொடுத்த கொடுவாள்களையும்
பாடையில் ஏற்றிட -பாசறை மேவிய
எம் தேசத்து புதல்வனின் திருநாள் இன்று.

குட்டக்குட்ட குனிந்த தமிழனை
நெட்ட நிறுத்தி...
குட்டியவன் கைகளை வெட்டியெறிந்தும்
"கொட்டி கொட்டி"என்று பகைஎட்டி ஓட-எம்
பட்டி தொட்டி எங்கும் பகல் சமைத்திட்ட
ஈழவேந்தின் இனிய நன்நாள் இன்று.....

தன்னினம் காத்திட தன்னலம் மறந்து...
மண்ணினை மீட்டிட மகிழ்வுகள் துறந்து...
விண்ணிலும் பெரிய விரிமனம் கொண்ட
விடுதலை வேங்கையின் பிறந்தநாள் இன்று.

எங்கள் இருள்போக்கி - உலகில்
நாங்கள் வாழவழிகாட்டி
எங்கும் பரந்துவாழ் தமிழரின் உரிமை நிலைநாட்டி
உலக மேடையில் அவன் பேச உரிமைதந்த
மங்களநாயகன் அவதரித்த இனியநாள் இன்று.

இனவெறி மமதையில் கொலைவெறியாடிய
ஈனரின் மமதைகள் அடக்கி
மானத்தமிழரின் மாண்புமிகு வீரத்தின்
தானைத் தலைவனாய் தனிநாடமைக்க
வேங்கையாய் குதித்த தனிப்பெரும் தலைவன்
வந்துதித்த நனிசிறந்த பொன்நாள் இன்னாள்.

தமிழரெல்லாம் "நான் தமிழன்" என்று



தலை நிமிர்ந்து சொல்லவென்று
வான்படையும் கண்ட தமிழ்ப்
பெருமறவன் பிறந்திட்ட பெருநாள் இன்று.

சிங்களவன் சினம்கொண்டு
சீறி எழ முடியாது...
பதுங்கி அவன் பாழிருட்டில்
பாய்யிட்டு ஒதுங்கிடவே - போர்
பறைசாற்றி பகைவிரட்ட பாய்ந்திட்ட
பெருவீரனின் திருநாள் இன்று.

தம்பி என்பார் சிலர் - எங்கள்
அண்ணன் என்பார் பலர்... அன்பின்
மாமா என்றே மழலையரும் - எங்கள்
மாபெரும் தலைவா என்றே உலகத் தமிழினமும்,
விழித்திடவே நீ வாழ்க வாழ்க...

பெற்றவரும் உற்றவரும்
பெருமைகொள்ளும் தமிழ்மகனாய்,
கொற்றவரும் வித்தகரும்
வியப்புறு தலைமகனாய்,
எத்திசையும் உன்பெயரை
உச்சரிக்கும் உருத்திரனே
வாழ்க நீ வாழ்க...

வாழ்கவென்று உனை வாழ்த்த - என்னை
வாழ வழிதந்த எம் தாய்மண்தந்த பெருந்தலைவா
வாழ்க நீ பல்லாண்டு வாழ்க...

- தம்பி
ஈழப்பிரியன்





எரிமலை நெருப்பை சுமந்தவன்

எரிமலை நெருப்பை சுமந்தவன் - அவன்
எரிகிற நெருப்பாய் பிறந்தவன்
மின்னல் இடியாய் மின்னியவன் - பெரும்
இன்னலை வெடியாய் விரட்டியவன்
தமிழர் இனத்துக்கு தலைமகன் - புதிய
திசையை காட்டிய எம் தலைவன்

விடுதலை கனவைத் தீட்டியவன் - இன
கொடுமையை தடுக்கிற வீரனவன்
முப்படை முதலில் கட்டியவன் - புலி
எப்படை வரினும் முட்டியவன்
உலகத் தமிழரை சேர்க்கிறவன் - ஒரு
புள்ளியில் புலிகளை இணைக்கிறவன்

புல்லையும் போர்வாளாய் மாற்றியவன் - தமிழ்
பிள்ளைக்கு உணர்வை ஊட்டியவன்
துவக்கின் விழிகளில் சீறியவன் - ஒரு
இலக்கின் வழிகளில் பேசியவன்
கிழக்கின் சிவப்பாய் மாறியவன் - ஒளி
விளக்கில் விடியலை மாற்றியவன்
ஈழ யாழினை மீட்டியவன் - எம்
இளையோர் கூட்டத்தை மீட்கிறவன்
தமிழர் மனதினில் ஏறியவன் - இன
உணர்வை நரம்பினில் ஏற்றியவன்
வில்லையும் சொல்லையும் ஏந்தியவன் - போர்
எல்லையில் வென்றிட முந்தியவன்

செயலின் வடிவில் ஊறியவன் - ஒரு
புயலின் நிறமாய் மாறியவன்
உலகத் தமிழரை சேர்க்கிறவன் - ஒரு
புள்ளியில் புலிகளை இணைக்கிறவன்
அன்றும் இன்றும் என்றும் இவனே
எங்கள் மானத் தலைவன் !
இருந்தான் இருக்கிறான் இருப்பான் இவனே
எங்கள் வீரத்தமிழன்!

CHRIS BREAD BAKERY
Fresh Bread Baked Daily Tamil Eelam Style
Come in for all your Tamil Eelam Food catering services available
2617 Eglinton Ave. E, Toronto ON. M1K 2S2
Tel: 416-BOS GUYS (267-4897) | www.chrisbreadbakery.com



அவனுக்கு ஈடினை அவன்தானே

தமிழும் இவனும் வரம்தானே.
தம்பியாய் வந்தானே
தலையனாய் மாறினானே
அண்ணனானாய் நீனிறுவனே
எங்கள் தலைவனாய் ஆனானே
கண்ணனாய் வெளிறுவனே
கர்ணனாய் தந்தவனே.

மனனனாய் வாழ்கிறானே
மனங்களை ஆழ்கிறானே
தமிழர் மனங்களை ஆழ்கிறானே.

சென்னறுவனே
பாதையை
கண்டவனே யாரடா?
அந்த செல்லலின் செம்திமை
சொல்பவனே யாரடா?
நீ கவைபட கூறடா
கவிருனே கவிருனே
கவிதையை பாடடா

நீ சோழனின் அம்சமா
பாண்டியர் வம்சமா
மு வேந்தர் அணியிலே
நீ புது வேதமலிலவா.

கார் குழல் கண்ணனா
கரிகால மன்னனனா
பிரபாகரன் என்பதால்
சிவனோடா பாதியா
அது உன் சோதி.

உன்னத்தில் நீமிருக்க
உன்னை நம்பி கவி தொடுக்க
தென்ரு தமிழ் சுடுதையா
தெம்மாங்கு பாடுதையா
ஆதவன் தோன்றுவான்
பகலவன் மறைகிறான்
மனிதர்கள் பார்வையில்
வருகிறான் போகிறான்

இன்றுனது பிறந்தநாள்
என்றிவர்கள் கூடினார்
என்றும் நீ பிறந்த நாள்
எவரிதனை உணர்கிறார்
உணர்வுன்ன தமிழர்கள்
உணர்வாய் நீ இருக்கிறாயா.

பகலில் நீ சூரியன்
இரவில் பார் குளிர் நிலா
ஒடையில் காண்கிறேன்
உன் முகம் ஒளி நிலா.

அழகான கவிதையே
கரிகாலன் எங்களின் பருதியே
விடி காலை சூரியன்
அதிகாலை தோன்றினாள்

தமிழ் மாந்தர் வாழ்விலே
புது வரலாறு எழுதினாள்
அவதாரம் இவனென
உணர்ந்தே கவிருன் கவிபாடி ஆடினாள்

அரிதாரம் நீங்கிய
புது அவதாரம் ஆனானே
ஆயிரம் கவிருர்கள்
அண்ணனை பாடினார்
அழகு தமிழ் நடனமே
மயிகனே ஆடினார்
பூவைகளின் நடமும்
புருசர்களின் வதனமும்

காவலை போற்றிடா
கவிருனும் வாழ்த்தினான்
அண்ணனுக்கு அகவை
அறுபத்தி எட்டு

எங்கள் எண்ணமெல்லாம்
மன்னனுக்கு இருபத்தி ஒன்று.
உலகம் உன்னவரை வாழ்க நீ என்று
உண்மை வரலாறு நீங்க நீ என்று.

எங்கே எங்கே என்று
எங்கள் மக்கள் தேடும்
இரண்டு பெயர்கள் உண்டு

ஒன்று பரம் பொருளான
அந்தப் பாராபரன்
இன்னொன்று அரும் பொருளான இந்தப் பிரபாகரன்.

கவிதை.
புதுவைதாசன்.
ம.முல்லைமதி



என் உயிருக்கு இன்று பிறந்த நாள்

உயிரற்ற ஜடமாக ஏங்குகிறேன்
இங்கே...
உன்னை அள்ளி அணைத்து முத்-
தமிட்டு வாழ்த்துச் சொல்ல ஆசை
அண்ணா
உன் புகைப்படத்தின் முன்னால்
நின்று புலம்புகின்றேன் இங்கே
என் புலம்பல் உன் செவிகளில்
வந்து விழுகிறதா அண்ணா
ஒரு கணம் கலங்கினாலும் மறு கணம்
உறுதி கொள்கிறேன் அண்ணா
உன் வளர்ப்பில் வீரத்தையே எமக்கு
ஊட்டி வளர்த்தாய், அதனால் தான்
என்னவோ துயரமும் தூரமாகிறது
ஒரு நாள் உன் மடியில் தலை சாய்த்து
உனக்கு வாழ்த்துப் பாடுவேன்
அதுவரை உன் வரவை எண்ணிக்
காத்திருப்பேன் என் உயிர் அண்ணா
பிறந்த நாள் வாழ்த்துக்களோடு

உன் அன்புத் தங்கை
எஸ். றதன் கார்த்திகா.





தோல்விகளை சேர்த்து வேள்வி செய்தவன் ..!

மொழி சாக மொழிசாக நீ முழங்கினாய்
இடி மின்னலாக - இருள் மூட இருள்
மூட நீ விரிந்தாய் இளம்சூரியனாக

தடைபோட தடைபோட நீ உடைத்தாய்
உயிர் தமிழ்வாழ சதிசெய்ய சதிசெய்ய
நீ புதுவிதிசெய்தாய் சர்வேஸ்வரனாக

இடர்கூட இடர்கூட நீ எதிர்த்தாய்
இனசூரனாக வலிகூட வலிகூட
நீ புலியானாய் புதுவாலிபனாக

இழிபேச இழிபேச நீ எழுந்தாய்
இன்னும் இரட்டிப்பாக பகைமோத
பகைமோத நீ வளர்ந்தாய் பரந்தாமனாக

நீ துயரங்கள் சேர்த்து உயரம் அடைந்தவன்
தோல்விகளை சேர்த்து வேள்வி செய்தவன்
அயராது உழைத்து எங்கள் அண்ணாணைவன்
அடிபணியாது தணித்து நின்று
தமிழன் அடையாளம் ஆனவன்.



High Efficiency
Heating & Cooling Air Solutions
Repair & Service & Installation
Kumar - 416.993.8001
Upgrade to High Heating furnaces SAVE UPTO 40% ON BILLS
FREE upgrade of you old water heater to Tankless
ALL MAKES & MODELS
Lennox, Trane, Carrier, Payne, Goodman,
Keeeprite, Attic Insulation
24/7 HOURS SERVICE



வரலாற்று நாயகன் எங்கே.....!

நந்திக்கடலே நீ சொல்லு
நாப்படை கட்டிய
நற்றமிழர் வேந்தன் எங்கே...!

வன்னிக்காடே நீ சொல்லு
வாழ்வழித்த
பெருந்ததலைவன் எங்கே...!

வங்கக்கடலே நீ சொல்லு
வரம் தந்த
வரலாற்று நாயகன் எங்கே....!

முல்லைமண்ணே நீ சொல்லு
முந்தையர் வீரத்தை
மீட்டெடுத்த
மானத்தலைவன் எங்கே....!

- தலைவனுக்காய் காத்திருக்கும்
தமிழ்மகன்

Hopper Hut
Feel the Taste
Tel : 416.299.4311
880 Ellesmere Road, Unit #217,
Scarborough, ON.M1P 2W6
HOPPER HUT

வரலாற்று நாயகனே...!!
புறநானூற்றின் பெருமகனே !!!

தேசத்தின் தலைமகனே
எங்கள் பிதாமகனே!

புறநானூற்றின் பெருமகனே
ஈழத்து வேந்தா!
கலியுகத்தின் கரிகால சோழனே
தமிழீழத்தின் பிரபாகரா!

வேலுப்பிள்ளை பெற்ற மைந்தனே
வேல் கொண்ட வேலாயுதா!
தரணியெங்கும் தடம்பதித்த வீரனே
தேசத்தின் தேசத்தலைவா!
மக்கள் மனதில் இடம்பிடித்தவனே
வல்வையின் தவப்புதல்வா!

முப்படை கண்ட வீரத்திருமகனே
ஈழத்து இராவணா!
ஆதியும் அந்தமுமில்லா சோதியனே
வானத்து சூரியதேவா!
அனைத்தும் அறிந்த சகலாகலா வல்லவனே
எங்கள் தாயுமானவரே!
யாரும் அறியாத காலத்துக் கணிப்பாளனே
விடியலின் விடிவெள்ளியே!





iConnect Mortgages

The best time for new beginnings is now.

#iConnect #mortgages #renewal #newbeginning

High Standards, Low Rate Mortgages

DARSHAN SRITHARAN, Mortgage Agent

CELL: 416.836.0345 I OFFICE: 416.291.4555 I FAX 416.298.1414 | darshan@iconnectmortgages.ca | www.darshens.ca

Independently Owned & Operated | FSCO #12825



தேசியத்தலைவர் வாழ்க.

மாவீரன் நேதாஜியை நேசித்தவன் நீ
மாவீரன் நேதாஜி போலவே நினைத்தாய் நீ I
நீ இருக்கிறாய் என்றும் இல்லை என்றும்
நாட்டில் பட்டிமன்றங்கள் நடக்கின்றன I

நீ யாரை மாதிரி ஆம் இருந்தாலும்
இறந்திருந்தாலும் மதிப்பு மிக்கவன் நீ I
நீ இன்னும் இருக்கிறாய் I என்று
நாளும் அச்சத்தில் சாகிறான் பகைவன் I

நீ இன்னும் வாழ்கிறாய் I என்று
நாளும் மகிழ்வில் வாழ்கிறான் தமிழன் I
சிங்கள அதிகத்தை என்றும் எதிர்த்தாய்
சிங்கள் மக்களை என்றும் எதிர்த்ததில்லை I

கடவுளை நம்பாத நாத்திகர்களும்
கனிவோடு உன்னை நம்புகின்றோம் I
புழுவாக இருந்த இலங்கைத் தமிழனை
புலியாக மாற்றிய மாவீரன் நீ I

கொட்டக் கொட்ட குனிந்தவனுக்கு
திருப்பிக் கொட்டிட கற்பித்தவன் நீ I

புறநானூற்று வீரத்தை படித்தோம்
புதிய வடிவில் எழுத்தில் பார்த்தோம் I
எட்டு நாட்டுப் படைகளோடு வீர
எட்டு வைத்து போராடியவன் நீ I

துரோகம் உன்னை தோற்கடிக்கவில்லை
துரோகம்தான் உன்னிடம் தோற்றது I
இருக்கிறாய் என்பதற்கும் இல்லை என்பதற்கும்
இவ்வுலகில் சாட்சிகள் இல்லை இன்று I

உலகத்தமிழர்கள் உள்ளங்களில் என்றும் வாழ்கிறாய்
உலகம் முழுவதும் சாட்சிகள் உண்டு I
பகைவர்கள் துரோகிகள் மனசாட்சி இன்றும்
பயத்தோடு உன் வீரம் பாராட்டும் I

தனித்தமிழ் ஈழம் விரைவில் மலர்வது உறுதி
பிரபாகரன் தேசம் பெயர் சூட்டுவதும் உறுதி I
புரட்சியாளர்களுக்கு பிறந்த நாள் உண்டு
புனிதர்களுக்கு இறந்த நாள் இல்லை I

ஐயப்பன்குறோசறீஸ் IYAPPANS GROCERIES
தரமான பொருட்கள் - நியாயமான விலை - அன்பான உபசரிப்பு
SRI LANKAN, INDIAN GROCERIES, FRESH FISH, MEATS & VEGETABLES
Bus: 416.636.0884 Cell: 647.822.3661
2877 Jane Street,
North York ON
M3N 2J5 (Jane & Finch)



பிரபாகரன் என்னும் மாவீரர்

“அரச ஒடுக்குமுறை கட்டுக்கடங்காமல் உக்கிரம் அடைந்து; அதன் தாங்க முடியாத கொடுமைகளை எமது மக்கள் சந்தித்த போது தான்; வரலாற்றின் தன்னியல்பான விதியாக எமது விடுதலை இயக்கம் பிறப்பெடுத்தது.”

– தமிழீழ தேசியத் தலைவர்.

தன்னியல்பான விதி பிறக்கும் சூழ்நிலையை, உலக விடுதலைப் போராட்டங்களின் மீதும், கடந்த வரலாறுகளின் மீதும் கூர்மையான நுண்ணுணர்வு கொண்டவர்களால் மட்டுமே அவதானிக்க முடியும். அவதானித்தார் பிரபாகரன் என்னும் மாவீரர்.

தங்களின் மூதாதையர்களான திராவிடப் பழங்குடிகள் நிறைந்து வாழ்ந்த இலங்கைத் தீவினை, சிங்களர்களின் தேசம் என்று பௌத்த மதவாத பிக்குகள் நிலை நிறுத்திய வரலாற்றுத் திரிபினை அறிந்த போது தான் தன்னியல்பான விதி முதன் முதலில் தேசியத் தலைவரின் நெஞ்சினில் உருக்கொண்டது.

இலங்கை, காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பின்பு சிங்களப் பேரினவாதத்தின் ஆதிக்கம் தமிழர் பகுதிகளை விழுங்கத் தொடங்கியிருந்த காலகட்டம் அது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் பறிக்கப்பட்ட தமிழர்களுக்கான நிலப்பகுதிகளை தக்க வைத்துக் கொள்ளும், மறுக்கப்பட்ட உரிமைகள் கோரும் அறவழிப் போராட்டங்கள் தமிழர்களால் தொடர்ந்து நிகழ்ந்தது. சிங்களப் பேரினவாத அடக்குமுறையால் அமைதி வழி வலுவிழந்து போகும் சூழலில் தான் வரலாற்றின் தன்னியல்பான விதிக்கு ஆயுதத்தால் வடிவம் கொடுத்தார் தமிழீழ தேசியத் தலைவர்.

சிங்களக் கட்சிகளிடையே நடந்த ஆட்சி பிடிக்கும் ஆசைகளுக்காக, ஈவிரக்கமற்ற சிங்களப் பயங்கரவாத அரசக் கட்டமைப்புகளாலும், பௌத்த மதவாதிகளாலும் தூண்டி விடப்பட்ட சிங்களப் பேரினவாதத்திற்கு பலியாக்கப்பட்டது தமிழினம். அமைதியே வாழ்வியலாக வரித்து வாழ்ந்திருந்த தமிழினம் அனுபவித்த வலியே வரலாற்றின் தன்னியல்பான விதியான விடுதலை இயக்கத்தை உருவாக்க அவரைத் தூண்டியது.

“கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக் கட்டமைப்பைத் தாங்கும் தூண்கள்” என்கிற குறிக்கோளுடன் விடுதலைப் புலிகளை வழி நடத்திய சீரிய தலைமைப் பண்பாளர் அவர். சிங்கள அரசின் தரப்படுத்துதல் சட்டம் தமிழினத்திடமிருந்து கல்வியை பறித்தது. ஆனால் தமிழீழத்தில் விவசாயத்திலிருந்து விமானத் தொழில்நுட்பம் வரை தன்னிறைவு பெறும் கல்வியாக தேசியத் தலைவரால் தான் வாய்த்தது.

கலை, இலக்கியம், ஊடகம் என எங்கும் தமிழ், எதிலும் தமிழென தமிழ் அங்கு தான் நிறைந்தது. முப்படைகள் வரை தமிழ் பெயர்கள் எங்கும் வியாபித்தது. வெறும் விழாக்களைத் தலைமுறையாக கடத்துவதில் மட்டுமில்லை பண்பாடு. எளிய மக்கள் எந்த வித அச்சமும் கொள்ளாது நிர்வாகத்தை வழி நடத்தும் பொறுப்பில் இருப்பவர்களிடம் அணுக முடிகிறதோ, கேள்விகள் கேட்க முடிகிறதோ அந்த இடத்தில் தான் உண்மையான தமிழர் பண்பாடு நிலை கொண்டிருப்பதாக சொல்ல முடியும். அதனை அங்கு உருவாக்கிக் காட்டினார் தேசியத் தலைவர்.

காவல் துறை, நீதித் துறை, வங்கிகள் என அனைத்து அதிகாரங்களும் மக்கள் அணுகும் வண்ணம் பிரம்மாண்டங்கள் ஏதுமின்றி எளிமையாக செயல்பட்டது. நிலம் தக்க வைத்துக் கொள்ளும் இனமே இறையாண்மை உடைய இனமாக வாழும். இறையாண்மையில் துளியும் சமரசம் கொள்ளாமல் நிலம் மீட்க சமர் புரிந்த மாவீரர்களை வழி நடத்தி, பெரும் ஆயுத பலம் கொண்ட சிங்கள ராணுவத்தை விரட்டிய வெற்றி நாயகன் அவர். இனக் கட்டமைப்பின் தூண்களை தங்கள் உள்ள உறுதியால் தாங்கி நின்ற தீரர்களின் தலைமையாக ஒரு தன்னாட்சிப் பிரதேசத்தை, உலகத்தின் மனித மாண்பாளர்களே வியக்கும் வண்ணம் நடத்திக் காட்டியவர்.

இந்த தன்னாட்சியைக் கண்டு மனித நேயர்கள் வியந்தார்கள். ஆதிக்கவாதிகள் பயந்தார்கள். இன்று இலங்கையை பங்கு போட்டுக் கொண்டிருக்கும் ஆதிக்க நாடுகள் விதித்த சமரசத்திற்கு துணை போயிருந்தால் தமிழீழம் என்றோ கிடைத்திருக்கும். ஆனால் அதன் உயிர்ப்பான நிலங்களையும், வளங்களையும் வேட்டையாடி இந்த நாடுகள் களித்திருக்கும். தாங்கள் தோற்றாலும் இந்த உயிர்ப்பை தலைமுறைகளுக்கும் கையளித்து விட்டுப் போக வேண்டும் என்று தான் சமரசத்திற்குத் துளியும் இடங்கொடுக்காமல் ஆயுதங்களை மௌனித்தார்கள் புலிகள். சிங்களப் பேரினவாதமும், இந்தியப் பார்ப்பனீய அதிகாரமும் சேர்ந்து நின்றாலும் வெல்ல முடியாத ஆன்ம பலம் கொண்டவர்களை உருவாக்கிய பேருறுதி கொண்டவர் பிரபாகரன் அவர்கள்.

ஆண்களுக்கு வீரம், தீரம் என்றும், பெண்களுக்கு சாந்தம், அமைதி என்றும் நிறுவிய ஆணாதிக்க சமூகத்தில் பெண்களும் வீரத்திற்கும், தீரத்திற்கும் சளைத்தவர்களல்ல என நிரூபித்த பேராண்மையாளர் அவர். பெரும் இலக்கான நாட்டின் விடுதலைக்கு எழுச்சி கொள்ளும் பெண்களின் முன்பு அவர்களின் உடலை இலக்காக வைத்து ஆணாதிக்கவாதிகள் கட்டி வைத்த வரையறைகள், சாதியம், மூடப் பழக்கங்கள் போன்ற அனைத்தும் உதிரும், பெண்களின் உள்ளார்ந்த அச்சங்கள் தூர விலகும் என்கிற தெளிவான கண்ணோட்டம் கொண்டு பெண்களை போராட்டக் களத்தில் ஈடுபடுத்தினார்.

நுகர்வை நோக்கிய பெண்ணியக் கூப்பாடுகளை வளர்த்தெடுக்கும் வலதுசாரித்தனத்திற்கு மாற்றாக இன விடுதலை நகர்வை நோக்கி உழைக்கும் மக்களை அணியப்படுத்தும் இடதுசாரிப் பெண்ணியவாதிகளை வளர்த்தெடுத்து, காலங்காலமாக புரையோடிப் போன பெண்ணிய அடக்குமுறைகளை வேரோடு பிடுங்கியெறிந்தார்.



ஆதிக்கவாதிகளை ஆட்டம் காண வைக்க பெண்களிடம் உறுதிகளை ஊன்றினார். ஆண்களுக்கு நிகரான பெண்களின் வீரம் சிங்கள ராணுவத்தை விரட்ட வீறு கொண்டு எழுந்தது. பல வெற்றிகளை ஈட்டித் தந்தது. கரும்புலியாகும் தன் துறப்பையும் உவகையுடன் இனத்திற்கு ஈந்தது. வீரம் மட்டுமல்ல கலை, இலக்கியங்களில், கவிதைகள் புனைவதில், ஊடகப் பொறுப்பில், நிர்வாகத் தலைமையில் என விடுதலைப் புலிகளின் கட்டமைப்புகளெங்கும் பெண்கள் நிறைந்து இருந்தார்கள். மாவீரர்களாக இன்றும் தமிழர்கள் உள்ளமெங்கும் பரவி இருக்கிறார்கள்.

“எமது மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பது சாத்தியமாயின் அதனை முழு மனதுடனும், நேர்மையுடனும் தயாராக இருக்கிறோம்” என்றவர் அவர்.

நேர்மையான சமாதானம் அவருடையதாக இருந்தது. மேற்பூச்சு சமாதானம் அமைதி உடன்படிக்கை ஏற்படுத்தியவர்களிடம் இருந்தது. சிங்கள ராணுவம் புலிகளிடம் வீழ்ந்த பொழுதெல்லாம் சமாதானத் தூதுவர்கள் வந்தார்கள். போர் நிறுத்தம் ஏற்பட்டது. புலிகள் போரினால் சீர்குலைந்த பகுதிகளை சீரமைத்தார்கள். மக்கள் வாழ்வியலை மீளக் கட்டமைத்தார்கள். ஆனால் சிங்களப் பேரினவாத அரசு சர்வதேசமெங்கும் பயணித்தது. இலங்கையின் வளங்களை அடகு வைத்து ஆயுதங்களை வாங்கிக் குவித்தது. இவற்றை குறித்தெல்லாம் தூதுவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. ஆயுதங்கள் அளித்த சர்வதேசத்தின் சூழ்ச்சிகளும், பேரினவாதத்தின்

27ம் பக்கம் பார்க்க...



Shiva Sri S . JANARTHANA KURUKKAL

உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்

TEL:647.449.6542 | aarthanan@hotmail.com aarthananyathu@hotmail.com



26ம் பக்கத் தொடர்ச்சி...

வஞ்சகமும் இணைந்து தமிழினத்தைக் கொன்று குவித்தது. போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் இலட்சியங்கள் மாறாது என்ற தங்கள் கொள்கைக்கு உயிர் கொடுத்து விட்டு ஆயுதங்களை மௌனித்தார்கள் புலிகள். எண்ணற்ற புலிகளின் உயிர் ஈகத்தோடு தனது குடும்பத்தையும் தமிழீழத்திற்காக அர்ப்பணிக்கும் தியாகச் சுடரானார் தேசியத் தலைவர்.

"மக்களுக்காக போராடுபவராக ஆயுதம் கொண்டவர்கள் அதிகாரத்தையும் கைக்கொள்கின்றனர். இந்த அதிகாரம் தவறான வழியில் வழிநடத்தப்பட்டால் அது சர்வாதிகாரத்தில் தான் முடியும். அதனால் தான் எங்கள் இயக்கத்தை மிகவும் கட்டுப்பாடும், ஒழுக்கமும் கொண்டதாக வைத்திருக்கிறோம். இரக்கமற்றவர்களுக்கு எதிராகவே நாங்கள் இரக்கமற்றத் தன்மையை கடைப்பிடிக்கிறோம்." மக்களுக்காக ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டத்திற்கும், மக்களுக்கு அச்சம் தருவதற்கு ஆயுதம் ஏந்திய தீவிரவாதத்திற்கும் இடையினில் உள்ள வித்தியாசம் தேசியத் தலைவரின் கூற்றுகள் மூலமாகவே அறிந்து கொள்ளலாம். இதனை விளங்கிக் கொள்ள முடியாதவர்கள், விளங்கினாலும் சர்வாதிகாரத்தையே தங்கள் நோக்கமாகக் கொண்டவர்கள்

இளம் வயதிலேயே வல்வெட்டித் துறை நுலகத்தில் நாளிதழ்களும், புத்தகங்களும் படிக்கும் பழக்கம் கொண்டவர் அவர். அவற்றிலிருந்த தமிழ் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை, சிங்கள காவல் துறையால் தமிழர்கள் சித்திரவதை என்கிற செய்திகள் ஒவ்வொன்றும் இரத்தத்தை கொதிக்கச் செய்தன என்றும், சாகும் முன்பு இரண்டு சிங்கள ராணுவத்தினரையோ, காவலர்களையோ சுட்டு விட வேண்டும் என்ற அந்த மிகச் சிறிய லட்சியமே வீட்டை விட்டு கிளம்ப காரணம் என்றும், அதற்கான வழியும், பயணமும் தான் தன்னினத்தின் விடிவு தமிழீழம் பிறப்பதில் தான் இருக்கிறது என்கிற முடிவெடுக்கச் செய்ததாகவும் நேர்காணல்களில் கூறியிருக்கிறார்.

குடிமக்களை எந்த வித வேறுபாடும் பார்க்காமல் காக்க வேண்டிய ஒரு அரசின் கட்டமைப்பே இனப்பாகுபாடு பார்த்து ஒரு இனத்தை ஒடுக்குமானால் அந்தக் கட்டமைப்பின் மீது ஒடுக்கப்பட்ட இனம் சீற்றம் கொள்வது இயல்பு. அந்த சீற்றத்தை ஒருமுகப்படுத்தும் வடிவமாக ஒரு தலைவன் முன் வருவான் என்பதே உலகப் போராட்ட வரலாறுகளின் விதியாக இருக்கிறது. தன்னினத்தின் மீது அளவிலா பற்று கொண்ட அவர் உணர்விலும் இந்த இயல்பான விதி பொருந்தியது. அந்த பயங்கரவாத அரசக் கட்டமைப்பின் மீது தன்னால் இயன்ற அளவு ஏதாவது செய்ய வேண்டும் என்று தூண்டியது. அவர் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்பட்டது. அந்த ஆயுதங்களையும் சிங்கள அரசக் கட்டமைப்புக்கு எதிராக பயன்படுத்தினாரே தவிர சிங்கள மக்கள் மீது பிரயோகிப்பதைக் குறித்து எந்த நிலையிலும் நினைத்துக் கூட பார்க்கவில்லை.

"பிரபாகரன் பிறப்பிலேயே வீரனென்றும், பதினைந்து வயதிலேயே தமிழீழக் கனவு பிறந்தது என்றும் கதையளக்கிறார்கள். ஆனால் எனக்கு அந்த வயதில் தமிழீழம் என்பது கூட தெரியாது. நாங்கள் தொடர்ந்த பாதையே இனி தமிழர்களுக்கான நிரந்தர விடியலாக தனித் தமிழீழமே அமையும் என்கிற லட்சியத்தை தந்தது" என்று படிப்படியான தங்கள் வளர்நிலைகள் தந்த லட்சியத்தைத் தெளிவாகக் கூறியிருக்கிறார். இன்று கதையளப்பவர்களின் முகமூடிகளை நாம் அவிழ்ப்பதற்கு ஏதுவான கருத்துக்களை முன்பே பதிவு செய்திருக்கிறார். இவ்வாறு தமிழ் சமூகத்தினிடையே வளரும் நச்சுக்களை போன்றவர்களின் குணங்களைக் கூட அறிந்த தீர்க்கமான அரசியல் பார்வை அவருடையது.

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமென்று முழங்கினார் பாரதிதாசன். அந்த வரிகளுக்கு உயிர் கொடுத்தவர் தேசியத் தலைவர். மக்கள் மீது பேரன்புடைய மனிதனே ஆயுதம் ஏந்துவான். அமைதியான, கட்டுப்பாடான குடும்பத்தில், வறுமை என்பதையும் அறியாத வீட்டினில் பிறந்து தன்னினம் உரிமையுடனும், நிம்மதியுடனும் வாழ அந்த மனிதன் ஆயுதம் ஏந்தினார். வெள்ளையரை எதிர்த்து தீரத்துடன் நின்ற பாளையக்காரர்களும் ஆயுதம் ஏந்தினார்கள். இந்திய தேசியப் படையை கட்டியமைத்து விடுதலைக்கு நேதாஜி சுபாஷ் சந்திர போசும் ஆயுதம் ஏந்தினார். அவர்களும் இறுதியில் வெள்ளையரிடம் தோல்வியையேத் தழுவினார்கள். தோல்வியைத் தழுவியதால் ஆயுதம் ஏந்திய அவர்களை தீவிரவாதிகள் என்று நமக்கு வரலாறு சொல்லித் தரப்படவில்லை. தியாகிகள் என்றே அழைக்கிறோம். ஆனால் சிங்களப் பேரினவாத வெறியாட்டத்திற்கு எதிராக, மக்களுக்காக ஆயுதம் ஏந்தியவரை, இன்று அனைவருடைய குரலையும் பதிவாக்க முடியும் என்ற நிலையை ஏற்படுத்திக் கொடுத்த செயலிகளில் புகுந்து கொண்டு நச்சுத் தன்மையுடன் பேசித் திரிகிறார்கள்.ஆனால்,தமிழினம் இந்த உலகில் இருக்கும் வரை அவருடைய வீரமும் அவர் தமிழ் இனத்துக்கு செய்த தியாகமும் மறையப்போவதில்லை.



MORTGAGE

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC
MORTGAGE ALLIANCE
RIGHT AT HOME REALTY BROKERAGE

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto, ON. M3C 1W3

RIGHT BROKER - RIGHT MORTGAGE
Lic # 10530
Corporate Office: 2005 Sheppard Ave E, Suite 200 Toronto, ON. M2J 5B4

1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9 (Markham & HWY 401)

www.mortgageclinicccanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது
416-613-2788 / 416-816-9011
ஜெ (Jey) இராசதுரை
MBA, BBA (Hon) AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
Cell: 416-624-4843





தலைவர் அகவை - தமிழர் குலவை

தலைவனுக்கு இன்று அகவையாம்...
தமிழர்கள் இடும் குலவையாம்...
ஏற்றுவோம் ஒளி தீபத்தை...
போற்றுவோம் புலி மாதத்தை...

எங்கே இருக்கிறார் எங்கள் தலைவர் என்று,
எங்கும் தேடிடும் எங்கள் தேசமே...
எங்கும் இருக்கிறார்
தங்கத் தலைவர் என்று, என்றும்
சொல்லிடும் எந்தன் பாடலே...

தலைவர் கால்தடம்– எம்
தமிழர் வாழ்விடம்...
இன்னும் நீண்டிடும்– இந்
நிலைமை மாறிடும்.

மண்ணை மீட்டிட தன்னை தீட்டிய
தமிழர் ஈட்டியே...
எம் உறக்கத்திற்காக உலகையே எதிர்த்த
உன்னத தலைவா... மறப்போமா உம்மை!

நிகழ்கால சோழனே நிறைவான வேலனே,
எறிகணை எறிந்த எதிரிக்கும் கூட இரக்கத்தை சொரிந்த இதயம்
உமது...

எம் நிம்மதியான நித்திரைக்காக நித்தமும் உழைத்த சித்திரை நீ...
சுழலும் இந்த உலகம் தன்னில்
உழலும் எங்கள் கலகம் தீர இயக்கம் கட்டிய இமயம் நீ...

பலியான தமிழனை புலியாக்கினாய்...
அறத்தின் வழியே மறத்தை காட்டி
உலகிற்கே வழிகாட்டினாய்...

இமைமூடாதுழைத்த ஈடற்ற தலைவா,
இலக்கை வெல்லும் கிழக்கை காட்டு...
வரிப்புலி உம் வரவிற்காய் விழி பூத்து நிற்கும் உலகத்தமிழரில்
ஒருவனாய்... அகவை தின வாழ்த்து சொல்லி
அகம் மகிழ்கிறேன்.

திருப்பூர் சுடலை
மாநில கொள்கை பரப்பு செயலாளர்,
தமிழக வாழ்வுரிமைக் கட்சி.
இந்தியா.

J.R.B
GROUP CORPORATION
Best Rate Mortgage Arranged
Almost All Services Available
அனைவரும் வீடு வாங்க
சிறப்பான சேவை...

R.R.Rajkumar B.Com (Hons) M.B.A
BUSINESS LOAN 25 K to 500,000 New Business
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள சகல வர்த்தகருக்கான சிறப்பான சேவை
Welfare, ODSP, Medical visit translation services
* Loans * Mortgages
* Insurance * Visa * Real Estate
* Credit Counseling
* Master Card
647-289-6164
416-655-5577



தமிழினத்திற்கு
மீண்டுமொரு தன்மானம்
பிறந்தநாள்
போலித் தமிழ்த் தலைகள்
கூனிக் குறுகவென - 6
ஈழக் காலம்
ஈன்றெடுத்தகரிகாலன்
சில்லறையாய் தமிழர்கள்
சிதறுண்டு போனாலும்
நல்லற த் தமிழனாய்
-உலக நாடெல்லாம்
பரவி-இனி
வெல்லத்தமிழினம்
வேள்விகள் செய்ய
வல்ல தமிழனாய்
வாய்த்த தலைவனே
வாழ்க நீ வரலாறாய்

FIND YOUR DREAM HOME WITHOUT ANY STRESS
DON'T GET LEFT BEHIND BUYING OR SELLING
We'll get you where you need to Go!
KAILAIN THILLAINATHAN
647-668-8276
RAGHU THILLAINATHAN
416-629-5800
7 Eastvale Dr, Markham
ON L3S 4N8
B : 905 201 9977
F : 905 201 9229
TEAM ROYALAN
HOMELIFE HIGHER STANDARDS
HOMELIFE/ FUTURE REALTY INC., BROKERAGE
INDEPENDENTLY OWNED & OPERATED | *SALES REPRESENTATIVES



ஆசையுற்றா ஆயுதம் ஏந்தினார்கள்
அறம் அழிந்து அன்றாடம்
அடக்குமுறைகள் பலகண்டு
அடியோடு அழிக்கப்படும்
ஆபத்திருந்தும் அகிம்சை வழி நின்று
அன்னை மக்களை காத்திட
அயராது செய்த
முயற்சிகள் எல்லாம்
முற்றழிந்துபோக
தன்மானம் காக்க
தம்மக்கள் காக்க
தம்முயிர் காக்க
தலைமுறை காக்க
தன்னுயிரை துறக்க
மரத்துப்போன கையிலே
மனமின்றி மனங்காக்க
ஆயுதம் ஏந்தினார்கள்
அண்ணல் பேசிய அகிம்சை
ஆங்கிலேயனுக்கு புரிந்தது
ஆனாலும் விடுதலை பூமியின்
துப்பாக்கிகுண்டு தானே
அண்ணலின் இன்னுயிர் குடித்தது
சீசு இரத்தம் குடிக்கும்
சிங்களவனுக்கெங்கே புரியும்
துப்பாக்கிமுனையில் பேசுபவனுக்கு
துப்பாக்கிமுனையில் தான் பதில்
துக்கத்தோடுதான்
ஆயுதம் ஏந்தினார்கள்
மேசைக்குமேல் சமாதான ஒப்பந்தம்
மேசைக்கு கீழ் குருதிகொட்டும்
வெட்டப்பட்ட கால்
வலுக்கட்டாயமாய்
வன்கொடுமைகள் பலசெய்து
வன்முறையாய் ஆயுதம் நீணீந்த
பிணந்தின்னும் சிங்களவெறியர்களுடன்
உலக நாட்டாமையெல்லாம்
ஊமை அரசியல் செய்து
கண்மூடி கண்ணாமூச்சி ஆட
வேறென்ன செய்வார்கள்
ஆடையின்றி ஆதரவின்றி
அனாதையாய் அன்னை மண்ணில்
ஆறா துன்பத்தோடு தான்
ஆயுதம் ஏந்தினார்கள்
புத்தர் பூமியாம்
குருதி குடிக்கும்
கொடூர கொடும்பாவிகள்
கோலோச்சும்
புத்தர் பூமியாம்
உலகமே சாட்சியாய் இருந்தும்
ஈழத்தின் இனப்படுகொலைக்கு
சாட்சிகள் இல்லையாம்
சர்வதேச நீதிமறந்த
நீதிமன்றகளுக்கு
காலம் காலனை கொண்டு
கணக்கு முடித்திடும்
காலம் வரை
வலியோடு விழிகொண்டு
காத்திருப்போம்
பூமித்தாய் விழுங்காமல்
விட்டுடிவாளோ
பூகம்பம் தான்
பூத்து இனவெறியர்களை
உதிர்த்திடாதோ
ஆழிப்பேரலை தான்
ஆத்திரத்தை காட்டிடாதோ
வலி சுமந்து
புலம்பெயர்ந்து
வாழும் தமிழினத்தின்
கனவாய் இருக்கும்
தமிழீழ நாயகம்
நனவாகும் நாள்
வெகுதூரமில்லை அது
நிச்சயம் சத்தியம்
உலக தமிழினமே
உங்களிடம் ஒரு வேண்டுகோள்
வலி கொண்டு வாழ்ந்திடும் நாம்
ஒற்றுமை கொண்டு ஒரினமாய்
வலிமையையும் வளர்த்திடுவோம்
தமிழ் என்ற ஒற்றை புள்ளியில்
ஒன்றிணைந்திடுவோம்
வேற்றுமைகள் நம்மை
வேரறுத்தது போதும்
துரோகம் நம்மை
துரத்தியது போதும்
ஒற்றுமை கொண்டு
அறவழிநின்று
அறிவெனும் ஆயுதம் கொண்டு
ஒங்கி ஒலித்திடுவோம்
துரோகமற்ற ஒற்றுமையான
தமிழ் மக்கள் என்னும்
நண்ணீரால் நரணியிலே
துளிர்க்க வைப்போம்
தமிழீழ நாயகத்தை
முள்ளிவாய்க்கால் முடிவல்ல
புதைக்கப்பட்ட எம்முயிர் விதைகள்
தமிழீழ நாயக விருட்சமாகும்

வெகுவிரைவில்

– இளவரசி இளங்கோவன்–



கனகாம்பிகை தங்க மாளிகை

சிங்கப்பூரில் வடிவமைக்கப்பட்ட புதிய டிசைன் நகைகளை அனைத்தும் மலிவு விலையில் விற்பனையாகின்றன

CONTACT NOW 416-269-7197 | kana4gopalakrishnan@gmail.com
3160 Eglinton Ave,East,Unit 3 Scarborough,ON M1J 2H3

வாழ்க நீ எம்மான்...

உரிமைத் தேரின் வடமே –ஈழ
உணர்வுத் தீயின் தடமே
வலிமைப் போரின் களமே –தமிழர்
வாழ்வின் நல் வளமே .

முப்படை தந்த முரசே –நாளும்
முகம் மலரும் ஈழ அரசே
முகவரியாய் காக்கும் அரனே –எமை
முழுவதுமாய் பாக்கும் அறமே .

பார்வதிதியின் மகவே –நல்ல
கூர்மை சேர் திருவே
நேர்நிக்கும் கரமே –வா
ஊர் தேடுது உனையே .

புலியாக உருவான புனிதனே –நல்ல
வலிமை சேர கருவான மனிதனே
எவர்க்கும் உருகுகின்ற உருவனே –எமை
காக்கின்ற மாவீரன் நீ ஒருவனே .

வாழ்க தலைவா வாழ்க வாழ்க .





A1 Plumbing & Electrical

We Specialize in HOME - BUSINESS

Repair | Installation | Renovation

Rupan: 647-296-9565 / 416-439-6665

A1Plumbing.E@live.ca





இனமானப் பேரொளியே – எங்கள்
இதயத்து கதிரொளியே
உயர்வான தனித்துவமே – ஈழ
உருவாக்கத்தின் மகத்துவமே.

தன்மான உணர் மொழியே – நம்
தமிழீழ வளர் பிறையே
மண்போற்றும் மாதவமே – எங்கள்
மானத் தமிழின் உன்னதமே.

படை கட்டி நடை கொண்ட கரிகாலனே
பகை வெட்டி விடை தந்த அறவாளனே
நடை உடைத்து கொடையான பற்றாளனே – என்றும்
தலைமகனாய் உள்ளத்தில் நிறையும் உயர்வாளனே.

உயிர்த்தீயை சுமந்த நம் வரலாறே – எம்
உரிமைக்காய் களம்புகுந்த வரப்பேறே
அருந்தவமாய் எமையாளும் பெருமானே
அன்னைத் தமிழுக்கு வாய்த்த வரியோனே.

வாழ்க எங்கள் தலைவா வாழ்க வாழ்க.

சகுந்தலன்–



Bringing Your Dreams To Life!

Mahesan Subramaniam
BROKER
416-816-0141

Free Home Evaluation with No Obligation

மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி

141-1140 Burnhamthorpe Road West, Mississauga,
ON. L5C 4E9
Office: 905-270-2000 Fax: 905-270-0047
* Not intended to solicit properties already listed for sale, or buyers under contract

RE/MAX
REAL ESTATE
CENTRE
INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

சூரியதேவா வாழ்க நீ

சூரிய தேவனே -எங்கள்
சுதந்திர காவலனே
நேரிய நிலைமகனே -தமிழர்
நேசிப்பின் புலிமகனே .

விச்சுறு நெஞ்சனே -எங்கள்
விடுதலை மன்னனே
வீசிடும் தென்றலே -நெஞ்சில்
மூசிடும் அண்ணனே .

வரி உடையின் வல்லமையே -அந்த
வல்வை மண்ணின் கண்ணிமையே
புலி வடிவ பெருந்தீயே -நெஞ்சில்
புகுந்த நன்மான நிலையே .

கனவு நேசத்தை காட்டியவா -தமிழர்
நாவில் வரியாய் வாழ்பவா
நினைவு முழுதும் மின்பவா
நிஜமாய் எம்மோடு வருபவா .

வாழ்க நீ எம்மான் வாழ்க வாழ்க .



Ambiha Silk
Tel: 647-283-4850
Specialist:
Hi Fashion Jewelry
Gold Covering Jewelry
Hair Style Ornaments
Unit F4-2900 Markham Rd.,
Scarborough,
ON.,
M1X 1E6



பேடிப் பிறப்புக்களை
தேடி வேரறுக்க
ஈடினையில்லா
தானைத் தலைவனாய்
தீயம் ஒன்று பிறந்த நாள்...

ஈழத்தின் உச்சியில்
சங்குகள் சப்திக்கும்
வங்கக்கரையில்
வைகறை வேந்தன்
வந்துதித்த பொன்னாள்...

எட்டுத்திக்கும் தமிழ்முரசு
கொட்டிச்சொல்லும் ஐயா
உன் பிறப்பால் மீண்டது – எம்
இனமும் மொழியும் என்று...

நாய்களும் பேய்களும்
நயவஞ்சகப் பூனைகளும்
நிற்க முடியாதையா உன்
நிழல் முன்னாடி கூட...

ஆண்டுகள் ஆறுயத்துடன்
ஒன்றல்ல ஓராயிரமானாலும்
மாறாதையா மறவர் நெஞ்சில்
மாசற்ற உன் மாண்பு...

– திலீஸ்

ARUNS FRESH BAKERY
WE DO
ALL SRI LANKAN & SOUTH INDIAN CUISINE
catering for all occasions
Call Now 905-553-3454
7-9222 Keele St., Vaughan, ON. L4K 5A3

தமிழினத்தின் வழிகாட்டியே
உமக்கு அகவை தின வாழ்த்துக்கள்.....

மூத்த குடி தமிழினம்
மண்டி யிட்டு வேண்டி நின்றார்
மார்படித்தும் புலம்பி நின்றார்-தமிழ்
அரசனவன் பிறந்திடவே
அடக்குமுறை உடைத்திடவே

கருவறையில் ஓரணு
உயிர் கொண்டது
கரிகாலன் அவன் உயிர்
வந்தது -அவன்
கருவினில் கேட்டான்
தமிழின அலறல்
கண்ணீராய் சொரிந்தான்
கருவறை நிறைய

கார்த்திகை மாத கார்மேக கூட்டம்
கடலலை தாலாட்ட
ஆனந்தம் கொள்ள
அழுதிடும் தமிழினம்
அவலங்கள் போக்க

அவனியில் பிறந்தான்
அகங்களில் நிறைந்தான்
தகப்பன் இன்றி தமிழ் இனம்
கண்டவரெல்லாம் கையாளினம்
முப்படை கண்ட மாவீரன் நீ
முழு உலகும் வியந்த
விலை போகா வீரன் நீ
கரு சுமக்கா தாயாய் வந்தவன்
கண்ணியமாய் மகவுகளை
தீரராய் வளர்ந்தவன்
நெஞ்சத்தில் நாம்
பூசிக்கும் மன்னவன்
நீண்டாண்டுகள் நீ வாழ
கொத்தாய் மலர் கொண்டு -வீரத்
தளபதியை வாழ்த்துகிறோம்
வாழியவே

நெஞ்சம் நிறைந்து வாழ்த்தும்
கவிஞாயிறு நாவாயு'ரான்
வெள்சிலால் அனுரா (கனடா)



New Royal Fashions
தேசியத் தலைவரின் இலட்சியம் நினைவாகும் வெகுவிரைவில் தமிழீழம் பிறக்கும்
- குமார் (ராதா) 416-358-5478
Jewellery & Latest Fashion for best prices | Bridal Jewellery Rental
Tel: 416-519-1119 | Cell: 416-358-5478
6055 steeles Ave. East Unit C127 (Markham & Steeles- Yellow Building)
Scarborough, ON M1X 0A7



பகலெல்லாம் ஒளி வீசும்
சூரியன்
இரவில்
உறங்கச்சென்றிடுவான்
- இது
குழந்தைகளின் கற்பனை
கதை

எம் சூரியனோ
எப்போதும் கண்
துயின்றதில்லை
அயர்ந்ததுமில்லை
வாழ்க தலைவா நீ -
உனை
வாழ்த்தி
வணங்குகின்றேன்
- பரணி

NATWEST CAPITAL
TIMES CHANGE, VALUES DON'T
*Some conditions may apply.
Powered by CENTUM Mortgage Choice Corp.
BERNADINE PONNIAH
CEO/MORTGAGE PLANNER LIC. 12546
Tel: 416-550-1364
Email: Bernadine.Ponniah@gmail com
1585 Markham Road, Suite # 304, Toronto, ON M1B 2W1

வேலுப்பிள்ளை என்ற மேன்மையுறு



சான்றோனுக்குப் பிறந்த செல்வ மகனே!
வல்வையில் உதித்த வீர மறவனே
மண்டியிடா வீரத்தை யாரும் தீண்ட முடியாது என்று
உலகிற்கு கற்பித்தவனே!

உயிரிலும் பெரிதாம் மொழியின் பற்றுதலினால்
உயிரும் தமிழும் எங்கள் மூச்சென்று
அடங்கா வீச்சு கொண்டவனே மண்ணின்
வீரம் செறிந்த வீரத்தின் விளை நிலமே!

விதி என்று சொன்னார்கள் எதிர் மதி கொண்டு
புலிப் படைகள் கட்டினாய்!
நறுமலர் பூவெடுத்து குறு முல்லைப் பூ சேர்த்து
நாள் தோறும் சூட்டி நறுந்தேன் தமிழ்ச் சொல்லை!

பல்லாண்டு வாழ்கவென படைக்கின்றோம் நல்வாழ்த்து
வீரத்தின் மகுடமானாய் தொலைநோக்கு நூலானாய்
பணிவுக்கு மலரானாய் பகைமைக்கு வாளானாய் –நம்
நெஞ்சுக்கு உரமானாய் நினைவுக்கு ஒளியானாய்

உன் அகவையின்று அகமினிக்க என் வாழ்த்து
பல்லாண்டு வாழ்கவென படைக்கின்றோம் நல்வாழ்த்து
பூத்த விழிகள் அழுததில்லை – தலைவன்
காத்த வீரம் அழிந்ததில்லை – பகைமை

முட்டிய படைகள் வென்றதில்லை – புலி
கொட்டிய முரசம் ஓய்ந்ததில்லை
நீயே ஒருவனானாய் காத்திருந்த மண்ணின்
மைந்தனானாய் – தமிழ் மனங்களில் வாழும்
தலைவனானாய் உன் அகவையின்று

அகமினிக்க என் வாழ்த்து பல்லாண்டு வாழ்கவென
படைக்கின்றேன் நல்வாழ்த்து!
கால் பிடித்து வால் பிடித்து கைகள் குவித்து நின்றவரை
வாள் எடுத்து வில் தொடுத்து வேல் பிடித்து வென்றெமது

மானத்தைக் காத்த மற வேங்கைகளின் வேந்தே!
வாழ்த்துகின்றேன் நூறாண்டு நீவிர் வாழ்கவென
எம் மூச்சின் தலைவனுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பல்லாண்டு வாழ்கவென படைக்கின்றேன் நல் வாழ்த்து!
மாவீரர்களின் இறுதி மூச்சிலிருந்து மரணிக்காது வெளியேறிய

துப்பாக்கிக் குண்டுகள் போய் வருவார் வீரர்
பொய்க்காத வெற்றிப் பொழுதுகளில் உதித்த
கார்த்திகை மைந்தனே தமிழ் சார் புகழ் கொண்ட

பெருமகனே தமிழன்னை பெற்றெடுத்த
தலை மகனே புலிப்படை அணிகலன்
திருமகனே காற்றுள்ள காலம் வரையில்
வாழ்த்துவோம் கடல் உள்ள காலம் வரையில்
வாழ்த்துவோம் .

நிலமுள்ள காலம் வரையில்
வாழ்த்துவோம்
நீர் உள்ள காலம் வரையில்
வாழ்த்துவோம்
நிலாவுள்ள காலம் வரையில்
வாழ்த்துவோம்
வான் உள்ள காலம் வரையில்
வாழ்த்துவோம்

தலைவா!
உந்தன் அகவையின்று அகமினிக்க எம் வாழ்த்து
பல்லாண்டு வாழ்கவென படைக்கின்றோம் நல்வாழ்த்து

MORTGAGE
Residential / Commercial /
Industrial / Investment Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS INC.
•1st, 2nd, 3rd Mortgages
• Purchase • Refinance • Renewal • Switches
• Equity Line of Credit • Pre-Approvals
• Self-Employed • Multi Rental Properties
• New Immigrants
Nesan
416-908-5656
1585 Markham Rd, Unit #407A,
Toronto, M1B 2W1
Off: 647-351-0399 Fax: 647-351-3099
Bus: 416-660-565 Toll: 1-844-878-2721
Email: solutions@subra.com
www.subra.com




எங்கள் தலைவன் பிரபாகரன்

இப்படியொரு தலைவன் உலகில்
எங்குமே இருந்ததில்லை எல்லோரும் மெச்சுகிறார்
செப்படி வித்தையா? ஒரு நாட்டில் (தமிழீழத்தில்)
சிறந்த நல் அரசாங்கத்தை உருவாக்கிஇ திணைக்களப்
பிரிவுகளும் வகுத்து
அப்படி நிர்வகித்து நாட்டின் பாதுகாப்பிற்கும் கூட
ஆண்களையும்இ பெண்களையும் அன்புடன் அரவணைத்து
தப்பேதும் நடவாது பாதுகாத்துஇ தகுந்த நன்முறையில்
வழிநடத்தி
தரைப்படைஇ வான்படைஇ கடற்படையென
முப்பெரும் பிரிவில் முழுமையாய் ஈடுபடுத்தி
கரும்புலி போன்ற தற்கொடைத் தியாகிகளையும் உருவாக்கி
அப்படி வருங்காலை அந்தோ நம் அதிர்ஷ்டவீனம் காரணமாக
அந்நியன் சூழ்ச்சியாலே அழிந்தது நம் அரசு-எனினும்
இப்போதும் கூட எங்கள் ஏக்கம் இன்னுமே அழியவில்லை
எங்கள் தலைவரின் தீர்க்க தரிசனத்தால் புலம்பெயர் தமிழரிடம்
அப்பணியைக் கையளித்தமையால் நாடுகடந்த தமிழீழமாக
நடைபெறுவதாலே நாமும் அமைதியாய் வாழுகின்றோம்
இப்படி எம்மையெல்லாமே பாதுகாத்து இரட்சித்த
இன்னுயிர்த் தலைமகன் பிரபாகரன் புகழ்
என்றுமே நிலைக்கும் வாழி

- திருமதி கமலாவதி இராமனாதன்
மொன்றியல்


வாகன விபத்தா? அழையுங்கள்
ABS - MR. P.SINGARAJ
TAYLOR & BABER PROFESSIONAL CORPRATION
HONEST & FRIENDLY SERVICE CALL:
ABS MR.P.SINGARAJ
416.993.8443 905.471.3058
PG 45



பெயரெனும் காவியம்

வீட்டின் சுவர்களில்
புகைப்படங்கள் இல்லை
தெருக்களில் சிலைகள் இல்லை
பள்ளிப் புத்தகங்களிலும்
மறைக்கப்பட்டது பெயர்

படை நடத்தி
வெற்றிகள் நிறைத்த மண்ணில்
எந்த தடயமும் இல்லை

உமைப் பற்றியெந்த காவியமும் இல்லை
உம் பெயர் போலொரு காவியமும் இல்லை

உம் பெயரை உச்சரிக்க
தடை செய்யப்பட்ட காலத்தில்
பெயரே வரலாறு
நிகரற்ற சித்திரம்

கர்ஜிக்கும் அடையாளம்
நம்மை சூழும் காவல்
பகைவர் அஞ்சும் ஆயுதம்
மனங்களில் ஒலிக்கும் பெருங்குரல்
நம் நிலத்தே அதிரும் வீரநடை
வானில் அசையும் கொடி
இதயங்களில் சுடரும் ஒளி

காலத்தை சூழற்றும்
உம் மந்திரப்புன்னகை

மொழியினிற் சுமப்பது
தேசத்தை மட்டுமல்ல
நம் தலைவனையும்தான்.

- தீபச்செல்வன்
பிரசுரம் - வணக்கம் லண்டன்

Sri Lankan & East Indian Cuisine
New Kalyani Takeout
Take Out / Catering
Tel: 416-264-1888
723 Kennedy Road (South of Eglinton), Scarborough, ON. M1K 2C6



தமிழர்களின் தலைமகன்
இணையில்லா திருமகன்
வீரம் விதைத்த தமிழ்மகன்
மனிதம் போற்றும் நன்மகன்
விடியலை தேடும் பெருமகன்
விடுதலை தேடிய வீரமகன்

தியாகம் வீரம் மனிதம் சுதந்திரம் அன்பு பாசம் நேசம் தீரம் பயிற்றுவித்த எங்களின் தலைவன் வழிகாட்டி அடையாளம் பெருமை இணையில்லா சரித்திர தமிழன் தலைவன் பிரபாகரனின் பிறந்தநாள் இன்று
தமிழர் திருநாள்

- கோகில் கிஸ்ணன்





இன்று பிறந்தநாள் மாமாவுக்கு
என்றும் வாழ்த்துவேன் உங்களை
நன்மைகள் செய்தவர் நீங்கள்
நாங்கள் மறவோமே என்றென்றும்
உங்களை வாழ்த்த வயது எனக்குப் போதாது
உண்மையில் நான் ஒரு சிறு குழந்தை
செல்ல மகளாய் நான் இருந்தே - மாமா
செழிப்புடன் வாழ்கவென்று வாழ்த்துகிறேன்
மாமா மாமா என்றழைக்க
மார்புடன் நீங்கள் எனை அணைத்த
காலந்தான் திரும்ப என்று வரும் மாமா?
காத்திருப்பேன் மாமா என்றென்றும்
கரிகாலன் பெயர் கொண்ட என் மாமாவே
துன்பமில்லா வாழ்வுதந்த மாமா
இன்பமாக வாழ்கவென்று வாழ்த்த
இன்று எனக்குத் தருணம் வந்ததுவே
இனிதே வாழ்த்துகிறேன் மாமா
வாழ்க வாழ்க என்றென்றும் வாழ்க்

- கண்மணி

ஒட்டாவா

தலைவர் மாமாவுக்கு எனது வாழ்த்துகள்
எங்கள் மாமா தலைவர் மாமா
எங்கும் நிறைந்த அன்பு மாமா
அள்ளித் தந்த முத்தங்கள் எல்லாம்
அறிவாய் என்னுள் பெருகியதே
பைந்தமிழில் பாலூட்டி
செந்தமிழால் சீராட்டி
தீந்தமிழில் உரை தந்த
பேர்புகழ் தலைவர் மாமா
அன்னைக்கு அன்னையாக
தந்தைக்குத் தந்தையாக
ஆசானுக்கு ஆசானாக
நோய்க்கு மருந்தாகா'
வீர்ருக்கு வீரனாக
தமிழருக்குத் தலைவனாக
உலகத்தோர்க்கு இனியனாக
தெய்வத்திற்குத் தெய்வமாக
கண்களில் நிறைந்த கடவுள்
எங்கள் தலைவர் மாமா

POORANI VILAAS
Take-out Restaurant & Catering
Delicious, Quality and Healthy
சுவை மிக்க தமிழீழ, தென்னிந்திய மற்றும் சீன உணவு வகைகள்
சகல விதமான வைபவங்களுக்கும் ஏற்ப சுவையான, சுத்தமான, தரம்மிக்க, சைவ, அசைவ உணவு வகைகளை குறிப்பிட்ட நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்!!!
416.335.7775 / 647.822.4972
6055 Steeles Ave E, Unit 104 (Markham & Steeles) Toronto, ON. M1X 0A7



கவிஞன் கண்டது கவிதையானது.

என்ன தம்பி பாடுவாய் கவிதை எழுதி
எங்கள் தலைவன் பிறந்த நாளடா பருதி பருதி.

மண்ணை அவன் காத்தவன்
தமிழர் மானத்தையே காத்தவன்
என்ன கொடும் பகை வந்தாலும் எதிர்த்து நின்று
சாய்த்தவன் இறுவரை காத்தவன்.

அண்ணை கவிதை எழுதடா
அவன் சொனத்தை கவிதை எழுதடா
கண்ணியமான தலைவனை
காத்து நின்ற புலிகளை நீ எழுதடா
மாவீரர்களை எழுதடா
மண்ணில் புதைந்த வைரங்களை எழுதடா.

இல்லாத வறலாற்றை எவன் எவனோ எழுதுவான்
சொல்லாத பொய்களை பக்கம் பக்கமாய் புழுகுவான்
இது பொல்லாத உலகமடா புரிந்து கொள்ளடா
தலைவன் இல்லாத நிலையை இன்று எண்ணி பாடடா.

பகைவன் நம்மை படுத்துவதை பார்க்கிறாயா?
நம்மவர் பாடையில் நம்மை கிடத்துவதை
பார்க்கிறாயா?
பாதை மாறி ஓடும் ஓட்டம் பத்து நூறடா
பாழ்பட ஒவ்வொரு நாளும் புதிய புதிய கூத்தடா?

வீடு கடந்து ஒன்று
நாடு கடந்து ஒன்று
பிடை நிறைந்தது என்று
பெருச்சாளிகள் இன்று
சாடை மாடையாக சாட நீ யாரடா தலைவன் வழியில்
வந்த உனக்கு பயம் ஏனடா.

மக்கள் தொகைக்கு ஈடாக அமைப்புக்கள் பாரு
மானங்கெட்ட நிலையடா என்ன வேடிக்கை பாரு
கச்சை பறி போனால்
அம்மணமாய் போராடு
உணற்சி கவிஞன் சொன்னான் கேட்டவன் இங்கு
யாரு?

கற்கள் கொண்டு தாக்கினாலும் கடந்து போகிறார்
சொற்கள் கொண்டு தாக்கினாலும் கடந்து போகிறார்
மக்கள் என்ன செய்வார் பாவம் மாக்கள் என்ன
செய்வார்.

கெட்ட விதி என்று கவி எழுதி வையடா
தலைவன் விட்ட பணி தொடரவில்லை பருதி மெய்யடா
பட்ட காலில் படுகிறது
கெட்ட குடியே கெடுகிறது
சுட்டிக்காட்டி கவிதையை முடித்து வையடா
எட்டுத்திக்கும்
பாட வழிகள் செய்யடா

கவிஞன் கண்டது.
புதுவைதாசன்



தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்

மார்க்கம் ∴பெயார்கிறவுண்ட்ஸ்'இல்

மாவீரர் துயிலும் இல்லம்

நவம்பர் 27-2022 ஞாயிற்றுக்கிழமை

ஏங்களுக்காகத் தமிழீழ மன்னுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு



Tamil National Heroes Day

To Remember Our Heroes'
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்

ரொறன்ரோ

MARKHAM FAIR

Markham Fairgrounds
10801 McCowan Road
Markham, ON L3P 3J3
(McCowan Road & Elgin Mills Road East)

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்

27-11-2022 ஞாயிற்றுக்கிழமை

வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்

1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி

மொன்றியல்

27-11-2022
ஞாயிற்றுக்கிழமை
மாலை 5:00 மணி

Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
Tel: 514-660-5891

ஒட்டாவா

27-11-2022
ஞாயிற்றுக்கிழமை
மாலை 5:30 மணி

Nepean Sportsplex
Hall - A
1701 Woodroffe Avenue
Ottawa, ON K2G 1W2

Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.com/tamilremembrance

GANESHA
TAKE OUT AND CATERING
Ganesh / Raj
Tel : 905-305-0522 | Cell : 416-358-5225

இலங்கை, இந்திய உணவகம் 411 Manhattan Dr,Unit #2,Markham,ON L3P 7P4



வல்லைப் பெரும் பரிதி நீ!
வானளந்த பேரான்மை நீ!
சொல்லில் சிறையடையா சுதந்திர தீ பிழம்பு நீ!
கங்கை கொண்டு கடாரம் வென்ற
கனியமுத சோழன் வழிவந்த கரிகாலன் நீ!
மாற்றானும் மண்டியிட்ட மறத்தமிழன் நீ!
வெல்லும் படை நடத்தி வீணர்தமை விழுத்தி
சொல்லும் தரமற்ற வெற்றி தனை குவித்த
வெற்றித் தமிழன் நீ!
எங்கள் வீரத்தமிழன் நீ!
தேனாற்றை கடக்கவில்லை பாலாற்றில் நீந்தவில்லை
தீயாற்றை கடந்து வந்தாய் எம் தமிழர் உயிர்காக்க
தாயை தந்தையை தனையனை எம்
தமிழினத்திற்கு ஈந்திட்ட தங்கமகன் நீ
பேரரசைக் கண்டு சிறிதும் கலங்கவில்லை
பொன்னுக்கும் பொருளுக்கும் விலைபோகவில்லை
தமிழன் வீரம் எது என்று உரசி பார்த்தோருக்கு
பிரபாகரன் தான் அது என்று உணரவைத்தாய்
உன் முகம் கானாது உருக்குலைந்தார் தம்பியர்
கற்றோரும் மற்றோரும் காத்து நிற்கின்றோம்
ஏதிலிகளாய் நீயின்றி ஏற்கின்றோம்
எப்போ வருவாய் எங்கள் உயிரே! உணர்வே
கழதினில் வந்துவிடு! காலம் தாழ்த்தாதே!

- ஜெகப்பிரியன்-

HOMELIFE HIGHER STANDARDS
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
Buying and Selling All your Real Estate Needs
RAJA DHARMALINGAM
647-833-4998
cynthiarajah@yahoo.ca
www.rajahhouses.com
Homelife/Future Realty Inc.
Brokerage, 205-7 Eastvale Dr,
Markham, ON., L3S 4N8
Bus:905-201-9977 Fax:905-201-9229





பிரபாகரனியம்

பிறப்பில்
இறப்பு
காடைகள்.
இறப்பில்
பிறப்பு
புலிகள்.

கல்லறைகளை
இடித்துத்
தேடுகிறார்கள்
அழித்துவிட்டதாகச் சொன்னவர்கள்

முள்ளிச்செடிகளா
வாய்க்காலோடு முடிந்துவிட?
விடுதலை விதைகள்.

இலட்சம் உயிர்க்கொடை
ஒற்றை உயிர்ப்பு
தமிழீழம்.

வணங்க
வைத்தவர்களை
வணங்கும் நாள்.

பன்னாட்டு
வல்லாளுமை
கருச்சிதைவாக
இணங்கும் நாள்.

மாவீரர்களே...
விடியும் நாள்
விரைவில்.
இனவெறி
முடியும் நாள்
குறைவில்.

இன்று உங்கள் கல்லறைகளில்
அழும் செங்காந்தள்
நாளை சிரிக்கும்
எதிரிகளின் கல்லறைகளில்.
ஒளி பாய்ச்சும்
பிரபாகரனியம்

பூனையின்
கண்களைப்போல
ஒளிர்கிற
வஞ்சகத்தின் நீழலில்
புதைந்துள்ளது
ஈகம்.

முளைத்துக் கிடக்கிறது
வேலியோர
கிளுவைக்கருகில்
உதிர்த்துவிட்ட
கடுகுப் பூக்கள்.

பூக்கள்தோறும்
வெந்தய ஒளி.
தோன்றும்
செருமுகத்தான்
கல்லளைக்குள்.

நெஞ்சத்தில்
ஒளிர்கிறது
கங்கு அணையா
பெருநெருப்பு.

பகை முடிக்கும்
இருள் கிழிக்கும்
ஒளி வெளிச்சம்.

- கலைபாரதி

Raman Home Comfort Inc.
Raman Chellaiah
416-332-2989 / 416-332-4967
6055 Steeles Ave. E. Unit C105
Totonto, ON., M1X 0A7
www.ramanhomecomfort.com
admin@ramanhomecomfort.com



THINKING OF BUYING or SELLING YOUR PROPERTIES

Rave P Raventhiran

Realtor
Dir: 416-567-2462
realtor.rave@gmail.com

HomeLife/Future Realty Inc.,
Brokerage Independently Owned & Operated
7 Eastvale Dr., Suite 205 Markham, ON, L3S 4N8
Bus: 905-201-9977 | Fax: 905-201-9229



68ம் அகவையி ல் அகிலம் வியந்த அண்ணனுக்கோர் வாழ்த்து”

கார்த்தகை இருபத்தியாறு..- எம்
ஊரெல்லாம் ஒன்றாகி கூத்தாடும்
பார்த்தீபன் பிறந்த நன்நாள்.

ஆண்ட பரம்பரை
காலமெல்லாம் கைகட்டி
ஆள வழியின்றி வாய் பொத்தி,
தலைகுனிந்து அடிபணிந்து-எம்
ஈழ மண்ணையும் விலை பேசி -
சேற்றில்
உழும் எருமை மாடுகளாய் -எதிரிமுன்
மண்டியிட்ட தமிழருக்கு
வாழ நெறி காட்டி-அவன் மாண்புதனை
நிலை நாட்ட வந்துதித்த
ஆண்டவனின் அவதார நாள் இன்நாள்..

வல்வை மண் அன்று -எம்
தொல்லை அழித்திடவென்று
நல்லான் எங்கள் நாயகனைத் தந்திட்ட
பொன்நாள் இன்று....

எங்கள், வலி போக்க வந்த
அருமருந்தாய்-எங்கள்
கலி நீக்க பிறந்த வேங்கை ...- எமக்கு
விடியாதா எனநாம் விழி மூடிக்கிடக்க-
எங்கள்
விடியலாய் ஒளிதந்த விடுதலை
வேந்தனின்
ஜனனநாள் இன்று.

கோடரிக்காம்புகளாய்மாறி -அன்றெம்
வீடெரித்த பேய்களையும்
கொள்ளி கொடுத்த கொடுவாள்களையும்
பாடையில் ஏற்றிட - பாசறை மேவிய
எம் தேசத்து புதல்வனின் திருநாள்
இன்று.

குட்டக்குட்ட குனிந்த தமிழனை
நெட்ட நிறுத்தி....
குட்டியவன் கைகளை வெட்டியெறிந்தும்
“கொட்டி கொட்டி” என்று பகை எட்டி
ஓட-எம்
பட்டி தொட்டி எங்கும் பகல் சமைத்திட்ட
ஈழவேந்தின் இனிய நன்நாள் இன்று.....

தன்னினம் காத்திட தன்னலம் மறந்து..,
மண்ணினை மீட்டிட மகிழ்வுகள்
துறந்து...,
விண்ணிலும் பெரிய விரிமனம் கொண்ட
விடுதலை வேங்கையின் பிறந்தநாள்
இன்று.

எங்கள் இருள்போக்கி - உலகில்
நாங்கள் வாழவழிகாட்டி

எங்கும் பரந்துவாழ் தமிழரின் உரிமை
நிலை நாட்டி
உலக மேடையி ல் அவன் பேச
உரிமை தந்த
மங்களநாயகன் அவதரித்த இனியநாள்
இன்று.

இனவெறி மமதையில் கொலை
வெறியாடிய
ஈனரின் மமதைகள் அடக்கி
மானத்தமிழரின் மாண்புமிகு வீரத்தின்
தானைத் தலைவனாய் தனிநாடமைக்க
வேங்கையாய் குதித்த தனிப்பெரும்
தலைவன்
வந்துதித்த நனிசிறந்த பொன்நாள்
இன்னாள்.

தமிழரெல்லாம்” நான் தமிழன்” என்று
தலை நிமிர்ந்து சொல்லவென்று
வான்படையும் கண்ட தமிழ்ப்
பெருமறவன் பிறந்திட்ட பெருநாள்
இன்று.

சிங்களவன் சினம்கொண்டு
சீறி எழ முடியாது....,
பதுங்கி அவன் பாழிருட்டில்
பாய்யிட்டு ஒதுங்கிடவே -போர்
பறைசாற்றி பகை விரட்ட பாய்ந்திட்ட
பெருவீரனின் திருநாள் இன்று.

தம்பி என்பார் சி லர்-எங்கள்
அண்ணன் என்பார் பலர்..., அன்பின்
மாமா என்றே மழழையரும்-எங்கள்
மாபெரும் தலைவா என்றே உலகத்
தமிழினமும்,

விழித்திடவே நீ வாழ்க வாழ்க.....

பெற்றவரும் உற்றவரும்
பெருமை கொள்ளும் தமிழ்மகனாய்,
கொற்றவரும் வித்தகரும்
வியப்புறு தலை மகனாய்,
எத்திசையும் உன்பெயரை
உச்சரிக்கும் உருத்திரனே
வாழ்க நீ வாழ்க....

வாழ்கவென்று உனை வாழ்த்த-என்னை
வாழ வழிதந்த எம் தாய்மண்தந்த
பெருந்தலைவா
வாழ்க நீ பல்லாண்டு வாழ்க..

தம்பி
ஈழப்பிரியன்


TO BUY AND SELL! வீடு வாங்க, விற்க அழையுங்கள்
RAVI THARMALINGAM
(Sale Representative)
DIR: 416-319-7507
HOMELIFE HIGHER STANDARDS
HOME LIF GALAXY REAL ESTATE LTD
#301 - 111 GRANGEWAY, TORONTOP,NO,M1H3E9
Office:416-284-5555, Fax: 416 -284 - 5727



பேடிப் பிறப்புக்களை
தேடி வேரறுக்க
ஈடினையில்லா
தானைத் தலைவனாய்
தீபம் ஒன்று பிறந்த நாள்....!

ஈழத்தின் உச்சியில்
சங்குகள் சப்திக்கும்
வங்கக்கரையி ல்
வைகறை வேந்தன்
வந்துதித்த பொன்னாள்....!

எட்டுத்திக்கும் தமிழ்முரசு
கொட்டிச்சொல்லும் ஐயா
உன் பிறப்பால் மீண்டது - எம்
இனமும் மொழியும் என்று...!

நாய்களும் பேய்களும்
நயவஞ்சகப் பூனைகளும்
நிறீக முடியாததையா உன்
நிழல் முன்னாடி கூட...!

ஆண்டுகள் ஆறுபத்துடன்
ஒன்றல்ல ஓராயிரமானாலும்
மாறாததையா மறவர் நெஞ்சில்
மாசற்ற உன் மாண்பு....!

- திலீஸ்.

SHABRI SECURITY SERVICES

Mano Thangavel
Director
Tel: 647-612-2741 / 416-484-3805
manoshabri25@gmail.com

SHABRI SECURITY SERVICES

அணையாத தலைவனுக்கு - அகவை தின வாழ்த்து.

எங்கள் நிலம் மீட்டிடவே
நின்ற களம் அத்தனையும்
வென்ற கதை உமது...

காலமும் ஈழமும் உன் காலடியில்
கரிகாலா...

ஈழத்தில் பிறந்தது எமக்குப் பெருமை,
நீவீர் பிறந்தது ஈழப் பெருமையன்றோ...

புகையும் பகை மூட்டமாய்
புலியின் குகை
வாட்டமாய்
புகுவோம் களம்
நாட்டமாய்
காடையர் கூட்டம்
ஓட்டமாய்...
கண்ணசை தலைவா களம்புகிறோம்.

மண்ணும் மலரும்
பனை மரக்காடும்
கத்தும் கடலும்
வீசும் காற்றும்
நித்தம் பேசும்
சுத்தத் தமிழும்
மீண்டும் மீண்டும் கேட்கிறது - உம் வரவு
வேண்டும் என்றே
நீள்கிறது...

எங்களோடு சேர்ந்து
சிங்களமும் உம்மை விரும்புவது தான்
உலகத்தமிழரை உயர்த்தி பிடிக்கிறது.

வா தலைவா...

அணையாத தலைவனுக்கு அகவை தின
வாழ்த்துக்களோடு....

உங்கள்
ஈழமகள் அபிஷேகா.





இருக்கிறாயா?
இல்லையா?
இந்த வினாவுக்கு
விடைகாண நான்
என்றும்
முயன்றதில்லை
இருக்கிறாய் என்றும்
என் இதயத்தில் நீ
ஆயிரம் சூரியர்களின்
ஆற்றலோடு
வாழ்ந்திடுவாய் நீ
இவ் வையகம்
உள்ளமட்டும்.

- இணுவையூர்
மயூரன்







புறநானூற்றின் போரரசன்....

செந்தமிழ் ரத்தம்
எழுச்சியின் சிகரம்
கல்லுடன் நடந்தால்
சொல்லுடன் செதுக்கப்பட்டிருக்கும்

நாளைய விதிகளை
படிமம் காட்டும் கூடரொளி
எழுத்தாளன், ஓவியன்
சிற்பி, சுமைதாங்கி,
போராளி, தளபதி
தமிழர்சேனையின் தலைவன்

தாயின் பாதத்தில்
புன்னைகையரசன்
தாயை பகைத்தவனுக்கு
புறநானூற்றின் போரரசன்

மண் காதலின் வகைகளில்
வலையினில் நீர்மம்
வளையலில் திடம்
உண்மைக்கு மட்டும் இடம்

நேரம் உயிரன்றோ
நேர்த்தி கொள்வான்
நேசம் வேசமெனில்
கொல்ல திட்டமிடுவான்

தோட்டாக்கள் ருசி காணும்
எதிரிகளின் உயிர்

- ஈழம் புகழ் மாறன்





விடலை பருவமதை விதையாக
நட்டு வைத்தான் இனமும்
மொழியுமதை உரமாக
இட்டு வைத்தான் உதிரம்
வியர்வையுமாய் வேரின் வழி

ஊற்றி வைத்தான் சாதி மதமும்
தலைக்கேறும் போது அங்கே
கொஞ்சம் தமிழனாய்
இருந்திடடா செல்லமாய்
குட்டு வைப்பான் ஒற்றை
சொல்லது உலகாளும்
மந்திரமாய் மேதகு
என்பதுவே தமிழ் பெற்ற
பேறல்லவோ

தம்பியண்ணா என்றழைக்கும்
அண்ணனின் தம்பிகள்
நாங்கள்....

கரிகாலன் மணிமாறன்

NEW SPICELAND
SUPER MARKET

NEW SPICELAND

5790 Sheppard Ave E,
Unit# 4, 5, & 6
Scarborough
(416) 292-9769

6065 Steeles E,
Unit# 13, 14, 15,16 & 17
Toronto
(416) 335-3030

1801 Harwood Ave N,
Unit# 21,22,23 & 24
Ajax
(905) 426-1114





பெயரெனும் காவியம்

வீட்டின் சுவர்களில்
புகைப்படங்கள் இல்லை
தெருக்களில் சிலைகள் இல்லை
பள்ளிப் புத்தங்களிலும்
மறைக்கப்பட்டது பெயர்

படை நடத்தி
வெற்றிகள் நிறைத்த மண்ணில்
எந்த தடயமும் இல்லை

உமைப் பற்றியெந்த காவியமும் இல்லை
உம் பெயர் போலொரு காவியமும் இல்லை

உம் பெயரை உச்சரிக்க
தடை செய்யப்பட்ட காலத்தில்
பெயரே வரலாறு
நிகரற்ற சித்திரம்

கர்ஜிக்கும் அடையாளம்
நம்மை சூழும் காவல்
பகைவர் அஞ்சும் ஆயுதம்
மனங்களில் ஒலிக்கும் பெருங்குரல்
நம் நிலத்தே அதிரும் வீரநடை
வானில் அசையும் கொடி
இதயங்களில் சுடரும் ஒளி

காலத்தை சூழற்றும்
உம் மந்திரப்புன்னகை

மொழியினிற் சுமப்பது
தேசத்தை மட்டுமல்ல
நம் தலைவனையும்தான்.

- தீபச்செல்வன்

பிரசுரம் - வணக்கம் லண்டன்







தலைவர் பெயரை உச்சரித்துப் பார் !!

காலம் எமக்குத் தந்த கதிரவன்
தமிழனை களமாடவைத்த கரிகாலன்.

வாழும் காலத்தில் வீரம் விதைத்தவன்
உலக வரலாற்றில் தனியிடம் பிடித்தவன்.

உரிமை பறிபோக உளம் சினத்தவன்
உயிர் விதை கொடுத்து மண் மீட்டவன்.

முப்படை கொண்டு முழு நிலம் காத்தவன்
உலகிலே "தமிழீழம்" தனியரசு என்றவன்.

செங்குருதி தோய்ந்த புலிக்கொடியைக் கொண்டவன்
செங்காந்தள், செண்பகம், வாகையை தேசியத்தில் சேர்த்தவன்.

சொல்லிற்கு செயல் வடிவம் கொடுத்தவன்
மாவீரர் உரைக்காக உலகையே எதிர்பார்க்க வைத்தவன்.

கண்முன்னே நின்றவர் களத்திலே வீழ்கையில்
உறுதி கொண்ட திடத்துடன் மனதினுள்ளே கலங்கியவன்...

தலைவர் என்று வாழாமல் தமிழர் இதயங்களில்...
தம்பியாக, அண்ணனாக, தந்தையாக, தாயாக...
எம் இனத்திற்கும்!வரலாற்றிற்கும்!! இருக்கும் இறைவன்
நிகரில்லாத் தலைவன்,அவரே தேசியத் தலைவர்
"மேதகு வே.பிரபாகரன்"

பெயரை உச்சரித்துப் பார்! உன் பரம்பரைக்கே வீரம் விளைந்து இருக்கும்..
"இருப்பாய் தமிழா நெருப்பாய்"

- தமிழவன் தவா - மொன்றியல்

Thermo Care
Heating & Cooling Inc.



FURNACE I AIR CONDITIONER FURNACE CLEANING I HUMIDIFIERS AIR CLEANERS I
TANKLESS WATER HEATER RENTAL

We offer flexible Financing Options to specifically meet your budget. Its the fast, flexible and easy way to upgrade your home-comfort system.



BOOK NOW 416-825-9373 / 416-640-1174 WWW.THERMOCARE.CA 513 East Ave Scarborough Ontario





எதைப் பாட...?

எத்தனை குமுறல் என்நெஞ்சில் அங்கம் சிதைந்த தமிழர்களின்
எதைநானி எழுதி அடங்குவது? அவலம் தன்னைப் பாடுவதா?
செத்திடும் எனது உறவுக்காய்ச் எங்கும் இருந்து நம்மவர்கள்
தேம்பி அழுது கவிதரவா? எழுப்பும் ஓலம் பாடிடவா?

எத்தனை கொடுமை என்மண்ணில் உலகம் தடுக்கும் குண்டுகளை
ஏதைநானி பாடி ஆறிடுவேன் ஒவ்வொரு நாளும் பொழிந்தங்கே
அத்தனை கொடுமை நடக்கிறது பலரை அழிக்கும் கொடுமைதனை
அனைத்தும் கவியாய்ப் பாடிடவா? பாட யார்க்கு மனமேவும்?

வீரம் செறிந்த தமிழர்களின் தன்குடி மக்கள் தமிழரெனச்
விடுதலை உணர்வைப் பாடுவதா? சற்றும் மனதில் எண்ணாது
போரிற் சிக்கி அழிகின்ற சிங்கள பௌத்த அரசாங்கம்
பொதுமகன் துயரைப் பாடுவதா? செய்யும் கொடுமை பாடுவதா?

நாளை இறப்பு யாருக்கு கையைத் தூக்கிக் கும்பிட்ட
நடக்கு மென்று அறியாது கடவுள ரெல்லாம் கைவிட்டுச்
நாளை ஏங்கி ஓட்டிவரும் செய்வ தறியா தலைமோதித்
நம்மவர் கதையைக் கூறிடவா? திகைப்போர் கதையைப் பாடிடவா?

தண்ணீர் கூடக் கிடைக்காது ஓடி ஓடி இடம்பெயர்ந்து
தவியாய்த் தவிக்கும் உறவுகளின் ஒவ்வொரு பொருளாய்க் கைவிட்டு
கண்ணீர்க் கதையை உங்கள்முன் வாடி வருந்தும் மக்களது
கவிதை யாக நானிதரவா? வாழ்வு பற்றிப் பாடுவதா?

வெய்யில் மழையில் ஒதுங்கவொரு பஞ்சக் கொடுமை தாங்காது
வீடோ குடிலோ அங்கில்லை பச்சிலை வறுத்து உண்டவர்கள்
தெய்வம் கூட மறந்தஅவர் நெஞ்சை நெருட இறந்தகதை
தேவை பற்றிப் பாடுவதா? நீங்கள் கேட்கப் பாடுவதா?

தேனால் நனைந்த வன்னிநிலம் நாடக மாடித் தமிழினத்தை
தினையால் நிறைந்த அப்பூமி நட்டாற் றினிலே விட்டுள்ள
ஊனால் நிறைந்து உதிரத்தில் கேடறு வார்கள் அழிவரென
உறைந்து கிடப்பதைப் பாடுவதா? கீழ்த்தர மாகச் சபித்திடவா?

தடுப்பு முகாமில் தனித்தனியே இலங்கை இந்திய அரசிரண்டும்
தடுத்து வைத்துத் தரம்பிரித்துக் இணைந்து ரூடவீழத் தமிழனது
கொடுக்கும் கொடிய தண்டனைகள் நிலத்தைச் சுடுகா டாக்குவதை
கூறிப் பாடல் பாடுவதா? நெஞ்சம் வெதும்பிப் பாடுவதா?

சபா. அருள்சுப்பிரமணியம்

Thamil Poonka School
Arul subramaniam Saba M.A
Yoga Arulsubramaniam M,Sc.
3001 Markham Road, # 21, Scarborough, ON. M1X 1L6
Tele: 647-706-6123/647-378-3006
Email: thamilpoonka@gmail.com | Website: www.thamilpoonka.org
தமிழ்ப்பூங்கா Since 1997 Thamil Poonka





எங்கள் தலைவன் பிரபாகரன்

உன்போன் ஒரு தலைவன் இந்த
உலகமே காணவில்லையென்னுமாறு
பொன்போன்ற தமிழீழம் தன்னை
போற்றியே நாட்டிக் காட்டிய புண்ணியவானை
எமன் போன்ற அரசு சுயநல ஆணவக் கொடுங்கோலாலே
ஏற்றுக் கொள்ளவே மறுத்து ஈழத் தமிழரின் இனிய வாழ்வை
மண்ணுக்கே இரையாக்கிய மாபெருங் கொடுமையாலே
மலர்ந்திட இருந்த ஈழம் மண்ணினுட் புதைந்ததையோ
எண்ணிடில் ஈழ நெஞ்சங்கள் ஏங்கியே தவிக்குதையோ
மின்னிடும் தமிழீழத்தை உன்னுடைப் பெயராற் பெற்று
மிகுபட வாழ்வோம் ஓரு நாள்

ஆக்கம்

கமலாவதி இராமநாதன்


THINUSHA TAKEOUT
& CATERING
The Excellent Place
for South Indian
& Sri Lankan
905-454-4224
905-497-4224
107 Kennedy Rd., S.,
Brampton, ON, L6W 3G3



அண்ணனுக்கு அகவை அறுபத்தாறு
அகவை அறுபத்தாறு - அண்ணர
ஆனந்தம் ஆறாய்ப் பெருகுதே
பொங்கிவரும் எண்ணங்களைப்
பொதியாய்ச் சுமந்து நிதம்
வெம்பிய முகத்துடனே
வீட்டுக் கதவைத் திறந்துவைப்பேன் - அண்ணர
அன்பு சொரிய நீங்கள் என்று வருவீர்கள்?
வழிமேல் விழிவைத்து
வாசல்வழி பார்த்து நிற்ப்பேன்
ஆண்டுகள் பல கடந்து - வயது
அறுபத்து ஆறாச்சு அண்ணர...
காலச் சுழச்சியிலே
கடுகதியாய் ஓடும் நாம்
நாடு எது என்றோ...
பாடுபட்ட கதைகளையோ...
நாம் மறக்க மாட்டோம் அண்ணர.
தேம்பி அழும் குழந்தை நான்
தேவாரம் பாடி உனை வாழ்த்த
செய்த தவம் எத்தனையோ - அண்ணர.
நான் செய்த தவம் எத்தையோ

காடுகள் பல சுற்றி
நாடுகள் சில தேடி
வாழ்வியல் கற்றுத்தந்த - எம்
தமிழ்த் தேசியத்தின் தலைவரே
வாழ்க வளமுடன் என்று
வாயார உனை வாழ்த்த
வாய்ப்பெனக்கு எட்டியதே
ஞாலம் போற்ற வாழ்கவென
நான் என்றும் வாழ்த்திடுவேன் - அண்ணர.
கோலம் எது கொண்டும் நீங்கள்
குலம் விளங்க வரவேண்டும் - என்று
கும்பிட்டுத் துதிக்கின்றேன் என்றென்றும் - அண்ணர
காலமது வெல்லுமென்று
கனிவுடனே காத்திருப்பேன்...
சாலச் சிறந்தவரே நற் பெயர்கள் பெற்றவரே
தமிழ் இனத்தின் வரலாற்று படைத்த வள்ளலே
அகவைத் திருநாளில் வாழ்த்துகிறேன்
வாழ்க வாழ்க வையகம் உள்ளவரை

- தையல்நாயகி
ஒட்டாவா





தேசியத் தலைவனின் பிறந்தநாளை வாழ்த்திடுவோம்..

கரிகாலன் வந்துதித்தான்
கார்த்திகை 26, 1954ல்..
அவன்வாழ்ந்த காலத்தில்
கடலலைபோல் மேதினியில்
காவியங்கள் ஓவியங்கள்
கற்பனைகள் பொங்கியெழுந்தன..

நாட்டியங்கள் நாடகங்கள் கூடனங்கள்
தெருவெல்லாம் நிறைந்தோடியது.
கவிஞர்கள் அறிஞர்கள் புலவர்கள்
தேசமெல்லாம் பரந்து வாழ்ந்தனர்..
தேன்மொழியாம் தமிழ் அந்திய
தேசமெல்லாம் கவிபாடியது..
தமிழ் கலை பண்பாடு இலக்கியம்
காதெல்லாம் பாய்ந்தோடியது..
இத்தனைக்கும் இந்த கரிகாலன்
காரணமானான் அவன்
காவியக் கலை நாயகனானான்..
தேச விடுதலையில்?
உன் தேசத்தில் பறப்பது
தேசியக் கொடி
என்தேசத்தில் படிவது
இரத்தக் கறைகளா?
சிங்களத்தின் அடையாளம்
சிங்களமென்றால்
செந்தமிழன் அடையாளம்
பாயும் வேங்கையென்றான்..
நன் தமிழீழ கொள்கையில்
அணுவளவும் மாறாதவன்..
தமிழீழ தேசத் தலைவனை
கரைபடிந்த கயவர்களின்
கரங்கள் அழித்ததே வென்று
கண்ணீர் விட்டு கதறியழும்
தமிழினத்தின் கண்ணீர்.
இன்று (26-11-2022) வரை ஓயவில்லை..
இன்று வரை மக்கள் தேடும்
உலகின் அதிசயத் தலைவன்
தமிழீழ தேசியத்தலைவன்
மேதகு பிரபாகரனே..தேசிய
தலைவனின் வரலாறும் எழுத்
தமிழர்கள் வரலாறும்
வரலாற்றில் என்றும் அழியாத
வரலாற்று சுவடுகளே..
தலைமகனின் பிறந்த நாளினை வாழ்த்திப்
போற்றிப் புகழ்ந்திடுவோம் என்றுமே..

அன்புடன்
தீப்பொறியான் - கனடா

VASANTHAM SUPERMARKET
இலங்கை, இந்திய, பன்னாட்டு
மளிகைப் பொருட்கள்
2900 MARKAM ROAD, TORONT, ONMIX 1E6
Tel: 416-292-8585
Sri lankan, Indian & Multinational
Groceries





பிரபா மாமா வாழியவே

பூத்துக் குலுங்குது பாரண்ணா - புதுப்
பூக்கள் சிரிப்பதைப் பாரண்ணா
நேற்று மலர்ந்திட்டப் பூக்களெல்லாம் - இன்று
சிரித்து மகிழுது பாரண்ணா

காற்று அடித்திடும் பக்க மெல்லாம் - தமிழ்
புதல்வன் புகழ் வருகுது பாரண்ணா
போற்றி புகழ்ந்திட நாமெல்லாம் - புது
மகனின் பிறப்பிது பாடண்ணா

எத்தனை மலர்கள் பூத்திடினும் - இந்த
மகவின் அழகு யாரண்ணா
விற்பன மாயவை வீசிடும் காற்றுடன்
தலைவன் உதய நாள் இதுவண்ணா

கற்பனைக் கெட்டாத வீர உருவம் - தமிழின்
தலைமகன் என்பதையறிய ண்ணா
பேய்களும் பிசாசுகளும் சூழ் கொண்ட
மண்ணை காத்திட உதித்த உறவண்ணா

கற்றவர் மேதினியில் பலருண்டு - தமிழின்
மேன்மைகள் கூறிட இவனுண்டு
விண்ணிலும் பாய்ந்து வென்றிடவே - இவன்
தோன்றிய புது பிறப்பண்ணா

ஏற்றம் கண்டிட தன் னுறவாய் - தமிழ்
தாயின் உறவினை கொண்டு நின்றான்
பாட்டனின் சொர்ப்பனம் தாங்கி நின்று - சிங்கள
சிதைவை கண்டு வென்றான்

போற்றுவோம் எங்கள் தமிழ் மகனை - பாரில்
ஏற்றுவோம் மனதில் புது நெருப்பை
மாற்றுவோம் எங்கள் வலி வாழ்வை - அவன்
பெயரினை சொல்லி நின்றண்ணா

வாழ்த்துக்கள் சொல்ல வா அண்ணா
சேர்ந்துமே சொல்வோம் வாழ்த்தண்ணா
வாழிய வாழிய வாழியவே எங்கள்
பிரபா மாமா வாழியவே

வாழிய வாழிய வாழியவே எங்கள்
பிரபா மாமா வாழியவே

- கவிமகன்.இ





இதயம் புகுந்து வாழும் தலைவன் இமையம் மீது வாழ்கிறான்
அவன் தலைமறைவு வாழ்வினிலும் தமிழ் இனம் நடுவில் வாழ்கிறான்

தாங்கும் தூண்கள் அருகில்லை மனம் ஏங்கிவாழுதே
துடிப்பிழந்த
தாய் நிலமும் தூங்கவில்லையே

நிரந்தரமாய் தலைவன் ஒன்று தமிழ் இனத்தில் வாழுவாய்
நீ நின்மதியை தந்து தலைமறைவில் வாழுவாய்

எம் உயிர் இருக்கும் நாள்வரையும் உன்னை வாழ்த்துவேன்
உரிமையுடன் தலைவா என்று குரல் உயர்த்தி பாடுவேன்

உயர்வான வாழ்த்துக்களை உனக்கு கூறுவேன்
உண்மையா வாழ்த்துக்களை உறக்க கூறுவேன்

உண்மை தலைவா நீ வாழ்க வாழ்கவே .

- சுசிலாதேவி சுந்தர்.
இந்தோனேசியா.

Preparation of Income Taxes T1 and T2 with E/File

Location : Unit 9- 40 Winges Road Woodbridge, ON. L4L 6B2
Pearl Fortune Canada
Head Office: 101 Laird Drive, Markham, Ontario. L3S 3N6
Office Number 905-554-5606 | Fax Number 905-554-3236

Please contact:
Yo K Gamar (C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993



போர்க்களத்தில் துணிவின் அடையாளம்
புன்னகையில் தமிழ் இனத்தின் அடையாளம்
உரிமையின் உண்மை அடையாளம்
உத்தமத்தின் தெளிந்த அடையாளம்
ஒழுக்கத்தில் நிமிர்ந்த அடையாளம்
விடுதலைக்கு விடுதலைப் புலிகள் அடையாளம்
தமிழனுக்கு வழிகாட்டல் அடையாளம்
சந்ததிக்கு உன் சரித்திரம் அடையாளம்
சமுத்திரத்தில் கடல் புலிகள் அடையாளம்
தமிழ் இனத்திற்கு பிரபாகரன் பெயர் அடையாளம்
அந்த பெரும் தலைவனுக்கு வாழ்த்து கூறுவது என் அடையாளம்.

- சு.சுகிரதன்.
இந்தோனேசியா.



RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

வீடு வாங்க, விற்க அல்லது
அது சம்பந்தமான விடயங்கள் அறிய
இலவச ஆலோசனைகளுக்கு உங்கள் நண்பன்
ஆனந் தர்மலிங்கம்

Office: 416.287.2222
1265 Morningside Ave. #203
Toronto, ON. M1B 3V9

Ananth
Tharmalingam
Sales Representative



416.939.9525



மண்சிறக்கத் தமிழ்மணக்க மாநிலத்தில் மலர்ந்தவனே வாழ்க

நல்பதியாம் வல்வைமகள் நலமுடனே நல்கிய
நாயகனே தமிழினத்தின் காவலனே நற்புதல்வ!
செல்வமிகு குடும்பத்தில் சீமையுறப் பிறந்தவனே!
தீமைகள் போக்கிடச் செருக்களம் புகுந்தவனே!
தொல்பெரும் வரலாற்றுச் சுவடுகள் பேணித்
தூங்கிய தமிழனை விழிப்புறச் செய்தவனே!
சொல்மல ராற்றொடுத்துச் சூட்டினேன் பாமாலை
தினவெடுத்த தோளுடைத் திருமேனியனே வாழ்க!

வாய்மையும் மரபும்நல் வண்மைபேண் தந்தை,
வணங்கா முடியுனை வனப்புற ஈய்ந்தவன்,
தூயவனாம் வேலுப்பிள் ளையொடு பார்வதிசேர்
துய்ய மணியெனப் பெற்றெடுத்த பெருமைந்த!
தாய்மையின் வடிவமும் தண்ணொளி வதனமும்
தன்சீதன மாய்க்கொண்ட தாயவளாம் மங்கை
சேயுனை ஈன்றபயன் தெரிகிறது, தூரமில்லை!
செவ்விது சேயோனாய்ச் சீருடனே வாழ்க!

தம்பிநீ என்றென்றும் எங்களுக்குத் தம்பிதான்!
தரணியிலே நெடுங்காலம் வாழவேண்டு மென்பதனால்!
நம்பியே இருக்கின்றோம் நானிலம்வாழ் தமிழரெலாம்
நாடித் துடிப்பென்றும் வாழ்த்துவதும் உந்தனைத்தான்!
வெம்பியழும் மானிடராய் வீணர்தம் வஞ்சனையால்
வீறுகொண்ட தமிழினமோ வெந்துநொந்து போனதையா!
செம்பரிதி பேர்கொண்ட தெய்வமகன் வரவிற்காய்த்
தேசமெங்கும் செந்தமிழில் வந்தனைசெய் கிறோமையா!

மானிடரில் உனக்குநிகர் மேதினியில் இல்லைஐயா!
மறைந்தவரி லெவருமே நினக்கீடா காரன்றேர்?
நோன்பிருந்து நீபுரிந்த மாதவப் பேறதனால்
நுடங்கிய தேயயன்று நேர்மையிலாச் சிங்களம்!
வான்பறந்து வந்தாலும் வலைவீசி நின்றாலும்
வையகத்தில் நினையெங்கும் நெருங்கிட மாட்டாரே!
ஆனமட்டும் முயன்றாலும் இயலாது அவர்தமக்கே!
அருவமும் உருவமுமாய் உலாவரும் இறையன்றோ?

மண்சிறக்க, தமிழ்மணக்க, மாநிலத்தில் மலர்ந்தவனே!
மாண்புட னே ஞாலமதில் மேன்மையுறு மாதவ!
எண்ணிலாப் பெருமைகள் ஏற்றமுறப் பெற்றவ!
இவ்வுலக மாந்தரை எம்திசைக் கழைத்தவ!
கண்ணென நீகொண்ட எண்ணங்கள் நிறைவேறக்
காசினி யுள்ளவரை நின்புகழ் நிலைத்திட ப்
பண்ணோடு பாடல்கள் பாடியே மாவீரர்
பாதபங் கயங்கள் தொழுதிடு வேன்யானே!

-பவானி தர்மகுலசிங்கம்-

KC DENTAL
Dr. Chandra & Associates
www.kc.dental
Our Clinic is environmentally friendly:
Digital charting and radiography

Visit us at KC Dental where we can provide
Dental care for you and your entire family

புதிய முகவரியில்
6065 Steeles Ave., E,
Unit E4, Scarborough ON. M1X 0A8
(Spice Land Purple Building)
416-291-0717


Dr. Chandra Dr. Sharon Dr. Hajer

941 Taunton Rd E Unit C7
Oshwa, ON, L1H 7K5
905-448-2500, 416-700-0101

வரலாற்றுப் பேரெழில்

ஈழவேட்கையின் தீரா ஊற்றாகி,
காலவேள்வியில் வற்றாப் பெருநதியாய்

உச்சரிக்கும் போதெல்லாம்
உணர்வுகள் ஒளிகொள்ளும்
ஒற்றைச் சொல்லாகிய
ஒப்பற்ற தலைவா!

வாழ்த்துகின்றநோம்

முன்னவனே
மூபத்து ஆண்டுகளுக்குள்
மூத்தகுடி அவலத்தை
உலகறியச் செய்த செம்மலே

போற்றுகின்றோம்

தமிழனத்தினி
அடிமைத் தோலுரித்து
ஐநூறு ஆண்டு கடந்து
விடுதலைப் பேழகைத்
தரிசிக்கச் செய்த தலைவா

நீ எமது வரலாற்றுப் பேரெழில்.
உலகம்
புரிந்து கொள்ள முடியாத புதிர்.

எம் தூரத்து நட்சத்திரங்களைக் கூட
கயவர் களவாடி விட்ட
துயரப் பொழுதாகிக் கிடக்கின்றது
காலம்.

கூனர்க்கினிகளின்
தந்திரச் சாத்திரங்களில்
சிக்கிக் கிடக்கின்றன
ஈழத்துப் பெருவெளிகள்.

உன்னுருவைப் பச்சை குத்தி
பவ்வியமாய் வலம் வருகின்றன
சில பச்சோந்திகள்.

கார்த்திகை 27இல் நெய்விளக்கேற்றி
நெஞ்சுருகிப் பின்
உன்னுரை கேட்ட உலகம்
உனக்காய் இன்னும்
உயிர்திருக்கின்றது.

வெற்றுவெளி கண்டு
இடையிட்டு எழுந்த
சில உருவங்கள்
பிரபாகரத்தின்
'பிரதிகள்' ஆக முயல்கின்றன.

உன் வெள்ளாட்டு மந்தைக்குள்
உருமாறி உலா வந்த
கருப்பாருகள் சாயம் வெளிறிச்
சாத்தான்களாகித் திரிகின்றன.

உயிரைச் சுற்றிக்கிடக்கும்
ஒற்றைச்சொல் மந்திரமே!

முள்ளிமுனை முற்றுப்புள்ளியல்லவென,
உன் பெயர் ஒதி உயிர்த்திருக்கும்
பிள்ளைகள் அறிவர்.

தோலுக்கு வரி பூசி
போலிக்குப் புலியாகி
கூலிக்கு மாரடிக்கும்
கூளர் கும்பல் கூடி முயன்றாலும்,

உன் விழியேறிய அனலின்
பிழம்புகளை
ஒருபோதும் அணைக்க முடியாது.

பிறந்தோர் உருவிலும்
பிறப்போர் கருவிலும்
இணைந்தே இருக்கும்.
விடுதலைத் தீ.

விவேகானந்தனூர்.பொ



You Name It. We Sell It!
NEW OCEAN™
SUPERMARKET
Download on the App Store
GET IT ON Google play
Best store to find fresh goods and quality products at affordable prices.
For our valued customers: Open daily 7:30 am - 10:00 pm
Download NOS CLUB APP to access your NOSM Discount Card & get 2% discount on all your groceries
ORDER NOW
416 292 0122 | 5635 Finch Avenue East, Scarborough, ON M1B 5K9

தமிழர் தலைவனானவன் எங்கள் தாயுமானவன்



எத்தனை தடைகள் தாண்டி
எத்தனை சுவைகளை சுமந்து
எத்தனை காயங்கள் தாங்கி
எத்தனை மொழிகளில் தங்கி
எத்தனை சவால்களை எதிர்கொண்டு

எத்தனை சோதனைகளை கடந்து
கவிரபு பாய்ச்சிலினது உதித்து
எத்தனை கனவுகள் கொண்டு
எத்தனை கனிமவி கண்டு
எத்தனை இலட்சிய பற்றுகொண்டு

கடலையில் கண்ணாக ஒன்று
உரிமையில் உறவாக உறவாடி
பெரும வேலதை துறந்து
உரிமை வேலியில் முளைத்து
வான் படலை வளர்ந்து
வளர்ந்து நின்றான்

தமிழர் வீரத்தை வானத்திலேற்றியும் கடந்தான்..
தமிழர் தலைவனானவன்.
எங்கள் தாயுமானவனே..!

"தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்"

பிரபாசெழியன்

ஒளி பாய்ச்சும் பிரபாகரனியம்



பூனையின்
கண்களைப்போல
ஒளிர்கிற
வஞ்சகத்தின் நீழலில்
புதைந்துள்ளது
ஈகம்.

முளைத்துக் கிடக்கிறது
வேலியோர
கிளுவைக்கருகில்
உதிர்த்துவிட்ட
கடுகுப் பூக்கள்.

பூக்கள்தோறும்
வெந்தய ஒளி.

தோன்றும்
செருமுகத்தான்
கல்லளைக்குள்.

நெஞ்சத்தில்
ஒளிர்கிறது
கங்கு அணையா
பெருநெருப்பு.

பகை முடிக்கும்
இருள் கிழிக்கும்
ஒளி வெளிச்சம்.

- கலைபாரதி
மன்னார்குடி.



தேசிய தலைவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்...

கார்த்திகையில் உதித்தவனே
கரிகாலன் பெயர் கொண்டவனே
கடல் வெளி வான் படை கொண்டு
தமிழ் மண்ணை ஆண்டவனே

மூச்சோடு நீ வருவாய்-தமிழ்
பேச்சிலே நீ கலந்திருப்பாய்
முள்ளி வாய்க்கால் முடிவென்பார்
முட் புதரும் களமாடும் உன் பெயர்
சொன்னால்

பிரபா கரன் நீ
இறவா வரம் நீ
பிறவா நீ யிருந்தால்-தமிழ்
புகழா அடைந் திருக்கும்

கரு சுமக்கா தாயானாய்
களமாடும் வேங்கைகள் நீ
பெற்றாய்
நடு நிசியில் பெண் நடந்த
நல்லாட்சி நீ தந்தாய்

தமிழினத்தை எதிரியவன்
அழிக்கையிலும்-தமிழ்
நங்கையரின் உடல் கசக்கையிலும்-
சிங்கள
மங்கையர் மானம் காத்தவன் நீ-
உன்
மகவையும் மண்ணிற்காய்
கொடுத்தவன் நீ

படை பல கண்டு தடை பல
உடைத்து-தமிழ்
பூமியை ஆண்ட புலி மகன்-நீ

காவியம் படைத்தாய் தரணியர்
திகைத்தார்-வீர
தளபதி ஆனாய் உலக மெங்கிலும்

நீரினில் பந்தாக மீண்டெழும்
தமிழினத்தில்
நீண்டாண்டு வேள்வியில்
தலைவனாய் வந்தவனே
மழையாய் மலர் சொரிந்து-அலை
போல் நாம் வாழாத்துகின்றோம்

தெற்கில் அன்று அனர்த்தம் கண்டு-
உதவ
தமிழர் படை அனுப்பி நின்றாய்
நாடாளும் நிர்வாகம் நன்கறிந்த
கதிரவனே
நாடுகளும் அறியுமுன்னை காலம்
வரும் காத்திருப்போம்

பல்லாண்டு வாழ்த்தும்
கவிஞர் நாவாயூரான்,நாவாயின்
ஆய்வியல் வித்தகர், கவி ஞாயிறு!

வென்சிலாஸ் அனுரா
கனடா.



வரலாற்றில் ஓர் தலைவன்!

வரலாற்றில் ஓர்தலைவன்
வையத்தில் விடுதலைக்காய்ப்
புதியதோர் போதம்செய்தான்
பிரபாகரன் எனும்பேரான்!
உரமான செந்தமிழன்!
வரமான இனத்தலைவன்!
திணையாக வாழ்நிலமும்
கணையாகத் தாய்மொழியும்
சுணையாகத் தந்தவனே
சுதந்திரத்தின் எழுத்தானான்!
அடக்குமுறை இனஅழிப்பு
முடக்குவாதம் கொலைவாளின்
காலாகாலக் கொடுமையாய்
சாலாக இலங்கையின்
சரித்திரத்தை எழுதியதோர்
சாக்காட்டுப் பேய்நாடு!
விரித்ததொரு வலையினிலே
வீழ்ந்ததின்று கேளுமப்பா!

மாவீரர் அண்ணையென்று
மனதெல்லாம் ஆர்த்தவர்கள்
சாவீரர் உயிலெழுதிச்
சத்தியத்தைக் காத்தவர்கள்
தன்வாழ்வு தன்செல்வம்
தான்வாழ எண்ணாத
வித்துவத்தின் தமிழ்மகனே
வேங்கைமகன் பிரபாவாம்!
கூதியாம் கூட்டமது
கொழுத்தியெனும் தமிழர்தனைச்
சாதியது இல்லாமல்
சரிப்பதுவே கொண்டதுவாம்!
நாதியது இன்றிலங்கை
நாறுகிற தாம்தமிழா
எல்லாமே பொய்வாழ்வு
ஏதுகிடைக் குமென்ற
சொல்லொன்றும் உண்மையில்லை!
நல்லாக ஏமாற்றி
நடுத்தெருவில் வீழ்த்துவதே
பொல்லாத சிங்களத்தின்
புத்தியதே என்றும்பார்!
நாளைவிஞ் ஞானமது
நல்லதொரு வாழ்வதனைக்
காலமகள் எழுதுதற்குக்
கங்கணங்கள் கட்டிடுவீர்!
சீவுகின்ற சாதியதில்
சிக்கியொரு பயனுமில்லை
பூவிரியும் சுதந்திரத்தைப்
போற்றியொரு நாளைவரும்!
மாவீரர் நாளில் இன்று
மனந்திறந்து வணங்குகின்றோம்!

-ஈழமகன்


THE MORTGAGE LEADERS
Find One Group Inc Financial Service
பணம் தேவை ஏற்படும்பொழுது உங்களுக்குத் தேவை
கைகொடுத்துதவும் தோழன் !
SUREN THAM Fiancial Advisor / Mortgage Agent
Licence #M1400251.
416-357-2809 | Bus:416-752-3114 | Fax: 416-752-3115
2100 Ellesmere Road Suite # 211-C Scarborough,ON M1H 3B7 | suren.tham@findone.ca

தமிழ் இனத்தின் தாகம் கண்டு
தாகமே தமிழ் ஈழம் தீர்வு என்று
தனிப்பெரும் கனவைத் தாங்கி
தகமையும் தற்துணிவும் கொண்டு
தலைவனாய் தலை நிமிர்ந்த வல்லான்!
தக்கநல் மிக்கான் தக்கான்!
தரணியே வியக்கும் வண்ணம்
தமிழரை அணி திரள்க என்று
தாயகம் மீட்புப் போர் தொடுத்து
தமிழமறம் தொட்ட தலைவன் பிரபா!
தமிழ் எதிரியை மிரள வைக்க என்று
தமிழ் தந்த வல்ல தக்கசெம்மல்!
தொல்காப்பியம் தொட்டளைந்து
தமிழ் மரபு வழி உதித்த தமிழன் தம்பி!
ஆண்டவன் உலகில் தமிழன் அதுவும்
அகிலத்தையே ஆளவல்லான் என்று
மீண்டுமோ களமாடி நிலை நிறுத்தி
மிகப் பெரும் போர் தொடுத்த
மாண்மிகு மேதகு தலைவன் ஐயா!
தகவுடை தமிழினம் தலை நிமிர்ந்து வாழ
தமிழின மானம் காக்க தம்மை ஈய்ந்து
உலகெலாம் எமை உயர வைத்த
உதித்தவோர் அற்புத அவதாரமன்றோ
தலைவர்கட்கே தலைவன் என்றால்
தப்பென்று சொல்வாருண்டோ?
தலைவா உனை நினைத்தால் போதும்
தனித் தெம்பு பிறக்குதையா!

- சிவா சின்னத்தம்பி



MAJESTIC CITY PHARMACY

துரித சேவை
சகல காப்புறுதி திட்டங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்
$2.00 அறவிடப்படமாட்டது
முதியவர்களிற்கு தள்ளுபடி உண்டு

Majestic City Mall
A1- 2900 Markham Rd
Scarborough, ON
M1X 1E6
416-298-9944
416-299-5943
mcitypharma@gmail.com

"யுகத்தால் அழியாத தலைவன் நீ"

அழி அலைகள் மோதி
ஆரோகணம்பாட
அழித்தென்றல் அசைந்து
அவரோகனம்பாட
கார்மேகம் கலைந்தோடி
பூபாளம் மெத்தையிட 1954
கார்த்திகை இருபத்தியாறில்
தமிழீழ வல்வெட்டிதுறை மண்ணில்
கரிகாலனாய்... வந்துதித்தவனே...
ஒருகணம் நினைத்துப்
பார்த்தால் நெருங்கமுடியுமா?
தமிழீழ விடுதலை ஆயுதப்
போராட்ட தலைவனாவதை
நினைத்தால் முடியுமென
மனத்தால் உறுதியானான்...
எதையும் தாங்கும் பெரும்
புயலானது அவனது இதயம்...
காந்தம் கலந்திருந்தது
அவனது விழிகளில்...
சாந்தம் சேர்ந்திருந்தது
அவனது நாவினில்...
அவனது வீரமும் விவேகமும்
முயற்சிக்கு அத்திவாரமானது...
கானல் நீரைக் கடந்து நலிந்து
கடும் நெருப்பில் கருகி
அழ்கடலில் நகர்ந்து நீந்தி
நசிந்து
நடந்து நிமிர்ந்து
கரைசேர்ந்து...
தமிழீழ விடுதலைத் தாகமும்
அவனது கோர்வைப் பேச்சும்
கருணைப் பார்வையும்
அகராதியானது ஈழ
மண்ணிலே
அணு அளவும் தான்கொண்ட
கொள்கையிலே மாறாதவன்
கறைபடிந்த கயவர்களின்
கரங்கள்
எங்கள் தலைவனை
அழித்ததோ? என்று
தெருவெல்லாம் ஓலமிட்டு
எங்கள்
தேசியத்தலைவன் எங்கேயென்று
மக்கள் (26-11-2022) இன்றுவரைத்தேடும்
உலகின் அதிசயத் தலைவன்
தமிழீழ தேசியதலைவன் பிரபாகரனே...
தலைவனின் வரலாறும் ஈழத்தமிழன்
உலகத் தமிழர்களின் வரலாறும்
என்றும் அழியாத ஒரு புதுயுகமே?



கச்சியூரான்
சுவகவி கண.துரை- கனடா


CENTRAL DRIVING SCHOOL
Kana – THURAGG
Licensed Driving Instructor
Manager & Owner
MTO Approved Beginner Driver Education Course Provider
Ministry Approved Driving School
Phone: 416-890-5273
Email: mathykana@gmail.com
19 Savarin Street, Scarborough, Ontario.



தாய் நிகர் தலைமைக்கு அகவை வாழ்த்து

மரணம் கலைத்து மண்ணில் ஜனனம் பல
கொண்டவன்
உறக்கம் தொலைத்து விண்ணில்
உயரம் பல கண்டவன்

ஆழப் பெரும் கடலில்
வாழக் குறி சொன்னவன்
வீழாத் தமிழ் வீரத்தை
தோளில் வெல்ல சுமக்கின்றவன்

பாடும் பறவைக்கு எல்லாம்
பறக்கும் நிலை தந்தவன்
ஓடும் நதிக்கு எல்லாம்
ஓட வழி சொன்னவன்

கூட்டின் கதவுடைத்து கிளியை
வானம் உலவ செய்தோன்
காற்றில் உலவி நின்ற தமிழ்
மானம் காத்து நின்றோன்.

ஆற்றல் உடைய அண்ணன்-அவன்
தோற்றம் பிறந்த நாளில்
சீற்றம் மிககொண்டு பகைக்கு
கூற்றம் ஆகி நிற்க வாழ்த்துவோம்
பல்லாண்டு

- கவிப்புயல் சரண்


பூண்டி பிறெட் பேக்கறி
Joseph - Tel: 647-547-1615
729 Kennedy Rd. Scarborough, ON. M1K 2C6

கார்த்திகை மலர்கள் மணம் வீச,
விண்மீன்கள் விளக்கேற்ற,ஓயாத அலையாய்
அறுபத்திமொன்றில் அடி எடுத்து வைக்கும் எம்
கரிகாலனுக்கு பிறந்த நாள் இன்று
புன்னகை சிந்திடும் தானை தலைவனுக்கு சிறந்த நாள்
இன்று

கார்த்திகை பூக்களை கோர்த்து
செம்பகத்தை தூதாக அனுப்பி
வாழ்த்து சொல்லலாம் என நினைத்தால்
அவ்விரண்டும் உனை பார்த்து கண் சிமிட்டி
தலை வணங்கி நிக்கிறதே

எம் தலைவனுக்கு வாழ்த்திங்கு
ஆயிரம்தான் படைத்தாலும்
உன் பெருமைக்கு ஈடு சொன்னால்
ஆயிரமும் பூச்சியமே

நானொன்றும் வளர்ந்தவள் அல்ல்
"உனக்கென்று" கூறுகையில் என் கவி மேலும், பேனா
முனை மேலும் வெறுப்பெனக்கு
அது நான் உன் மேல் வைத்திருக்கும் பாசத்தின்
வெளிப்பாடு

தேசமெனும் மடல் எடுத்து
அன்பெனும் எழுது கோல் பிடித்து
வீரமெனும் மை ஊற்றி
என் கண்ணீரை சிதற வைத்து எழுதுகிறேன் ஓர் வாழ்த்து

கடவுளை யாரும் நேரில் பார்த்ததுண்டோ..?
சன்னியாசி கடவுளை உருவில் கண்டோம்
பிரபாகரன் எனும் கடவுளை சிலோனில்
நேரில் கண்டோம்
ஆம்..
கடலில் இருக்கும் முத்தையும் விட மேலான முத்து நீ
அம் முத்துக்குள் இருக்கும் சிற்பிகள் எம் இனம்

இப்பொன்னான நன்னாளில்
ஆளுமை நிறைந்த,அதிகாரம்
நிறம்பிய உன் உரையில்
உலகமே அதிர்ந்து உனை திரும்பி
பார்த்து மெய் சிலிர்த்து போகும்...

இந்த நாள் எம் தாயகத்தின் திருநாள்

எல்லையில் நிற்கும் சிங்களமும்
குடிமனைக்குள் உலாவும் புளுனிகளும்
எப்போது வானலையில் உன் குரல்
முழங்கும்...
எப்போது எங்கே தமக்கு இடி விழும்
என உயிரை கையில் பிடித்து எச்சி விழுங்க கூட பயந்து
ஏக்கத்தோடு



இருப்பார்களே அந்த திருநாள்
இன்று எங்கே..?

எமக்காக மூச்சுக்காற்றை ஈந்து
எம் தாயக கனவை சுமந்த மாசில்லாத
வீரமூட்டிய தூசில்லாத தூயவனும் நீயே
தலைவா உன் ஒற்றை பார்வை போதும்
எம் இனம் மகிழ்ச்சி உற்று வாழ்வதற்கு
ஆம்..
உன் வரவிற்காய்....
இரணைமடு வான் பாயும்
வன்னி மண்ணில் மயில் ஆடும்
கோணவரை மீது முகில்கள் இரங்கும்
பாலாவி நீர் பதிகம் பாடும்
கீரிமலையில் நீர் ஊற்றெடுக்கும்
வற்றாப்பளைபாச்சி கண்கள் மிளிரும்
நந்தி கடலும் பொங்கி நுரை தள்ளும்

அத்தனையும் ஆளாகி அழகாய் பூத்து பிறந்திடும் தமிழீழ
தலைவா உன் வரவிற்காய்

நாவும் தடுமாற,கைவிரல்கள் நிதானம் அற்று
போக,எழுது தாளும் கண்ணீரில் நனைந்து போக
ஏக்கத்தோடு வாழ்த்துகின்றோம்....
தாயகத்து மண்வாசனை நிறைந்த இனிய பிறந்தநாள்
நல் வாழ்த்துக்கள் உங்களுக்கு தலைவர்

- மார்ஷல் மார்ஷல்

Cell Tel Mobility
CELL TEL MOBILITY
For all your cellphone and accessory needs...
◆ Rogers Wireless ◆ Telus Mobility ◆ Fido ◆ Bell Mobility
◆ Mobilicity ◆ Freedom Mobile ◆ Public Mobile ◆ Chair Mobile
Phone: 416-266-6818 / 416-999-4126 / 416-891-1234
Toll Free: 1-866-439-9393
info@celltelmobility.com | www.celltelmobility.com
2637 Eglinton Ave East, Scarborough ON. M1K 2S2 (Eglinton / Midland)

மாதவ வீரனுக்கு மகிழ்வுடன் அகவை வாழ்த்து!

வரும் ஒரு நொடியில் எல்லாம்
வரம் உனை காண வேண்டும்
தரும் ஒரு தவிப்பில் எல்லாம்
தமிழ் எமை ஆள வேண்டும்

அஞ்சுதல் அறியா வீரன்
துஞ்சியே போகாத் தீரன்
அறவலி இணைந்த அறிவல்
மறவலி நிறைந்த செம்மல்

தொடு பகை உடைத்த சூரை
நஞ்சரை மதித்த வேழம்
வஞ்சரை வதைத்த காலம்
வலிமையில் எழுக் கோலம்

கற்பனை கடந்த வீரம்
காவியப்புகழின் சாரம்
ஓவியத் தமிழின் தென்றல்
ஒப்பனை இல்லா அன்றில்

முன் பனிக் காலத் தூறல்
தமிழுக்கு வாய்த்த சாரல்
மென் மனத்தமிழின் தூவல்
காணவே கண்ணின் ஆவல்

நாளை உன் அகவை நாளில்
கண்ணெதிர் வேண்டாம் எந்தன்
கனவிலே வந்திடண்ணா
தவம் அதன் பலன் கிடைக்கும்

- கவிப்புயல் சரண்





வீடு வாங்க, விற்க அழையுங்கள்

Vaheesan
Jeyaveerasingam
Broker

Direct: +1 (416) 276-9999
3-1286 Kennedy Rd, Toronto, ON, M1P 2L5
Tel:416-270-1111, Fax: 416-270-7000



பிரபா மாமா வாழியவே

பூத்துக் குலுங்குது பாரண்ணா - புதுப்
பூக்கள் சிரிப்பதைப் பாரண்ணா
நேற்று மலர்ந்திட்டப் பூக்களெல்லாம் - இன்று
சிரித்து மகிழுது பாரண்ணா

காற்று அடித்திடும் பக்க மெல்லாம் - தமிழ்
புதல்வன் புகழ் வருகுது பாரண்ணா
போற்றி புகழ்ந்திட நாமெல்லாம் - புது
மகனின் பிறப்பிது பாடண்ணா

எத்தனை மலர்கள் பூத்திடினும் - இந்த
மகவின் அழகு யாரண்ணா
விற்பன மாயவை வீசிடும் காற்றுடன்
தலைவன் உதய நாள் இதுவண்ணா

கற்பனைக் கெட்டாத வீர உருவம் - தமிழின்
தலைமகன் என்பதையறிய ண்ணா
பேய்களும் பிசாசுகளும் சூழ் கொண்ட
மண்ணை காத்திட உதித்த உறவண்ணா

கற்றவர் மேதினியில் பலருண்டு - தமிழின்
மேன்மைகள் கூறிட இவனுண்டு
விண்ணிலும் பாய்ந்து வென்றிடவே - இவன்
தோன்றிய புது பிறப்பண்ணா

ஏற்றம் கண்டிட தன் னுறவாய் - தமிழ்
தாயின் உறவினை கொண்டு நின்றான்
பாட்டனின் சொர்ப்பனம் தாங்கி நின்று - சிங்கள
சிதைவை கண்டு வென்றான்

போற்றுவோம் எங்கள் தமிழ் மகனை - பாரில்
ஏற்றுவோம் மனதில் புது நெருப்பை
மாற்றுவோம் எங்கள் வலி வாழ்வை - அவன்
பெயரினை சொல்லி நின்றண்ணா

வாழ்த்துக்கள் சொல்ல வா அண்ணா
சேர்ந்துமே சொல்வோம் வாழ்த்தண்ணா
வாழிய வாழிய வாழியவே எங்கள்
பிரபா மாமா வாழியவே

வாழிய வாழிய வாழியவே எங்கள்
பிரபா மாமா வாழியவே

- கவிமகன்.இ

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



Vilosanan Sivatharman
416-993-0826

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

• Visitation • Funeral & Memorial Service • Reception • Burial • Cremation

மார்க்கம் மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை

8911 Woodbine Avenue, Markham, Ontario L3R 5G1
Email: Info@chapelridgefh.com
www.chapelridgefh.com



Christeen Seevaratnam
416-258-6759

தேசிய தலைவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்



முப்படைகள் கண்ட மறவனே....

உப்புக் கடலும் ஊதக் காற்றும்
உவகை கொண்டு ஒலி யெழுப்ப
கார்த்திகை மீதிலே பூமாரி பொழிய
காவலன் பிறந்தாய்
தமிழ் தலையாய் ஆனாய்

யுகங்களுக்கு ஒரு முறை
பூமியில் அவதரிப்பர் உத்தமராம்
தமிழரின் எழுச்சியாய்
தமிழரின் மாட்சியாய்
தரணியில் வந்துதித்தாய்-எங்கள்
கரிகால மன்னனே பிரபாகரன்

கடைக் கோடி ஊரெல்லாம் உன் பேச்சு-நீ
கண்ணியம் தவறாத மன்னவனாம்
கருவறுக்க துணை நின்ற நாடுகளும்-இன்று
தமிழர் காவலன் நீயென சொல்கிறதாம்

உலக தமிழ் இனத்தை இணைக்கும் சொல்-எம்
உயிரோடு உறவாடும் ஒரு சொல்
வலிகள் நிறைந்தவன் நிமிர்ந்திட ஒரு சொல்-அது
வேள்வியில் நாம் பெற்ற பிரபாகரன் எனும் சொல்

கடலடி உறங்கும் குமரிக்கண்டம்-ஆனந்த
கண்ணீர் வடிக்கிறதாம்-நீ
மூத்த குடி தமிழினத்தின் முத்தென சொல்கிறதாம்
பல் இனமும் நேசித்த தலைவனே-உன்
முகத்தை காட்ட வருவாயா

வீர வேங்கை வீட்டு மண்ணை
வயிற்றில் பூசி
உலகம் போற்றும் உன் போல்
பிள்ளை வேண்டி
கர்ப்பிணிகள் வேண்டுறார்கள்-தம்
நினைவிலே உன்னை சுமக்கிறார்கள்

முப்படைகள் கண்ட மறவனே -எப்
படையும் படிப்பர் உனையே
வீர காவியம் நாம் படித்தோம்-எம்
வாழ்விலே அதை உம்மில் கண்டோம்-நீ
வாழும் காலத்திலே நாம் வாழ பெருமை
கோண்டோம்
நன்னெறி தந்தவனே என்னாளும் நீ வாழ்வாய்

ஆனந்த வாழ்த்துக்கள் எம் அரசனுக்கு
அளவில்லா ஆசைகள் எங்களுக்கு-பல்
ஆண்டுகள் நீ வாழ-எம்
அகம் நிறைந்து வாழ்த்துகின்றோம் வாழியவே

இதயம் நிறைந்து வாழ்த்தும்
கவி ஞாயிறு
நாவாயூரான்

வெண்சிலாஸ் அனுரா
(கனடா)


Gogulam
"Where you find Art"

கோகுலம் இது ஒரு கலைக் களஞ்சியம்
வயலின் கருவி, வீணை, மோரசிங் , கடம், தபேலா, புல்லாங்குழல்,நடன உடை (Custom), சாரீ, வேஷ்டி , குத்துவிளக்கு , இசைக்கருவிகள், பரத நாட்டிய அணிகலன்கள் (Jewellery), பரத நாட்டிய புத்தகங்கள்,CD,DVD சுவாமி சிலைகள், அனைத்து அளவுகளிலும் சுவாமி மாடம், சுவாமிப் படங்கள், பூஜை பொருட்கள்,சுவாமிப் பாட்டு அனைத்தையும் பெற்றுக்கொள்வதுடன் காவடி, கரகம், மயில்தோகை, பொய்க்கால் குதிரை, கிரீடம் போன்றவற்றை வாடகைக்குபெற்றுக்கொள்வதுடன் அரங்கேற்றத்திற்கான மேடை அலங்காரங்களும் செய்து தரப்படும்
Phone:(001)416 265 2093
2654, Eglinton Avenue East (Brimley & Eglinton),Scarborough Ontario M 1 K 2 S 3 Canada | Opening Time:11 A.M To 9 P.M | www.gogulam.com



இது கார்த்திகை மாதம்...

எல்லாளன் பெயர்வினங்கித் – தமிழ்
ஈழத்தை ஆட்சி செய்தாய்
வல்லோனே பகைவெல்ல – உன்
வரவெண்ணிக் கிடக்கின்றோம்.

வழிமேல் விழிவைத்துந் – தலைவா ! உன்
வரவை எதிர்பார்த்துக்
கழியும் நாள்எண்ணி – நாங்கள்
காத்துக் கிடக்கின்றோம்.

மாவீரர் நாளில்நீ உரைநிகழ்த்த
வருவாய் எனஎண்ணிக்
காவலனே ஆவலுடன் – நாங்கள்
காத்துக் கிடக்கின்றோம்.

ஈழத்தின் உறவுகள்நாம் – சிங்களர்
இழிசெயலால் சீரழிந்து
வாழும் நுழைப்புடனே – உன்றன்
வருகைக்கே ஏங்குகிறார்.

கொன்றுவிட்டோம் எனச்சொல்லி நாளும்
கொக்கரிக்கும் இராசபக்சே
நின்றழுது புலம்பிடவே – உன்வரவை
நினைத்துக் கிடக்கின்றோம்.

நுழைந்திடலாம் தலைவர்சிலர் – ஆனால்
நல்லதமிழ் மக்களெலாம்
நுழைக்கும்நல் உணர்வுடனே – என்று
நாயோராய் வாழ்கின்றார்.

தலைவர்சிலர் தமிழ்நாட்டில் – இனத்தைத்
தாங்குவதாய் நடிக்கின்ற
நிலையெண்ணி நின்றிடாமல் – தலைவா ! நீ
நேரில்வர வேண்டும் !

– பேராசிரியர் அறிவரசன்





ஆர்ப்பரித்து அலை கடல்கள் அகமகிழ்ந்து குதிக்க..
பூப்படைந்து செடிகொடிகள் பூரிப்பில் மிதக்க..
வியப்படைந்த வானில் மேகம் மின்னல் ஒளி தெளிக்க..
மீட்பனவன் வந்துதித்தான் மண்ணுயிர்கள் மீட்க..
பாவமதும் சாபமதும் ஒன்றாகப் புணர்ந்து
கோரமெனும் ஓர் மகவை ஈன்றெடுக்க அதுவோ
வேகமென உருவெடுத்து மக்கள் பலி கேட்க
ஏகனவர் தம்வாழ்வை இரையாக்கிக் கொண்டார்..

சிறுவயதில் குழந்தைத்தனம் நிரம்பப் பெற்று இருந்தார்
விடலையிலே விடுக்கப்பட்டக் கட்டளையை உணர்ந்தார்
தனக்குரிய தோழர்களைத் திறம்படவே தெரிந்து- ஒரு
பெரும் மக்கள் படை தன்னைத் தன்பின்னே இணைத்தார்
பிறருக்காகத் தன்வாழ்வைப் பிழிந்தெடுத்துக் கொடுத்தும் - சிலர்
சுயலாப நோக்கோடு துரோகங்கள் இழைக்க
இவர் நம்பும் உயிர்நண்பன் பணம் பொருளை வேண்டி -இவர்க்
கெதிரான அரசாங்கம் தனில் காட்டிக் கொடுத்தான்.
பிறக்கையிலே செல்வங்களில் கொழிக்கவில்லை பிறர் போல்
சிறக்கையிலே உலகினிலே யாருமில்லை இவர் போல்
உறக்கமில்லை ஓய்வுமில்லை மக்கள் தொண்டில் வாழ்வு
இறக்கவில்லை மீட்பரவர் இடர்நீக்க வருவார் தூயவன்



REON HOMES REALTY INC,
BROKERAGE*
INDEPENDENTLY OWNED & OPERATED
(905) 209-8080
18-25 KARACHI DRIVE, MARKAM,
ONT, L3S 0B5





இதயம் புகுந்து வாழும் தலைவன் இமையம் மீது வாழ்கிறான்
அவன் தலைமறைவு வாழ்வினிலும் தமிழ் இனம் நடுவில் வாழ்கிறான்

தாங்கும் தூரண்கள் அருகில்லை மனம் ஏங்கிவாழுதே
துடிப்பிழந்த
தாய் நிலமும் தூரங்கவில்லையே

நிரந்தரமாய் தலைவன் ஒன்று தமிழ் இனத்தில் வாழுவாய்
நீ நின்மதியை தந்து தலைமறைவில் வாழுவாய்

எம் உயிர் இருக்கும் நாள்வரையும் உன்னை வாழ்த்துவேன்
உரிமையுடன் தலைவா என்று குரல் உயர்த்தி பாடுவேன்

உயர்வான வாழ்த்துக்களை உனக்கு கூறுவேன்
உண்மையா வாழ்த்துக்களை உறக்க கூறுவேன்

உண்மை தலைவா நீ வாழ்க வாழ்கவே .

- சுசிலாதேவி சுந்தர்.
இந்தோனேசியா.



"எந்நிதியும் தருவான் செல்வா சந்நிதி முருகன்"

ஸ்ரீ செல்வா சந்நிதி முருகன்

ஆலயம் திறந்திருக்கும் நேரம் காலை 9:00 மணி முதல் மாலை 6:00 மணிவரை
வெள்ளிக்கிழமைகளிலும் விசேட நாட்களிலும்
காலை 7:00 மணி முதல் மாலை9:00 மணிவரை

தொடர்புகளுக்கு பிரதமர் பூசகர்கள்
பொன் புவனேந்திரன் ஐயா சு. ஞானசேகரம் ஐயா
3-1085 Bellamy Rd N, Scarborough, ON M1 H 3C7 Tel: 416-297-8716 Cell: 416-731-8453





Mirage Banquet & Convention Centre
1917 Albion Rd, Toronto, Canada. (Hwy. 27 @ Albion Rd)
தமிழர் நினைவு அறக்கட்டளை 416-805-3085 / 416-766-9544
TamilMemorial Tamil_Memorial

Ravi Paramu
Broker
Bus: 416-298-3200
Direct: 416-262-4176
rparamu1558@gmail.com
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently owned and operated
Higher Standards Agents... Higher Results!
210-31 Progress Ave, Toronto, ON., M1P 4S6
www.raviparamu.com

MORTGAGE ALLIANCE
R&R Mortgages
1801 Harwood Ave., N., Suite 5
Ajax, ON. L1T 0K8
Toll Free: 1-877-366-3487
www.mortgagealliance.com
independently Owned and Operated.
Lic#12122

Ravi Paramu AMP
Martgage Agent
LIC #:M11000420
Direct: 416-262-4176
Office: 416-321-0011 | Fax: 416-321-0020
Email: rparamu@mortgagealliance.com
Email: rparamu@hotmail.com



அண்ணா உன் வருகைக்காக உலகத் தமிழினமே ஏங்கித் தவிக்கிறது
எமக்கு ஏற்பட்ட அழிவுகளை ஈடுசெய்ய
நீ வரவேண்டும் அண்ணர்’
எம் மாவீரர் கனவுகள் நனவாக
நீ வரவேண்டும் அண்ணர்’
முள்ளிவாய்கால் பேரவலத்திற்கு பதிலடி
கொடுக்க நீ வரவேண்டும்’
எங்கள் உறவுகளை சிதைத்தவனை சின்னா பின்னமாக்க
நீ வரவேண்டும் அண்ணர்’
ஈவிரகம் இல்லாமல் எம் பிஞ்சு மழலைகளை கூட தீவிரவாதிகள் என கூறி அழித்த
காட்டு மிராண்டி மகிந்தவின் தலையை மண்ணில்
உருளவைக்க நீ வரவேண்டும்’
அடிமை விலங்கை உடைத்து எம் ஈழத்தை மீட்டெடுக்க
பாயும் புலி பாசறையோடு நீ வரவேண்டும்
எம் ஈழத்தில் மீண்டும் புலிக்கொடி பறக்கவேண்டும்
அதற்கு அண்ணா மீண்டும் உன் வருகை வேண்டும்
வேண்டும் அண்ணா வேண்டும் மீண்டும் உன் வருகை எமக்கு வேண்டும்
அண்ணனின் வரவை எதிர்நோக்கும்

EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX REALTY INC., BROKERAGE
RE/MAX ACE
INDEPENDENTLY OWNED AND OPERATED

Baskaran Sinnadurai
Commercial . Industrial . Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com





தமிழீழ வழியில்...

ஈழ விடுதலைப் போராட்டத்தை
ஒவ்வொரு தமிழனும்
தனது அடையாளமாக, ஆத்மமாக
பதிவெடுத்துக் கொள்கிறான்.

பெருகின்ற பெருமையில்
பெருமிதம் கொள்ளும் உயிராக
ஒவ்வொரு உயிரும் உரிமையாகிறது.

வீரத்தை விதைத்த எழுகையில்
விரதமிருந்து வரம் பெறுகிறது
விடுதலை நோக்கிய தாயகப் பயணம்.

இலட்சிய வெறி துடிப்பாகிறது
வாழ்வின் வாசலில் கோலமாக.
எதுவாகினும் எதிர்ப்போம் என்கிறது
எங்களின் மாவீர விடுதலை ஈகம்.

தலைவன் எங்கள் சூரியன் என்று
தமிழினம் வாழ்வை அசைக்கிறது.

விழியூற்றை விடுதலைக் கவிதையாய்
மொழிந்து கவி பாடும் குரல் பிரபாகரன்.

ஒற்றுமையை சுவாசத்தின் ஓசையாக்கி
ஒளிர் என்கிறது அந்தத் தமிழ் குரல்.
ஒடிந்து போன கனவுளை அடுக்கி
விசையெடுக்கிறது யுகத்தின் வேட்கை.

தமிழரின் தாகத்தைப் பறை ஓசையாக்கி
தடை உடைக்கிறது வீர எழுச்சிக் குயில்.
தர்மம் என்று தலையசைத்து சிவக்கிறது
தமிழ் சுமந்த அந்த பிரபாகரக் கால வெளி.

நம்பிக்கையை நடை பாதையாக்கி
தமிழன் என்று நடக்கும் அழகு தமிழீழம்.
நச்சுப் புகை நடுவே நர்த்தனமாடுகிறது.
நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்
என்ற உறுதி உரை சுமந்த நாட்டிய மயில்

▪ கலைப்பரிதி



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமய தீட்சை அந்திமக் கிரியை (மரணச்சடங்கு) அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்துகொள்வதற்கு சைவக் குருக்களை தொடர்புகொள்ளவும்



இணுவில் திருவூர் சிவஸ்ரீ M.S.வைத்தியநாதன் குருக்கள்
647-629-5468



“நீயிருந்த நிலம்”

உறவைத் தேடும் பறவையாய்
உன் வரவைத் தேடி அலைகிறேன்
உணர்வைப் பிழியும் உன் நினைவை
உனக்கான உயிர்த் தேசத்தில் விதைக்கிறேன்

மீட்பார் அற்ற அடிமை தேசமாய்
நீண்டு செல்கிறது நாட்கள் எல்லாம்
காப்பார் அற்று தவிக்கின்றோம்
நீயிருந்த நிலம் நோக்கி வருவாயோ?

எண்ணங்கள் எல்லாம் மழை நின்ற நிறங்களாய்
வண்ணங்கள் தொலைத்தே மாய்கிறது
திண்ணமாய் முடிவுகள் வராது...
மண்ணுக்குள் புதையுண்டு போகிறது...

ஏற்றி வைத்த தீபங்கள் எல்லாம்
ஏனோ ஒளி இன்றித் தவிக்கிறது

பூட்டி வைத்த காயங்கள் எல்லாம்
கண்ணீராய் கரை புரண்டு பாய்கிறது

ஒழிம் தந்த உன் நினைவுகள் தானே
காலத்தால் அழியாமல் கனக்கிறது
வீரம் தந்த உன் வார்த்தைகள் தானே
வீழ்ந்திடாது எம்முள் இன்றும் வாழ்கிறது

விடியலின் வேராகப் பிறந்தவனே
பல கோடி விழிகள் உனக்காய் தவமிருக்கு
ஏங்கித் தவிக்கின்ற எங்களுக்காய்
எம் தேசம் தனை நோக்கி வாராயோ?

அண்ணனின் வரவை நோக்கும்

அன்புத் தங்கை .
றதன் கார்த்திகா.

Reginos Pizza
ராசன்
135 Toronto road
Port Hope, Ontario. L1A 3S6
Tel: 905-885-5656
Main intersection:
Toronto road and 401



காதலிக்க ஆசை எனில் கரிகாலன் கண் அசைவை காதல் செய்வீர்

அது ஒரு காலம் .
வரியுடை போட்டு எமை அழகு பார்த்த காலம்.
வல்லமைகள் எங்கள் அருகில் வலம் வந்த காலம் .

அப்போது ஒரு நிலம் எங்களிடம் இருந்தது
குறுகிய நிலம் என்றாலும் கூன் நிமிர்த்திய நிலம் அது.

அங்கே நாங்கள் காதலிக்க ஒரு பெரும் சனக்கூட்டம் இருந்தது
எங்களை காதலிக்கவும் அந்த சனக்கூட்டம் மறக்கவில்லை .

நாங்கள் நிலத்தை காதலித்த பொழுது எல்லாம் நிலமும் எங்களை காதல் செய்தது .

அம்மா அப்பா அக்கா தம்பி தங்கை என்ற உறவுகளை கீழ் தள்ளி ஒரு உறவு மேல் நோக்கி இருந்தது
அது தான் அண்ணன்
அது தான் தலைவன்.

நெருப்புக்குள் நீந்தவும்
நீருக்குள் உயிர் வாழவும் எமக்கு பயிற்சிகள் கொடுக்கப்பட்டது

எம் நிலம்
எம் பலம்.
எம் வனம்
எம் வானம்
எம் கடல்
எம் சனம்
இவை காக்க படவேண்டியவை மட்டும் அல்ல தேக்கப் பட வேண்டியவை .

ஆர்ப்பரிக்கும் கடலுக்கு மத்தியிலும் அமைதிப்பூங்காவாய் எம் வாழ்வு இருந்தது

சிங்கள ஓநாய்கள் சிதைக்காது இருக்க முள்வேலிகளோடு நாங்களும் காவல் இருந்தோம்

காயமடைதல்
குணமடைதல்
களம் திரும்பல்
இதுவே எங்கள் வாழ்வியல் எனக் கொண்டு இருந்த பேரின்ப பெரு வாழ்வு அது

சேனைப் புலவை சிதைக்க ஆனைப் பெரும் கூட்டம் அன்று உள் நுழைந்தது
காலித்தெருக்கள் எல்லாம் கலைத்து களைத்து விட்டோம்

நாம் காதலித்த மக்கள் சாதல் விரும்பாமல்
நாம் காதலித்த காடு அழிய விரும்பாமல்
காதலித்த தலைமை கண் காட்ட கந்தகத்தை இறக்கி வைத்தோம் .

சாதல் ஒரு பெரு விருப்பு எமக்கு அதுவும் சந்ததிக்காய் என்றால் சந்தோச பெரு மகிழ்வு .

கன நேரம் கந்தகம் காலில் கிடக்காது
கசங்கும் தமிழ் வாழ்வு காண மனம் நிலைக்காது
தேர் ஏறும் ஒரு நாள் பார் ஆள வரும் பெரு வீரம்
விதைத்த கரி மருந்து
தோள் ஏறும் நாள் தொலைவில் இல்லை

காதல் திரு நாளில் கந்தகத்தை காதல் செய்வோம்
கண் மணியாய் காத்து நின்ற காவலரை காதல் செய்வோம்
கரிகாலன் கண் அசைவை காதல் செய்வோம்

தேசத்தை மக்கள் பாசத்தை காதல் செய்வோம்
கரிமருந்தை காதல் செய்வோம்
கன்னி மனக் காதல் பெரிதல்ல எமக்கு
கண்ணி வெடிக் காதல் போதும் தீர்ப்போம் பகைக் கணக்கு .

- கவிப்புயல் சரண்

EVEREST FURNITURE
Unique - Quality - Service - Lowest Price
416.332.0721
உங்கள் சகல தளபாடத் தேவைகளுக்கும் நாடவேண்டிய நகரின் தன்நிகரற்ற தமிழர் நிறுவனம்.
தமிழரின் மத்தியில் மெத்தை தளபாட உற்பத்தியில் 18 வருட கால முன்னணி நிறுவனமாகத் திகழ்கிறது
நீங்கள் விரும்பிய தளபாடங்களை ஓடருக்குச் செய்துகொள்வதுடன் அனைத்துவிதமான சோபாக்களும் உங்கள் உடலுக்குத் தகுந்த ஆரோக்கியமான மெத்தை வகைகளையும் நீங்கள் விரும்பிய முறையில் எவரெஸ்ட் தொழிற்சாலையில் செய்து பெற்றுக்கொள்ளலாம் என்பதனை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்!
80 Finchdene Square, Scarborough ON M1X 1C1. Neilson / Finch (Between Neilson & Tapsertt) | www.everestfurniture.com



வேலாயுத வேலவன்...!

சங்கத்தையும் வென்று தரணியை
ஆளவந்த மறத்தமிழன்

முத்தமிழை மீளவும் மீட்டெடுத்த
தமிழீழத்தின் பெருந்தலைவன்

வல்வை மண்ணில் உதித்துவந்த
ஈழத்து சூரியவேந்தன்

மண்ணில் உதித்து ஆழ்கடலையும்
விண்ணையும் ஆண்ட பெருமகன்

அடிமைப்படுத்தி அடக்க வந்தவர்களை
புறமுதுகிட்டு ஓட வைத்த தேசமகன்

தமிழீழம் ஒன்று மட்டுமே தமிழினத்தின்
தீர்வு என்றுரைத்த தமிழ்மகன்

பண்டாரவன்னியன் வீரத்தை மீளவும்
தந்த வரலாற்றுநாயகன்

ஈழதேசம் கடந்தும் தமிழீழதேசத்தை
உலகெங்கும் நிறுவிய உலகமகன்

அண்டமெங்கும் அனைத்தையும் அறிந்த
கணித்திட்ட காலத்திருமகன்

பெண்ணியத்தை அடிமை விலங்குடைத்து
போராட வைத்த கண்ணியவான்

முக்காலமும் உணர்ந்து காலத்தை கணித்த கலியுகத்தின்
கரிகாலன்
அன்னையாக தந்தையா அனைவருமாக
தோழ் கொடுத்த தாயுமானவர்

தமிழன் வீரத்தை உலகம் எங்கும்
விதைத்திட்ட வீரமகன்

வேலவனின் வீரத்தை தமிழீழத்தில்
நிறுத்திய வேலயுதவேலன்

இராவண வேந்தன் வழியே அவதரித்த
தமிழ் தேசத்தின் புலிவீரன்

ஐம்பெரும் காப்பியமும் கண்டிராத
எங்கள் தேசத்தின் தலைவன்

எழுத்தாக்கம்,
ஈழம் வாகீசன்.

KEV Tax Services
FREE EFILE SERVICE
STARTING FROM $ 24.99
CORPORATE INCOME TAX
BOOKKEEPING & ACCOUNTING SERVICES
PERSONAL INCOME TAXES
QUALITY SERVICE WITH REASONABLE FEE
FREE YEAR- ROUND CUSTOMER SERVICE
CORPORATE AND SOLE PROPRIETOR BUSINESS REGISTRATION
அழையுங்கள்:
Ganthiy Selvarajah (B.A Sri Lanka)
2889 Lawrence Avenue, East (Basment) M1P 2S8
(Brimely/Lawrence)
Tel: 416-841-1866 | Fax: 1888.841.8829
Email: ganthiy@rogers.com
website: KEVTAX.com

ஐம்பூதங்களின் சக்தியானவன் எம் தலைவன்!



வறண்ட நிலம் மீது மழைதூவிய
வான்முகிலுக்குப் பல்லாண்டு
நாதியற்ற இனத்தை காத்து நின்ற
காப்பரணுக்கு அகவை அறுபத்தாறு
தமிழ் இனம் மீது இருள் சூழ்ந்த வேளை
ஒளிதூவிய வெளிச்சத்துக்கு
அகவை அறுபத்துஆறு
பகை ஏவிய குண்டுகள்
எம் உயிர்துளைத்த வேளை
நெஞ்சத்துக் கவசமாய் நின்று காத்தவனே
நீ வாழ்க! பல்லாண்டு வாழ்க!

துயர் வடிந்த இனமாய்
நீர் வற்ற நதிப்படுக்கையாய்
விளைச்சல் இல்லா நிலமாய்
நெடுங்காலமாய் உறக்கத்தில் கிடந்தோம்
தட்டியெழுப்ப எவருமின்றி
தவித்து தனித்துப்போய் நின்றோம்

ஐயனே!
இளங்காற்றின் பூந்தென்றலாய்
தழுவினாய் எம்மை
உயிர்த்தெழுந்த எம் கரங்களில்
வாள் தந்து
பெரும் புயலாக வீச வைத்தாய்
காலாற உன் நிழலில் நின்று
கவலைகள் மறந்திருந்தோம்
இன்று மறுபடியும்
எம்மை தவிக்க விட்டு
எங்கு சென்றாய்

உன்னைக் கொண்டாட
தடைபோடும்
அவர்களுக்கு என்ன தெரியும்
எங்கள் தேவன் நீ என்று
ஐம்பூதங்களின் சக்தியானவன்
நீ என்று

நீண்ட நெடுங்காலமாய்
கிடப்பில் கிடந்த வரலாறு
உன் வருகைக்குப் பின்னரே
தலைநிமிர்ந்தது
எவனும் எம் இனத்தை மிதித்து
எது வேண்டுமானாலும் செய்யலாம்
என்ற நிலையை மாற்றிய பெருமை
நின்னதே தலைவா!

நீ பெற்ற வெற்றிகள் அனைத்தையும்
இனத்தின் கையில் தந்துவிட்டு
வெறுங்கையான வெளிச்சம் நீ
எங்கள் விடுதலைப் போரின்
தெளிந்த தலைப்பயணியே
இன்று உனக்கல்ல அகவை
அறுபத்துஆறு
தமிழர் எமக்கே !
தமிழர் விடுலைப்போருக்கு
பல்லாண்டு !
வாழ்க வாழ்க
தலைவா நீ வாழ்க

கவியாக்கம் : நாகதேவன் தமிழீழம்.
நாம் தமிழர் கட்சி.

S.P.Importers
Vegetables, Fruits, Groceries, Dairy Products, Gift Items, Pooja Items & Many More
2863 Lawrence Avenue East, Scarborough, ON. M1P 2S8 (Brimley & Lawrence)
Tel: 416-261-3881 | Fax: 416-26-949
Fish Market
2853 Lawrence Avenue East Scarborough, ON. M1P 2S8 (Brimley & Lawrence)
Tel: 416-261-4737
Fax: 416-26-5483
Importers & Distributors of High Quality Furniture & Mattresses
2861 Lawrence Ave. East (Lawrence & Brimley)
Scarborough, ON. M1P 2S8
Tel: 416-266-3077
Fax: 416-266-9499
www.spimporters.com



உலகை புரட்டிப் போட்ட ஓர் தமிழ் ஆளுமை

ஈழத்து பெருவெளியில் மட்டும் அல்ல உலகத்து சம வெளியில் எல்லாம் உரைக்கின்ற
தமிழ்ப் பெயரே
பிரபாகரன்

எங்கிருந்து வந்த வல்லமை
எதிலிருந்து பெற்ற ஆளுமை
எப்படி வளர்ந்து கொண்ட போர்க்குணம்

உலகை புரட்டிப் போட்ட ஓர் தமிழ்
ஆளுமை
ஈழ வரலாற்று மாற்றத்துக்கான ஓர் போராற்றல்
காலத்தை கடந்தும் களம் கண்ட கரிகாலப் பெருவீரன்
சிகரம் தொட்டுச் சிரித்த சிறுபுலிச் செழுமறவன்
சினந்தெழுந்து பகை வென்ற சேனைப்படை வீரன்
செந்தமிழின் சினம்கொள் செஞ்சுவர்த் தூண்
அஞ்சுதல் தனை மறந்த ஆயிரத்துப் பெருங்
காளை
கெஞ்சுதல் அகற்றி வென்ற பேரீழப் புலியுரான்

ஆற்றல் மிகுதி கொண்ட வேழத்தீறல்
வேந்தன்
கனவுக்கு உயிர் தந்த காவியத்து
தமிழோவியம்
நினைவுக்குள் நிமிர்கின்ற நித்தியத்து
பெருவீரம்

பெண்மைக்கு களம் கொடுத்த பேராற்றல் தாய்ப் புலியே
ஆண்மைக்கு அழகுந்தன் களம் கொண்ட சிறு வயதே
காவியத்தில் எழுதாத பாட்டுடைப் புலி வேந்தா
ஓவியத்தில் தீட்டாத ஒற்றுமையின் விழி ஒருப்பே

அழித்தாலும் அழியாது வேருன்றும் பெரு
மரமே
ஒழித்தாலும் ஒழியாத ஓர்மத்தின் தீப்
பிளம்பே
சிதைத்தாலும் சிதையாத செந்தமிழின் ஒளி
ஒருப்பே
எரித்தாலும் ஏரியாத எரிதணலின் பெரும்
பொறியே.

கந்தகம் கட்டி நின்ற காவலுக்கு
களம் தந்த கரிகாலனே .
வெந்த எம் மனம் வந்து குளிர் தந்த ஒளி நிலவே .
செந்தணல் மண் வந்து விலங்கொடித்த
செழு மறவா
எந்தமிழ் மொழி கொண்டு எனையாளும்
செந்தமிழா

வாழ்க நீ நூறாண்டு
இனிய அகவை நாள் வாழ்த்துகிகள் அண்ணா

Platinum
CAR & TRUCK RENTAL
Economy to luxury rent a car
Find the rental you want for
the time you need!

RESERVE NOW
Sathees Prasad Operations Manager
416-828-7081 | 416 613-1811 platinumcar.ca 1-880 Ellesmere Rd, Toronto, ON M1P 2W6, CA



தமிழினத்தின் தலைவனை தேடும் தமிழ்மகனின் தவிப்பு..!

எல்லாள மன்னவனே
எங்கள் குலசூரியனே-நீ
இல்லாத சோகம் எம்மை
வாட்டுதய்யா-தாய்
இல்லாத குழந்தை
தனியாத் தவிக்குதய்யா

முல்லையில் நீ இருந்த
முப்படையும் நீ வளர்த்த
அத்தனையும் உன்புகழ்
சொல்லுதய்யா
அழகா உன்சிரிப்பு
அடிக்கடி வந்து கொல்லுதய்யா

காத்தோட உன்வாசம்
காடெல்லாம் உன் பாசம்
ஊத்தாட்டம் உன் நினைப்பு
ஊறுதய்யா
ஊரெங்கும் உனைக்காண ஏங்குதய்யா
உத்தமரே ஊரைகாக்க வாருமய்யா.

கடல்தாண்டி போனாயோ
கடலாகிப்போனாயோ
தலைவா நீ திரும்பி வரனும்
தமிழர் நாட்டுக்கு.

மறைந்து நீ வாழ்ந்தாலும்
மண்ணோடு போனாலும்
தலைவா நீ பெருமை
உலகத்தமிழுக்கு

தலைமை ஒன்று இல்லாம
சரிஞ்சது எங்கட ஆட்சி
நீயே எங்க ராஜா
வா வா களத்துக்கு

தாய்மண்ணை காக்கும்
கடவுள் நீயய்யா
தூங்காம நீயும் போனா
தப்பய்யா..

காட்டுக்குள் வாழ்ந்தாலும்
களத்தில வீழ்ந்தாலும்
கம்பீரம் குறைஞ்சிடாத
நெருப்பு நீ

அய்யோன்னு போனாலும்
ஆகாசம் போனாலும்
தண்ணீரை குளத்தில்
சேர்க்கும் வரப்பு நீ.

உரிமை கேட்கிற ஆள
உதைச்சு தள்ளிற ஊர
கைய கால வெட்டிவீசும்
கரிகாலன் நீ

காடையர் உன்னை கண்டா
ஓடாரோ...
காப்பாத்தும் தெய்வம்
வந்து சேராயோ

த.யாளன்
கவிஞர் யுகபாரதியின்
சில வரிகளும்





தெற்கே உதித்த போராட்ட சூரியன்
பிரபாகரன்

நீர்க்குடம் உடைந்து போர்கடலாய் மாற
சிறுத்தை வீரன் பிறந்தான்

தெற்கே உதித்த சூரியனாய்
வல்வையில் உதித்த
போராட்ட சூரியன்

ஈழம் அடிமை
நாடாக இருக்க

சுதந்திரம் இல்லையேல் வாழ்வு இல்லையென
தமிழீழ தேசம் படைத்தவன்

எங்கள் பிரபாகரன்

பதவிகள் பல வந்தும் உதறிய
கொள்கைக்காரன்

நாற்காலில் அமர்ந்து அறையில்
கோப்புகளை பார்க்க மறுத்த தமிழின் தலைமகன்

எப்படை வரினும் இப்படை வெல்லுமென
சங்கத்தமிழை கலியுக தமிழில் உணர்த்திய

உணர்ச்சியின் உச்சம் சூபிரபாகரம்

- ஈழம் புகழ் மாறன்



அவனது பெயரில் வீரமிருக்கிறது...

பெயர் சொன்னாலே
கர்வம் கொள்கிறது..
பெண் முகத்தில் கூட
மீசை முளைக்கிறது..

அன்பும் கூட
அவனோடு ஒட்டியிருந்தது
அவனது புன்னகை போல..

அவனோடு தான்
நாங்கள் இருந்தோம்
எம் தேசத்தில்
காவலோடும் கண்ணியத்தோடும்..

இன்று
யாரோ ஆள்வதாய்
எம் ஒற்றைப் பருக்கை
உணவைக் கூட அவர்களே
பிச்சையிடுவதாய் சொல்கிறார்கள்..

அதிகாரங்களும் ஆயுதங்களும்
நம்மை ஆள்கிறது..
விகாரைகளும் அரசமரங்களும்
பெருகுகிறது...

போர் தின்று துப்பிய
எச்சங்களாய் நாம்
காக்கைக் கூட்டம் போல
அவர்கள்

இருந்தும்
கனவுகள் சுமக்கின்றோம்
எங்களிடம் மிச்சமிருக்கும்
சுதந்திர உணர்வுகளின் மீது
கனவுகளைக் கட்டியெழுப்புகிறோம்..
தலைவனில்லா தேசத்தின்
தலைவனைத் தேடுகிறோம்..

மந்திரங்களின் உச்சாடனம்போல
அவன் பெயரையே மௌனமாய்
உச்சரிக்கின்றோம்

எத்தனையோ வீரர்களை
தமிழர்களை
மரணம் எடுத்துச் சென்றாலும்..
அவன் பெயரை கடைசித்தமிழன்
இருக்கும் வரை
உலகிற்கு எடுத்துச் சொல்வான்..
அது வெறும் பெயரல்ல தமிழனின்
தன்மான உணர்வு

காலத்துயரின் பெரு மௌனம்
கவிழ்கிறது மனங்களில்..
இங்கு ஏதுமற்ற வாழ்வில்..

வாருவாய் தலைவா
தலைமுறை தழைக்க”

- சங்கரி சிவகணேசன்





Veerar Takeout & Catering

416-299-4541 / 647-293-6634

5790 Sheppard Avenue, #3, Scarborough, ON M1B 5J6



சிரிக்கும் அழகுக் குழந்தையடா நீ செந்தமிழினத்தின்
விந்தையடா
செருக்கும் சிறப்பும் எந்தையடா
சீறிடும் புலிப்படைத் தலைவனடா
உனக்கு இன்று பிறந்ததினம்

உலகத் தமிழர் மனங்களில் வீரம் விழைந்த நிலம்
அல்லும் பகலும் பகலவனே நீ யாருக்காய் உதிக்கின்றாய்
இல்லை இல்லை இங்கே என்றால்
நீ எப்படி நிலவாய் சிரிக்கின்றாய்

ஈழத்தில் மானிடனாய்
எங்கள் தலைவனாய் பிறக்கின்றாய்
காலத்தின் அருங்கொடையே
கரிகாலன் என்ற பெயருடையே

ஔவை சொன்னாள்
அரியமான் கேட்டான்
மெய்யோ புனைவோ தெரியாது
மெய்யாய் உன்னை எதிரில் கண்டோம் மெய்சிலிர்த்தோம்
இது வரலாறு

அண்ணன் என்றார் தம்பி என்றார் அரிதாய் கிடைத்த நல்
தலைவன் என்றார் அறத்தில் சிறந்த தமிழ் முனி என்றார்
வீரத்தின் வரலாறு நீயடா
புற நானூற்று வீரத்தை நிலைநாட்டிய எங்களின் பிரபாகரா

இன்றுனது பிறந்தினம்
ஈழம் உன் வரவு கண்டு மகிழ்ந்த தினம்
வேளத்தின் உருவாக வினையறுக்கும் வேலாக ஈழத்தில்
புலியாக
கண்டோம் கண்களில் கனலாக.

கவிதையில் புனைகையிலே கன்னித் தமிழ் அழகினிலே
கான்கின்றோம் நிறைவாக.
அகவை உனக்கின்று அறுபத்தியாறு
அறம்காத்த வீரனே என்றும் உனக்கு இருபத்தியாறு,
இருபத்தியாறு

உதிக்கின்ற பெயரடா உன் பெயர்
நெஞ்சு கொதிக்கின்ற வேளையில் பிறக்கின்ற வீரத்தில்
உதித்திடும் தமிழின மாந்தர் எதிரினில் உன் முகம்

சினம் கொண்டு அடிமை விலங்குடைக்க வந்தாய்

சிறுமையிலே உளன்ற தமிழ் மாந்தர்கள்
தரமுயர்த்தி நின்றாய்
களம் வென்று உலகில் புதுப் பரணி தந்ததாய் யாரும்
காணாத உடையிலே புலியாக வென்றாய்.
கன்னியற்கும் காத்திகைக்கும் மண்ணுகில் உன்னால்
உண்டானது பேறும் பெருமையும்

பெண்மை தினம் களமாடி
படைத்ததிங்கு பெருமை பல கோடி
கருத்தின்றி கிடந்த கார்த்தி பூவின் அடிமை
விலங்குடைத்து
மறவர்களின் மலரடியில் வைத்து மாமறவா
தமிழீழ மலரென்று தரணிக்கு தந்தவனே வாழ்க

பகைவனும் வியந்தான்
பாருலகும் வியந்தது
யாரிவன் தமிழ் வீரன் என்று தினம் சினந்தது
மீட்டுவிடுவான் மூத்த குடியை. மீண்டும் நிலை
நாட்டிடுவான் தமிழ்குடியை.
என்று கை கோர்த்து வஞ்சகர் உலகு.
இறுதிப் போர் என்று பறைசாற்றி இஞ்சிக் கொரு நஞ்சு
மழை பொழிந்தார்
ஆற்றாமை செய்த அனியாயம்
அந்தோ மூத்த தமிழ்க் குடி முகம் மறைத்து போகும் நிலை
தந்தார்
என்றாலும் வீழாத வீரம்
தோற்காத வீரம் துவளாத மாணம்

ஏற்காது உலகம் இருந்தாலும் உண்மைதான் வாழும்
எழிலான அழகு சூரியா ஈழத்தில் தினமுதிக்கும் ஆதவா
கலையாத அழகு குலைலயாத தேசம்
தெளிவான தமிழ் வேந்தே.

திக்தித்திக்கும் ஐயா உன் புன் சிரிப்பு
காணமல் ஏங்கும் கண்ணீரில் வாடும்
நீ காத்த மக்கள்

நிலை குலைந்து வாடுதையா தமிழ்சாதி
நீயின்றி தவிக்கிதையா நீதி
காடுகள் யாவும் தேடுதையா கரிசல்கள் விழியாலே
மேயுதையா
வானத்து நிலவு உனைத் தேடி அலைந்து காணத
சோகத்தில் இருளுக்குள் இருவாரம் மூழ்குதையா

உல கெங்கும் உன் குரல் கேட்க ஒவ்வொரு நாழும்
ஏங்குதையா
வா வா இங்கே ஓடிவா வாடும் உன் மக்களின் மனங்களில்
வற்றாத நதியாக காட்சிதா.
உன் தமிழ் சாதிக்கு மீண்டும் சொல்லு ஒற்றுமை ஒன்றே
வல்லதென்று
நான் பெரிது நீ பெரிது தீயதென்று நடு நிலை கொள்வதே
நல்லதென்று

அடம்பைக் கொடியும் திரண்டால் மிடுக்கு
அறுகிடம் தானே ஆணைக்கும் அச்சம்.
பேச்சுக்கு இல்லை செயலுக்கு மதிப்பு
பேருண்மை சொன்னாய் இது யாருக்கு சிறப்பு
வாழ்க நீ வாழ்க வாழ்க வையகம் உள்ளவரை உன் புகழ்
வாழ்க
தேனும் பாலும் நித்திய மலர்களும் யாவும் கொண்டு
வணங்குகிறோம்

ஈழம் காக்க பிறந்த பேறே தலைவன் என்றுன்னை
வணங்குகிறோம் வாழ்த்துகிறோம்.

புதுவைதாசன்.
ம. முல்லைமதி

கலைக்கோவில்
KALAIKOVIL ACADEMY OF FINE ARTS - CANADA
The first authorized Local Training Centre for Annamalai University - Canada Campus (2012 to 2015)

பரதநாட்டியம், மிருதங்கம், புல்லாங்குழல் அனுபவமும் தராதரமும் கொண்ட முன்னணி ஆசிரியர்களினால் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன

Kalaikovil Performing Arts Centre 1-50, Innovator Ave.,Stouffville - ON, L4A 0Y2
"Miruthangakalaavithagar"
Shri. Kugenthiran Kanaganthiram Director
"Naatya Narthaki"
Smt. Vanitha Kugenthiran Director
Professional Studio with a modern stage facilities available for rent. STUDIO LOCATIONS Markham, Scarborough, Brampton, Mississauga, Stouffville, Ajax, Oshawa & Woodbridge
HEAD OFFICE:
30, New Delhi Drive, Unit-64, Markham - Ont. L35 089, Canada. Tel: (416) 292-2425 Toll Free: 1 (877) 513-2425 Fax: (647) 799-1024 Website: www.kalaikovil.com Email: info@kalaikovil.com

தாய் நிகர் தலைமைக்கு அகவை வாழ்த்து

மரணம் கலைத்து மண்ணில் இனமும் பல கொண்டவன்
உறக்கம் தொலைத்து விண்ணில்
உயரம் பல கண்டவன்

ஆழும் பெரும் கடலில்
வாழக் குறி சொன்னவன்
வீழாத் தமிழ் வீரத்தை
தோளில் வெல்ல சுமக்கின்றவன்

பாடும் பறவைக்கு எல்லாம்
பறக்கும் நிலை தந்தவன்
ஓடும் நதிக்கு எல்லாம்
ஓட வழி சொன்னவன்

கூட்டின் கதவுடைத்து கிளியை
வானம் உலவ செய்தோன்
காற்றில் உலவி நின்ற தமிழ்
மானம் காத்து நின்றோன்.

ஆற்றல் உடைய அண்ணன்–அவன்
தோற்றம் பிறந்த நாளில்
சீற்றம் மிகுகொண்டு பகைக்கு
கூற்றம் ஆகி நிற்க வாழ்த்துவோம்
பல்லாண்டு

- கவிப்புயல் சரண்



என் தலைவன் வருவான்

வல்வை மண் தந்த
வரலாற்று நாயகன்
களம் பல கண்ட
புறநானூற்றுப் புதல்வன்
என் தேசத்தின் தலைவன்
பிரபாகரன் வருவான்

இரத்தவெறி கொண்ட
காடையர் கூட்டம்
இனத்தை துண்டாடும்
வேளை
இமயம் நடுநடுங்க
எரிமலையாகி வருவான்

புத்தவிகாரையும் பிக்குகளின்
வருகையும்
தமிழ் நிலமெங்கும்
படையெடுக்கம் போது
வீசும் புயலின் வேகமென
என் தலைவன் வருவான்

நாள்தோறும் எங்கள்
வீடுகளில்
அழுகுரல் கேட்க்கும்
நாளில்
காமக் கொடூரர்களின்
ஈனப் பார்வையால்
தமிழ் மாதரின் மானம்
பறிக்கப்படும் போது
சுழன்றடிக்கும் கனலாய்
பகையை சுட்டெரிக்க
வருவான்

தாம்நிலம் எங்கும்
சிங்கனம் குடியேறி
தமிழர் வாழ்வியலை
அழிக்கும் நாளில்
பெரும் படையோடு
படையெடுத்து வருவான்
தமிழீழம் வென்று
எங்கள் கையில் தருவான்.

படைப்பு : நாகதேவன்
தமிழீழம்.





HOMELIFE HIGHER STANDARDS
Homelife Galaxy REAL ESTATE LTD
210- Corporate Dr., Toronto ON. M1H 3G5
Brokerage Independently owned and operate
Ranjan Francis Xavier
Sales Reprensentative
Dir: 416.816.1220
Off: 416.284.5555
Fax: 416.284.5727
francisranjan@hotmail.com





வழிகாட்டத் தலைவன் உண்டு - எங்கள்
வலிபோக்கும் மறவன் என்று
ஒளிகாட்டும் இறைவன் என்றோ-உம்மை
விழிபூத்து காத்து நிற்கிறோம்"

68ம் அகவையில் அகிலம் வியந்த அண்ணனுக்கோர்
வாழ்த்து"

கார்த்தகை இருபத்தியாறு..-எம்
ஊரெல்லாம் ஒன்றாகி கூத்தாடும்
பார்த்தீபன் பிறந்த நன்நாள்.

ஆண்ட பரம்பரை
காலமெல்லாம் கைகட்டி
ஆள வழியின்றி வாய் பொத்தி,
தலைகுனிந்து அடிபணிந்து-எம்
ஈழ மண்ணையும் விலைபேசி -சேற்றில்
உழும் எருமை மாடுகளாய் -எதிரிமுன்
மண்டியிட்ட தமிழருக்கு
வாழ நெறிகாட்டி-அவன் மாண்புதனை
நிலைநாட்ட வந்துதித்த
ஆண்டவனின் அவதார நாள் இன்நாள்...

வல்வை மண் அன்று - எம்
தொல்லை அழித்திடவென்று
நல்லான் எங்கள் நாயகனைத் தந்திட்ட
பொன்நாள் இன்று...

எங்கள்,
வலிபோக்க வந்த அருமருந்தாய்-எங்கள்
கலி நீக்க பிறந்த வேங்கை... - எமக்கு
விடியாதா எனநாம் விழிமூடிக்கிடக்க - எங்கள்
விடியலாய் ஒளிதந்த விடுதலை வேந்தின்
ஜனன நாள் இன்று.

கோடரிக்காம்புகளாய்மாறி-அன்றெம்
வீடெரித்த பேய்களையும்
கொள்ளிகொடுத்த கொடுவாள்களையும்
பாடையில் ஏற்றிட -பாசறை மேவிய
எம் தேசத்து புதல்வனின் திருநாள் இன்று.

குட்டக்குட்ட குனிந்த தமிழனை
நெட்ட நிறுத்தி...
குட்டியவன் கைகளை வெட்டியெறிந்தும்
"கொட்டி கொட்டி"என்று பகைவெட்டி ஓட-எம்
பட்டி தொட்டி எங்கும் பகல் சமைத்திட்ட
ஈழவேந்தின் இனிய நன்நாள் இன்று.....

தன்னினம் காத்திட தன்னலம் மறந்து...
மண்ணினை மீட்டிட மகிழ்வுகள் துறந்து...
விண்ணிலும் பெரிய விரிமனம் கொண்ட
விடுதலை வேங்கையின் பிறந்தநாள் இன்று.

எங்கள் இருள்போக்கி - உலகில்
நாங்கள் வாழவழிகாட்டி
எங்கும் பரந்துவாழ் தமிழரின் உரிமை நிலைநாட்டி
உலக மேடையில் அவன் பேச உரிமைதந்த
மங்களநாயகன் அவதரித்த இனியநாள் இன்று.

இனவெறி மமதையில் கொலைவெறியாடிய
ஈனரின் மமதைகள் அடக்கி
மானத்தமிழரின் மாண்புமிகு வீரத்தின்
தானைத் தலைவனாய் தனிநாடமைக்க
வேங்கையாய் குதித்த தனிப்பெரும் தலைவன்
வந்துதித்த நனிசிறந்த பொன்நாள் இன்னாள்.

தமிழரெல்லாம் "நான் தமிழன்" என்று
தலை நிமிர்ந்து சொல்லவென்று
வான்படையும் கண்ட தமிழ்ப்
பெருமறவன் பிறந்திட்ட பெருநாள் இன்று.

சிங்களவன் சினம்கொண்டு
சீறி எழ முடியாது...
பதுங்கி அவன் பாழிருட்டில்
பாய்யிட்டு ஒதுங்கிடவே - போர்
பறைசாற்றி பகைவிரட்ட பாய்ந்திட்ட
பெருவீரனின் திருநாள் இன்று.

தம்பி என்பார் சிலர் - எங்கள்
அண்ணன் என்பார் பலர்... அன்பின்
மாமா என்றே மழலையரும் - எங்கள்
மாபெரும் தலைவா என்றே உலகத் தமிழினமும்,
விழித்திடவே நீ வாழ்க வாழ்க...

பெற்றவரும் உற்றவரும்
பெருமைகொள்ளும் தமிழ்மகனாய்,
கொற்றவரும் வித்தகரும்
வியப்புறு தலைமகனாய்,
எத்திசையும் உன்பெயரை
உச்சரிக்கும் உருத்திரனே
வாழ்க நீ வாழ்க...

வாழ்கவென்று உனை வாழ்த்த - என்னை
வாழ வழிதந்த எம் தாய்மண்தந்த பெருந்தலைவா
வாழ்க நீ பல்லாண்டு வாழ்க...

- தம்பி
ஈழப்பிரியன்

CHAI Canadian Home Appraisals Inc
Canadian Home Appraisals Inc
For Residential & Commercial Appraisal
Tel :416.438.2200
S.K.BALES CRA, P.APP, MVA, FRI, CRES
Canadian Residential Appraiser
skbales@hotmail.com www.chainc.ca
RE/MAX ACE REALTY INC.
Brokerage
1286 KENNEDY ROAD UNIT 3
TORONTO, Ontario M1P2L5
416-270-1111
416-270-7000
RE/MAX ACE REALTY INC. BROKERAGE





இறையோனை பாடிய தேவார முதலிகளை நாயன்மார்களாய் படித்தோம் இன்று உன்னை தேடி பாடும் எங்கள் தேவார முதலிகளை பார்க்கிறோம்... தலைவா

நித்தமும் உன்னை கரண மனம் ஏங்குதே தலைவா இத்தனை துயர் கண்டும் உனைதேடுதே....

நந்திக்கடலே சொல்லம்மா எங்கே அதிசயம் நாங்கள் தேடும் அன்பு தலைவன் மர்ம ரகசியம்...

தலைவர் என்றொரு நம்பிக்கை மட்டுமே நெஞ்சில் இருக்கிறது அந்த நம்பிக்கையால் தான் இன்னும் உயிர் இங்கு எஞ்சி இருக்கிறது... உன்னை தேடி பாடுகிறோம் தமிழ் இறையோனே தலைவா...

- மாதுளன் கிருபா



Liberty@Kenned
Tax Office

Specialized in
DISABILITY TAX CREDIT
SELF EMPLOYED
CORPORATE TAX

Direct: 647.784.1829 Office: 416.750.0039
102-1911 Kennedy Road (Kennedy/Ellesmere)
Scarborough ON. M1P 2L9
Email: vgalibtax@yahoo.ca



PARITHI SINNATHAMBY
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
HOMELIFE HIGHER STANDARDS
Higher Standard Agents... Higher Results!
REALTOR
MLS MULTIPLE LISTING SERVICE
HomeLife Landmark Realty Inc., Brokerage (Independently Owned and Operated)
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4
Tel: 905-305-1600 Fax: 905-305-1609


இடர்தீர்க்கவென வந்த
தலைவர்கள்
பாரினிலே இடம்மாறிப்
போனகதையுண்டு
ஆனால் ஆறு
படைகொண்டு
வீறுநடை கொண்டு-எம்
விடியலுக்காய்
வந்துதித்த
தடம்மாறிப்போகாத
தானைதலைவா நீ
வாழ்க.
- மதீஸ்


RE/MAX
CROSSROADS REALTY INC.
Selvan Puvanes
Homes
LOOKING FOR
DREAM Home ?
Selvan
Puvaneswaranathan
Real Estate Broker.ABR®, SRS.
416-832-0755
REMAX CROSSROADS REALTY INC BROKERAGE 305 MILNER AVE UNIT 312 TORONTO
puvanes1@gmail.com / selvan@topremax.ca | www.gtahomerealtor.com



அன்று ஒருவன் இருந்தான்
காம பிசாசுகள் இல்லை
கள்ள தருதலைகள் இல்லை
வஞ்சக காடர்கள் இல்லை
இனமில்லை, மதமில்லை, யாதி இல்லை
பொய் இல்லை புரளி இல்லை அடிமை இல்லை
அசிங்கம் இல்லை
ஆங்கிலத்தின் ஆதிக்கமில்லை

"மனிதர்கள் மட்டும் இருந்தார்கள். "
என் அண்ணனும் நீத்தான் என் மாமனும் நீத்தான் ஏன்
என் அக்காளும் நீத்தாள் உனக்காய் உன் அடிமை இல்லா
உணர்வுக்காய் துச்சமென உயிரை
உன் பிறந்த நாளை விட உன் ஒரு சொல்லால்
மண்ணோடு விதையாகிப்போன இதயங்களின் நாளே
சிறந்தது தலைவா

- தேவ் முகுத்தன்

CAMSONICS
SECURITY SYSTEMS INC No.1 NORTH AMERICAN PROFESSIONAL SECURITY COMPANY
OUR SERVICE
• Security Cameras • Bell, Rogers (Internet) • Alarm System • Access Control
• TV Wall Mount • Port Forwarding • HDTV • Digital Sign
RAJEEV SEBARASHA 647-302-5748
905.216.8966 | 416.981.3431 | 1300 Steetes Avenue east, Unit 221, Brampton,On,L6T 1A2 | Rajeev@camsonics.com | www.camsonics.com



தேசியத் தலைவனின்
பிறந்தநாளை வாழ்த்திடுவோம்..

கரிகாலன் வந்துதித்தான்
கார்த்திகை 26, 1954ல்..
அவன்வாழ்ந்த காலத்தில்
கடலலைபோல் மேதினியில்
காவியங்கள் ஓவியங்கள்
கற்பனைகள் பொங்கியெழுந்தன..

நாட்டியங்கள் நாடகங்கள் நடனங்கள்
தெருவெல்லாம் நிறைந்தோடியது.
கவிஞர்கள் அறிஞர்கள் புலவர்கள்
தேசமெல்லாம் பரந்து வாழ்ந்தனர்..
தேன்மொழியாம் தமிழ் அந்நிய
தேசமெல்லாம் கவிபாடியது..
தமிழ் கலை பண்பாடு இலக்கியம்
காதெல்லாம் பாய்ந்தோடியது..
இத்தனைக்கும் இந்த கரிகாலன்
காரணமானான் அவன்
காவியக் கலை நாயகனானான்..
தேச விடுதலையில்?
உன் தேசத்தில் பறப்பது
தேசியக் கொடி
என்தேசத்தில் படிவது

இரத்தக் கறைகளா?
சிங்களத்தின் அடையாளம்
சிங்கமென்றால்
செந்தமிழன் அடையாளம்
பாயும் வேங்கையென்றான்..
தன் தமிழீழ கொள்கையில்
அணுவளவும் மாறாதவன்..
தமிழீழ தேயத் தலைவனை
கறைபடிந்த கயவர்களின்
கரங்கள் அழித்ததோ வென்று
கண்ணீர் விட்டு கதறியழும்
தமிழினத்தின் கண்ணீர்.
இன்று (26-11-2020) வரை ஓயவில்லை..
இன்று வரை மக்கள் தேடும்
உலகின் அதிசயத் தலைவன்
தமிழீழ தேசியத்தலைவன்
மேதகு பிரபாகரனே..தேசிய
தலைவனின் வரலாறும் ஈழத்
தமிழர்கள் வரலாறும்
வரலாற்றில் என்றும் அழியாத
வரலாற்று சுவடுகளே..
தலைமகனின் பிறந்த நாளினை வாழ்த்திப்
போற்றிப் புகழ்ந்திடுவோம் என்றுமே..

அன்புடன்
தீப்பொறியான் - கனடா

LUXSHAN KANDASAMY
NEW HOME & CONDOS EXPERT

We Specialize in Finding New Home & Condos Project that Meet Your Investment Needs. Register on our website to be informed about upcoming new projects & Receive First Platinum/ VIP Access to Price Lists.

416-888-8044

NEW RELEASE HOME.COM

NEWRELEASEHOME.COM



தேசியத்தலைவர் வாழ்க.
மாவீரன் நேதாஜியை நேசித்தவன் நீ
மாவீரன் நேதாஜி போலவே நிலைத்தாய் நீ

நீ இருக்கிறாய் என்றும் இல்லை என்றும்
நாட்டில் பட்டிமன்றங்கள் நடக்கின்றன !

நீ யானை மாதிரி ஆம் இருந்தாலும்
இறந்திருந்தாலும் மதிப்பு மிக்கவன் நீ !

நீ இன்னும் இருக்கிறாய் ! என்று
நாளும் அச்சத்தில் சாகிறான் பகைவன் !

நீ இன்னும் வாழ்கிறாய் ! என்று
நாளும் மகிழ்வில் வாழ்கிறான் தமிழன் !

சிங்கள ஆதிக்கத்தை என்றும் எதிர்த்தாய்
சிங்கள் மக்களை என்றும் எதிர்த்ததில்லை !

கடவுளை நம்பாத நாத்திகர்களும்
கனிவோடு உன்னை நம்புகின்றோம் !

புழுவாக இருந்த இலங்கைத் தமிழனை
புலியாக மாற்றிய மாவீரன் நீ !

கொட்டக் கொட்ட குனிந்தவனுக்கு
திருப்பிக் கொட்டிட கற்பித்தவன் நீ !

புறநானூற்று வீரத்தை படித்தோம்
புதிய வடிவில் ஈழத்தில் பார்த்தோம் !

எட்டு நாட்டுப் படைகளோடு வீர
எட்டு வைத்து போராடியவன் நீ !

துரோகம் உன்னை தோற்கடிக்கவில்லை
துரோகம்தான் உன்னிடம் தோற்றது !

இருக்கிறாய் என்பதற்கும் இல்லை என்பதற்கும்
இவ்வுலகில் சாட்சிகள் இல்லை இன்று !

உலகத்தமிழர்கள் உள்ளங்களில் என்றும் வாழ்கிறாய்
உலகம் முழுவதும் சாட்சிகள் உண்டு !

பகைவர்கள் துரோகிகள் மனசாட்சி இன்றும்
பயத்தோடு உன் வீரம் பாராட்டும் !

தனித்தமிழ் ஈழம் விரைவில் மலர்வது உறுதி
பிரபாகரன் தேசம் பெயர் சூட்டுவதும் உறுதி !

புரட்சியாளர்களுக்கு பிறந்த நாள் உண்டு
புனிதர்களுக்கு இறந்த நாள் இல்லை !




Selva Vettyvel
Broker Of Record
416.568.4301
Broker Of Record
HomeLife/Future
Realty Inc. Brokerage
15 years of Success
500+ Agents
Vettyvel Law

Rishani Vettyvel
416.261.1544



சேர சோழ பாண்டியர்களின் வீரம் வரலாற்றிலுள்ளது.
ஆனால், அந்த வரலாறே உன்னுருவில் மறுவரம் வாங்கி பிறந்தது...

வீர வரலாறே,
எங்கள் இனத்தின் விடியலே,
தமிழ்க்குலத்தின் அகரமே,
எதிரிகள் அஞ்சும் ஆயுதமே,
கோடனுகோடி தமிழர்களின் உயிரெழுத்தே,

உயிரே பிரபாகரா... உம்மை வாழ்த்தி மெய்சிலிர்த்து நிற்கிறேன் தலைவா...

- தாயகம் சுரேஸ்

Sunshine Florist
EVERY DESIGN IS HANDCRAFTED USING TECHNIQUES.
SUNSHINE FLORIST
Cut Flowers, Bouquets, Vase Arrangements,
Wedding Arrangements, Funeral Flowers,
Sympathy Flowers and more.
CALL NOW 905 553 0777 9441 JANE ST, UNIT 112, MAPLE ON, L6A 3H2 www.sunshineflorist.ca

தேசியத் தலைவரின் அகவை விழாவுக்கு தொடர்ந்து அனுசரணை வழங்கும் வாணிப நிறுவனங்கள்

NEW SPICELAND SUPER MARKET

NEW SPICELAND

5790 Sheppard Ave E,
Unit# 4, 5, & 6
Scarborough
(416) 292-9769

6065 Steeles E,
Unit# 13, 14, 15,16 & 17
Toronto
(416) 335-3030

1801 Harwood Ave N,
Unit# 21,22,23 & 24
Ajax
(905) 426-1114



QUALITY BREAD BAKERY -Est. 1996-

1970 Ellesmere Road
Units 12 & 13,
Scarborough,
ON. M1H 2W1

Follow us on Twitter @QBBakery



Life Insurance?
It's for those you LOVE the most!

ஆயுட்காப்புறுதி
Call: 416-704-8074

- RESP/RRSP
- Disability
- Investments for Children

Excellent Rates!

Insurance Ajay
Are you Insured?



SUN CITY SUPER MARKET
OPEN 7 DAYS 8.30AM-10.30PM

துரித பணமாற்றுச் சேவை
அனைத்து நாடுகளுக்கும் ஒரே நாள் சேவையில்

Tel: 416-724-6666
SUN CITY PLAZA, 2761 Markham Rd, Unit 18
Scarborough ON M1X 1M4

நந்தா உணவகம் NANTHA RESTAURANT

Vegan Nantha
Brimley & Steeles
Unit 2 – 4915 Steeles av E,
Scarborough
(416-NANTHA-1 Ext. 1)

Nantha Caters
Kipling & Steeles
Unit 18 – 5010 Steeles Ave W,
Etobicoke
(416-NANTHA-1 Ext. 2)

Nantha Caters
Warden & Finch
Unit 3 &4 – 3268 Finch Ave E,
Scarborough,
(416-NANTHA-1 Ext. 3)

Nantha Express
Middlefield & Steeles
Unit 2 – 2002 MiddleField Rd
Markham,
(416-NANTHA-1 Ext. 4)

Phone: (416) 626-8421 Email: nanthacatersinc@gmail.com

#1 RE/MAX

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage

Secure Your future with Commercial Investment

Commercial Real Estate Investment

Shean Sinnarajah
Real Estate Broker
Dir: 416.882.0118
1265 Morningside Ave,Suite 203, Toronto ON.M1B 3V9
Tel:416.287.2222 Fax:416.282.4488



SINDI FINANCIAL SERVICES INC.

துரித பணமாற்றுச் சேவையின் முன்னோடிகள்

★ நம்பிக்கை ★ நாணயம் ★ உத்தரவாதம்

416.288.0277

792 Kennedy Rd., Suite 204
(Eglinton & Kennedy)

Ideal Auto Tech

416 752 LUBE 5823

idealautotech.com

90 DAYS NO PAYMENT NO INTEREST NO CREDIT CHECK

TIRE SALE!

PRICE MATCH GUARANTEED ON ALL MAJOR BRAND TIRES

1815 Lawrence Ave, East, Unit 2, Scarborough

Century 21 Innovative Realty Inc. Brokerage

Office: 416-298-8383 | Fax: 416-298-8303
3-2250 Markham Rd., Toronto ON. M1B 2W4

Karan Thurainayagam
Sales Representative
Direct: 416-707-4350
karant991@yahoo.ca



தேசியத் தலைவரின் அகவை விழாவுக்கு தொடர்ந்து அனுசரணை வழங்கும் வாணிப நிறுவனங்கள்

BABU
Taste & Flavour of Thamil Eelam
Take-Out & Catering
SINCE 1991

9590 McCowan Rd, Markham, ON L3P 8M1, Canada
Phone: (416) 298-2228

4800 Sheppard Ave E, Scarborough, ON M1S 4N5, Canada
Phone: (416) 298-2228



Bad Credit? Bank Declines?
Difficult Mortgage?
Payoff Consumer- Proposals?
No Income But- Decent Equity?

FOR ALL YOUR MORTGAGE NEEDS

MORTGAGE INTELLIGENCE
Brokerage # 10428
Wimal Navaratnam
Mortgage Agent
Tel: 416 399 3449



PREM GROCERY FISH & MEAT
East - West Indian Food
இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள், அனைத்து வகையான மீன், இறைச்சி வகைகள், உடன் மரக்கறி வகைகள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
3857 Lawrence Ave. East, Scarborough, ON. M1G 1R2
Tel: 416-289-7637



REGINOS PIZZA
Reginos Pizza
ராசன்
135 Toronto road
Port Hope, Ontario. L1A 3S6
Tel: 905-885-5656
Main intersection:
Toronto road and 401

KC DENTAL
Dr. Chandra & Associates
www.kc.dental
Our Clinic is environmentally friendly:
Digital charting and radiography

Visit us at KC Dental where we can provide Dental care for you and your entire family

6065 Steeles Ave., E,
Unit E4, Scarborough ON. M1X 0A8
(Spice Land Purple Building)
416-291-0717



Dr. Chandra Dr. Sharon Dr. Hajer

941 Taunton Rd E Unit C7
Oshwa, ON, L1H 7K5
905-448-2500, 416-700-0101

J.R.B
GROUP CORPORATION
Best Rate Mortgage Arranged
Almost All Services Available
அனைவரும் விடு வாங்க
சிறப்பான சேவை...



R.R.Rajkumar B.Com (Hons) M.B.A

BUSINESS LOAN 25 K to 500,000 New Business
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள சகல வர்த்தகருக்கான சிறப்பான சேவை

Welfare, ODSP, Medical visit translation services

* Loans * Mortgages
* Insurance * Visa * Real Estate
* Credit Counseling
* Master Card
647-289-6164
416-655-5577

HOMELIFE / CHAMPIONS REALITY INC.
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
SINCE 1988

Realtors Wanted
FLEXIBLE SPLIT OR FLAT FEE



UTAYAN PONNUTHURAI
BROKER OF RECORD, Bsc (Hons)
HOMELIFE
HIGHER STANDARDS
D: 416 505 2120 B: 416 281 8090

OPTIMART
30 வருடங்களுக்கு மேலாக உங்கள் சேவையில்



கண் பரிசோதனை
EYE EXAM



ஒரு மணிநேரத்தில் கண் வைத்தியரைச் சந்தித்து உங்கள் கண்ணாடியைப் பெற்றுக்கொள்ளலாம்

உங்கள் கண்ணின் நிறங்களை மாற்றக்கூடிய விழி வில்லைகளை நியாயமான விலைக்கு பெற்றக்கொள்ளலாம்

கண் பரிசோதனை நிபுணரினால் கண் பரிசோதிக்கப்படும்
Served by Licensed Opticians
Mon - Fri: 11am - 8pm | Sat: 10am - 5pm | Sunday - 12pm - 4pm | Markhan / Eglington
தமிழ் மக்களின் நன்மை கருதி தமிழர் நிர்வாகத்தில் 3 இடங்களில் சேவையாற்றுகின்றனர்

(416) 266 - 3389
3150 Eglington Ave.E.#6
(Eglington & Markham)
Scarborough, ON. M1J 2H2

(416) 297 - 9903
3351 Markham Road
(Markham & Steeles)
Toronto, ON. M1X 0A6

(905) 428 - 3131
1901 Harwood Ave N,
Unit 29,
Ajax, ON. L1T 0K8

THEEPAN

RJ Print
RAJEE -416-524-6520



Life Insurance?
It's for those you LOVE the most!
ஆயுட்காப்புறுதி
Call: 416-704-8074
●RESP/RRSP
●Disability
●Investments for Children
Excellent Rates!
Insurance Ajay
Are you Insured?